தனிப்பிரதி விலை அணா 0—1—6.
Reg No. M. 3066 1935- டிசம்பர் 1.
PAHUTHARIVU ("REASON")
(இதழ் 8.)

பகுத்தறிவு

அறிவை வளர்க்கும் ஓர் சுதந்த மாத வெளியீடு.

பகுத்தறிவு.

பல அறிஞர்களின் அறிவியல் ஆராய்ச்சிகள், விஞ்ஞான விளக்கம், பெண்கள் முன்னேற்றம், உடற் பயிற்சி, சுகாதாரம், வைத்தியம், பாட்டுகள், நாடகங்கள், ஹாஸ்யங்கள், உலக விநோதங்கள், சிறு கதைகளும் நிறைந்து விளங்குவது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 1—0—0. வெளிநாடு ரூ. 1—8—0.
தனிப்பிரதி 0—1—6. தனிப்பிரதி 0—2—6.

சந்தாதாரர்களுக்கு

பகுத்தறிவுக்கு மே மாதமே வருட ஆரம்பமானாலும் சந்தாதாரர்கள் எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜூலை மாதம் முதலில் இருந்துதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்.

புதிதாகச் சந்தா சேருபவர்கள் சந்தாத் தொகையை முன்னதாகச் செலுத்திவிடவேண்டும்.

சந்தாதாரர் பத்திரிகை சம்பந்தமாய்க் கடிதம் எழுதும் போது சந்தா நம்பரைக் குறிப்பிடவேண்டும்.

விஷய அட்டவணை. பக்கம்.

புரோகிதக் கொடுமை, பாட்டு (சாமி. சிதம்பரனார்.) 1
புரோகித உற்பத்தி (பச்சையப்பன்) ... 3.
காலம் வரவரக் கெட்டுப் போச்சா? ... ... 7.
ஆசைவேண்டாமா? (சாமி சிதம்பரனார்) ... 23.
கடவுளும் அனுமானப் பிரமாணமும் (உடுமலை கனகராஜன்) ... 27.
கர்ப்பத்தடை அவசியம் (பௌன் பார்ட்டிங்டன்.) 35.
கர்ப்ப ஆட்சி ... ... 41.
சமய பரிபாலகர்கள் ... ... 51.
பேய் உண்டா (S. சிவப்பிரகாசம்) ... 61.

பகுத்தறிவு.

அறிவை வளர்க்கும் ஓர் மாத வெளியீடு,

அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என் உடையரேனும் இலர். (குறள்.)

மலர் 1. ஈரோடு 1935 டிசம்பர் 1. இதழ் 8.

புரோகிதக் கொடுமை.

(சாமி சிதம்பரனார்.)

1. தீய புரோகிதர் செய்யும் கொடுமைகள்
எண்ணத் தொலை யாவே;—அவை
தேர்ந்து மனத்தினிற் கொண்டவர் வஞ்சனை
தீர அழிப்போமே! (தீய)

2. மக்கள் மனத்தை மயக்கும் பல வஞ்ச
மாயம் புரிந்தாரே!—அந்த
மாய வலையினில் சிக்கிய மாந்தர்கள்
துன்பம் அடைந்தாரே! (தீய)

3. ஏழை மனிதரை ஏய்க்கும் வழிபல
செய்திங்கு வைத்தனரே!—அவை
இன்றும் உலகினில் நின்று பெருந்துயர்
மாரி பொழிந்திடுமே! (தீய)

4. சொல்லும் சடங்குகள் செய்திடின் நீர்பெருஞ்
"சொர்க்கம்" அடைந்திடுவீர்;—என்று
நல்ல மொழி சொலிச் செல்வம் பறித்தவர்
நாசம் புரிவாரே ! (தீய)

5. "ஆண்டவன்" தூதரே நாங்கள் எனப்பல
ஆசை மொழி புகல்வார்;—அவர்
ஆசை நிரம்ப வழியின்றிப் பாமர
மக்கள் நலங்கெடுப்பார் (தீய)

6. "மந்திரம்" என்றவர் சொல்லிப் பலகொடும்
காரியம் செய்திடுவார்:—அந்த
தந்திரம் தேராத மக்களுந் தம்பொருள்
தந்து தவித்திடுவார். (தீய)

7. பண்ணிய பாவங்கள் போக்கும் "பெரியவர்"
பாழும் புரோகிதரே—என்று
பாமரர் தம்மனத் தெண்ணிப் பொருள்தந்து
புத்தி இழந்தனரே ! (தீய)

8. பார மரத்தினில் புல்லுருவி வந்து
பாய்ந்து கெடுப்பதுபோல்—ஒன்று
சேரும் மனிதர் குருக்களின் சூழ்ச்சியால்
சேர்தல் ஒழிந்தனரே ! (தீய)

9. செத்துப் பிறக்கின்ற செய்கை இயல்பெனச்
சிறிதும் மனந்தேறார்;—தங்கள்
சிந்தை மயங்கிப் புரோகிதர் வஞ்சகச்
செயலில் மதியிழப்பார் (தீய)

10. கூரையில் ஏறியே கோணற் சுரைக்காய்
கொய்யும் திறமில்லார்—அவர்
வானத்தில் வைகுந்தம் காட்டு வோமெனும்
வார்த்தையும் மெய்யாமோ ? (தீய)

புரோகித உற்பத்தி.

[பச்சையப்பன்.]

கோயில்கள் என்பவற்றில் விக்கிரகங்கள் உற்பத்தியை விட புரோகிதத்வ உற்பத்தி மிகவும் முக்கியமாகும். புரோகிதனுடைய உற்பத்தி முற்கூறியதை விட அதிக சக்தியையும், மதிப்பையும், முக்கியத்தையும் கடவுளுக்குக் கொடுக்கிறது. ஏன்? தான் வழிபடும், அல்லது காப்பாற்றும் கடவுளின் மேன்மையையும் மதிப்பையும் பெருக்குவது புரோகிதனுக்குத்தான் (to the Priest) மிகவும் இன்றியமையாததாய் இருக்கிறது.

இதன் வகை இரண்டு. ஒன்று அரசனே வழிபடுவது போன்றது. (Quasi royal) தனித்தொழிற் புரோகிதம் மற்றொன்று. முன்னதைப்பற்றி கவனிப்போம். ஆப்பிரிக்க கிராமங்களில் தலைவன் இறந்தபின், அவன் குமாரனும், அவனுக்குப்பின் அந்த இடத்தை ஏற்பவனுமானவன் அவ்விறந்தானுக்குரிய நிவேதனங்களை எடுத்துச்சென்று அக்கடவுளை (இறந்தானை,) அணுகுகிறான். இக் கடவுளிடமிருந்து ஏதாவதொன்றை வேறு யாராகிலும் (இறந்தவனின் சொந்தக்காரரல்லதார்) கேட்க விரும்பினால், அக்கடவுட்களின் நெருங்கிய உறவினரும், அவைகளின் நண்பனும் அவைகளின் பழக்க வழக்கங்களை அறிந்தவனும் ஆன தலைவன் மூலமாகத்தான் கேட்டறியவேண்டும். இம்மாதிரியான தலைவர்களேதான். பொதுவாகப் புரோகிதர்களானார்கள். (priests). இவர்கள் குலத்திலமேன் மக்கள் என்று கருதப்பட்டார்கள. மற்ற சாதாரண மக்களை விட இவர்களும், இவர்களது குழந்தைகளும் அந்தக் கடவுளுக்குத் தனி உறவினர்கள் ஆகிவிடுகிறார்கள். இத்தன்மைத்தான உறவு பல தேசங்களிலும் பரவி இருக்கிறது. பிறகு காளாவட்டத்தில் இம்மாதிரியான தலைவன்தான் அரசனும் புரோகிதனுமாக ஆகிவிடுவான்.

சுருங்கக்கூறுமிடத்து, முதன்முதலில் ஒரு சிறு கூட்டத்தினரின் அல்லது குடும்பத்தின் கடவுள் என்பது இறந்துபோனவர்களான சொந்த மூதாதைகளே. இங்கு வீட்டின் தலைவன் புரோகிதனாக இருந்து சடங்குகளை நடத்துகிறான். இவன்தான் இவனது மனைவிக்கும், குழந்தைகளுக்கும், சார்ந்தவர்களுக்கும் பிரதிநிதியாக இருந்து குடும்பக்கடவுளை அணுகுகிறான். இன்றும், ஒவ்வொரு குடும்பத்தின் தலைவனும், மிக முக்கிய வீட்டுச்சடங்குகளை (The more restricted familyrites) பொருத்தமட்டிலுள்ள புரோகித கருமங்களைத்தானே வைத்துக்கொண்டிருக்கிறான். நாடு பெருகப்பெருக, தலைவர்களின் வலிமை அதிகமாக

ஆக, இந்தக்குடும்பத்தின் மூ தா தை த க ள் கடவுள்களாகிவிடுகின்றன. இதற்கு அதன் நெருங்கிய உறவினர் அதாவது உயிருடன் இருக்கும் தலைவன் பிரதிநிதியாக இருக்கிறான். இங்கனமாகப் பல வழிகளில் புரோகிதன் அரசனாகி புரோகித வேலை அரசனுடைய வேலைகளுடன் அமைக்கப்பெற்றுவிடுகிறது.

தோழர் ப்ரேஸர் (Frazer) தனது புத்தகத்தில் (The Golden Bough) குறிப்பிடுவதாவது மன்னனின பட்டமும் புரோகிதத் தொழிலும ஆதி (ancient) இதாலியிலும், கிரீசிலும் சாதாரண மாக இருந்தது. உரோமிலும் மற்றுஞ் சில இதாலி நகரங்களிலும், தெய் வீக அரசன் அல்லது தைவ கரும விறைவன்' (Rex Sacrorum or Rex Sacrificulus)என்றொரு புரோகிதனுக்குப் பெயரிருந்தது. அவனது மனைவிக்குத் 'தைவ கரும இறைவி என்று பெயர். எதேனிய ரிபப்ளிக்கிலும் இரண்டாம் நியாயாதிபதிக்கு அரசன் என்றும், அவன் மனைவிக்கு அரசி என்றும் பெயர். மேற்சொன்ன இருவரின் வேலை களும் மத சம்பந்தமானது. உரோமில் இவ்வித அரசர்களை நீக்கிவிட் டால் அதற்குப்பதிலாக ஒரு புரோகிதனை (தெய்வீக அரசனை) வைப்பா ர்கள். இவன் முன்னிருந்த அரசர்கள் செய்து வந்த (மத சம்பந்த) கரு மங்களைச் செய்வான். கிரேக்க நாட்டிலும் இம்மாதிரியான கொள்கை கள் (புரோகித அரசுத்தன்மை) நிலவியதாகக் காணப்படுகிறது. சரித்திர காலத்தில் அரசனது ஆட்சியைக் கைக்கொண்டிருந்த ஸ்பார்ட்டாவை எடுத்துக்கொள்ளுவோம். அ ங் கே எ ல் லா ந ா ட் டு ச் சடங்குகளும் (All state sacrifices) கடவுளினிடமிருந்துவந்தவர்கள் (descend ants of the god) என்ற முறையில் அரசர்களாலேயே நடத்தப் பட்டு வந்தன. டியூடானிய அரசர்கள் ஆதி ஹித்தானிய நாட்களில் இந்த நிலையில் இருந்துகொண்டுதான் பெரும்புரோகிதராக அதிகாரம் செய்து வந்தார்கள்......"

இம்மாதிரியான வழிகளில் புரோகிதத்வம் தோன்றினதினால் உலக வாழ்க்கைக்கும் (Temporal) மத வாழ்க்கைக்கும் உள்ள வித்தியாசம் தெரிவதில்லை.

இரண்டாவது வித புரோகிதத்துவம்.

இனி இரண்டாவது விதமான புரோகிதத்வத்திற்கு அதாவது தனி மனிதர்களை பூஜை முதலியன செய்ய வைக்கும் முறைக்குச் செல்வோம். இது ஆதியில் அவ்வளவு மேன்மையுற்றதாயில்லாமல் போயினும் பிற்கா லத்தில் மேலோங்குந் தன்மையைத் தன்னகத்தே கொண்டதாக இருக் கிறது.

அரசனே புரோகிதனாகவும் கடவுளின் பின் வந்தனாவகவும் இருந் தால் [பெரு, எகிப்து போல] அவனது சக்தியானது அவன் வணங்கும் கடவுளின் சக்தியை மறைத்துக் குறைத்துவிடுகிறது. ஆனால் புரோகி

தத்தைத் தனியாகப் பிரித்துவிட்டு தனி (அரசரல்லாத] புரோகிதர்கள் தெய்வ வழிபாட்டுச் சடங்குகளைத் தங்கள் கைக்குக்கொண்டு விட்டால், அவைகளின் சக்தி அரசர்களினுடையதைவிட அதிகமாக எழுவதைக்காணலாம். இந்த புரோகிதர்கள் தான் வலிமை பெற்றுப்பின் கொலையுண்ட குருக்களின் (Archi Bishops) பெருமிதமான கோயிலின் முன் த மான கோயிலின் முன் வணக்கஞ் செய்யும் பேரரசர்களும் கட்டளை பிறப்பிக்கும்போப்புகள் (கிறிஸ்தவ சங்கராச்சாரிகள் அல்லது உலக குருக்கள்) ஆவதைக்காண்கிறோம்.

ஒரு குறிப்பிட்ட தலைவனின் அல்லது வீரனின் சமாதிக்கு வேண்டிய பூஜை முதலியன செய்ய தனியே ஒருவனை அமர்த்துதல் வழக்கம். இம்மாதிரியான புரோகிதோற்பத்திக்கு எகிப்து நல்ல உதாரணங் கூறுகிறது.

பெனிஹஸன், சக்காரா என்ற இடங்களில் இருக்கும் குகைபோன்ற சாமாதிகளிலுள்ள வாசற்படிமேல்பாகத்தில் (Lintel) அதனுள் இருக்கும் மனிதனின் பெயர், பட்டம் முதலியன பொறிக்கப் பெற்றிருக்கின்றன. அது (இறந்த மனிதன்) தனது ஈமக்கடனைப்பெற்றுக்கொள்ளும் என்ற பக்தி வழியான நம்பிக்கையுண்டாகிறது. அதற்குச்செலுத்த வேண்டிய கடன்களின் (Offerings) பட்டியும் அதிலேயே எழுதப்பெற்றிருக்கும். இதில் நாம் காணவேண்டியதென்ன? புரோகிதனோ அல்லது வேலையாளோ, இம்மாதிரியான கடன்கள் சரிவர நடைபெறச் செய்ய அமர்த்தப்படுகிறான். புரோகிதனுடைய வயிற்றுப் பிழைப்பிற்காகவும், சமாதிக்குரிய படையல் முதலியனவற்றின் செலவினுக்காகவும் சொத்துக்கள் ஒதுக்கப்படுகின்றன. இந்த புரோகிதர்கள் வம்ச பரம்பரையாக அவ்வேலையை மேற்கொள்ளுகின்றனர். இதனால் அச்சடங்குகள் நிற்காமல் நடைபெற வழியுண்டாகிறது. ஆகவே பழைய அரசாட்சியில் இறந்த ஒருவன் 18 வது 19-வது அரச பரம்பரையிலும் தனது ஈமக்கடனை (ஆனால் கடவுள் என்ற பெயரால்) பெறுகிறான்.

மேற்சொன்ன உருசிகரமான குறிப்பு நன்றாய் அறிந்து கொள்ளக் கூடியதொன்றாக இருப்பதால் குறிப்பிடப்பட்டது. இத்தகைய உற்பத்தி எல்லா இடங்களிலும் சிறிய அளவிலாவது பரவியிருக்கிறது. இப்படி கோயில் பூஜைக்காக முதன் முதலில் அமர்த்தப்பெற்ற ஆட்கள் (Attendants) பின்னர் கோயிலில் வசிப்பவனும் கண்ணால் காண முடியாதவனும் ஆன ஒருவனின் (ஒருகடவுளின்) நடையுடைவழக்கத்தையறிந்த புரோகிதனாகி விடுகிறான். கொஞ்சங் கொஞ்சமாக சடங்குகள் அதிகரிக்கின்றன. வழக்கமும் ஆசாரமும் சீர்திருத்தம் பெறுகின்றன. தேவ ஐதிகத்திற்கு (Divine Traditions ஓர் சேமக் களஞ்சியமாகப் புரோகிதன் ஆகிவிடுகிறான். இவனுக்கு மட்டுந்தான் எப்படி கடவுளை அணுகுவது என்பது தெரியும். கடவுளின் கோபத்திற்கும் மகிழ்ச்சிக்கு முரியமறைமுகக்குறிகள், அவனுக்கு (புரோகிதனுக்கு) . மட்டுச்

தான் தெரியும். கடவுளுக்கும் அதை வணங்குபவனுக்கும் தரகர் (Intermediaries) என்றமுறையில் அவர்கள் (புரோகிதர்கள்) பாதி தெய்வீகவான்களாகிறார்கள் (இதனால் தான் நாம் அவர்களை இரு பிறப்பாளர்கள் என்றுகூறுகிறோம் !.)

இந்த புரோகிதர்களில் வழிபடுவோன் (Votary) தன் நாயகனை நியாயமாக நெருங்க முடியாது. இதனால் தான் அவர்கள் ஆதியில் உண்டான காரணத்தை விட அதிக முக்கிய நிலைமைக்கு வந்தார்கள். புரோகிதம் இந்த நிலைமையில் தான் நடைமுறைக்கு வந்தது. கடவுளையும் அது வாழும் கோயிலையும் மதிப்பில் அதிகரித்துக்கொண்டே தங்கள் உத்தியோகத்தினதும், சடங்குகளினதும் ஆன மதிப்பையும் உயர்த்திக்கொண்டு செல்லுகிறார்கள் புரோகிதர்கள். (இந்தத்தொழிலைக் கைபிடித்து வந்தவர்கள்தான் இந்துமதத்தில் மலிந்து கிடக்கும் புரோகிதர்களும் குருக்களும் என்றால் அது மிகையாகாதென்பது கண்கூடு.)

புரோகிதத்வம் தோன்றியதற்கு மற்றொரு காரணமும் சுருக்கமாகக் கூறலாம். ஆதி எகிப்தில் புரோகிதர்கள்தான் கல்வி கற்ற வகுப்பினர். மத்திய கால ஐரோப்பாவிலும் புரோகிதர்கள் தான் படித்த வகுப்பினராய் இருந்தனர். இவர்கள் படம் எழுதுதலும் அதற்குரிய குறியீடுகளை அமைத்தலும் ஆன எழுச்சிக்குக்காரணமாயிருந்தனர். சில தெய்வீக இரகசியங்கள் என்பவை புரோகிதர்களுக்கு மட்டுந்தான் தெரிந்திருந்தது. இவைகளை எழுதிச் சொந்த சொத்தாக புரோகிதர்கள் வைத்துக்கொள்ளுகின்றனர். இவ்வாறு மத சம்பந்தத்திற்கும் உலக சம்பந்தத்திற்குமுள்ள நூல்களில் வித்தியாசங்கள் ஏற்பட்டவுடன் புரோகிதத்திற்கும் இலௌகிகத்திற்குமுள்ள இடைவெளி அதிகரிக்கின்றது. சாதாரண மனிதர்களுக்குக் காட்டக்கூடாதென்று சொல்லி, அவ்வறிவின் சாவியைத் தங்களுடைய சொந்த சொத்தாக்கிக்கொண்டனர் வேத புத்தகங்கள் (மறைகள்) இதே நிலைமையிற் தான் இருக்கின்றன. (அதாவது புரோகிதர்கள் தவிர்த்த மற்றவர்கள் படிக்கக்கூடாத நிலைமையில் இருக்கின்றன இதன் காப்பாளர்களும் பிரதிநிதிகளும் (exponents) புரோகிதர்)களே. இங்ஙனமே கோயில்களின் சித்திர வேலைப்பாடுகள் அதிகரிக்க அதிகரிக்க, உருவத்தின் செலவும் செருக்கும் அதிகமாக ஆக புரோகிதத்தை ஆடையும் தனிமுறையினையுடையதாகிவிட்டது.

இந்தியர்கள் ஆத்மீகப்பற்றுடையவர்கள் என்று நாமெல்லாம் பெருமை பாராட்டிக்கொள்ளுகிறோம். தற்காலத்தில் மாதர்களை நாம் நடத்துமுறை மாறாதிருக்கும்வரை நாம் ஆத்மீகப் பற்றுடையவர்கள் ஆகவே மாட்டோம்.

லோககுரு, கிருஷ்ணமூர்த்தி.

காலம் வரவரக் கெட்டுப் போச்சா?

யாரோ பெரியவர்கள் எப்போதோ சொல்லிவிட்டுப் போனதாகச் சொல்லப்படும் சில வார்த்தைகள் பல பேர் வாய்மூலம் பராட்காஸ்ட் (Broad cast) செய்யப்பட்டுவருவதால், பழமொழிகளாகிப்பாமர ஜனங்களால்யோசனையின்றி ஒப்புக்கொள்ளப்பட்டு வருகின்றன. மூடப்பழக்கங்களிலிருந்துபாமர மக்களைவிடுவிக்கச்செய்யப்படும்முன்னேற்ற முயற்சிகளுக்கெல்லாம் முட்டுக்கட்டையாகஇருக்கும்பழமைப்பித்தர்களுக்கும், தன் அறிவைக்கொண்டு ஆராய்ந்து பார்க்கும் மனமுயற்சியைவிரும்பாத சோம்பேறி மைனர்களுக்கும், இப்'பழமொழி'களும், 'பெரியோர் வாக்கு'களும், "வெகுஜனவாக்கியங்களும்" சிறந்த 'வாய்பாணங்'களாகஉதவுகின்றன. எந்த ஒரு காப்பிக்கடையிலோ, அல்லது படித்தவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் கூடிக்களிக்கிற கிளப்புகளிலோ, கொஞ்சம் கவனித்து கேட்போமானால், அங்கே நடக்கிற சம்பாஷணைகளிலிருந்தும், அப்போது சரமாரியாக வழங்கப்படுகிற பழமொழிகளிலிருந்தும் மேற்படி பழமொழிகள் எவ்வளவு அபத்தமானவை யென்பதும், அவற்றை யோசனையின்றிப்பிதற்றும் 'பெரிய தம்பி'களின் முட்டாள் தனம் எவ்வளவு பரிதபிக்கத்தக்கது என்பதும் விளங்காமல் போகாது.

கலியின் மகத்துவம்.

சர்வசாதாரணமாக எல்லாராலும் எல்லாச்சந்தர்ப்பத்திலும் சொல்லப்படுகிற வார்த்தைகள் "காலம் வரவரக் கெட்டுப்போச்சு" எல்லாங்கலிகாலக்கொடுமை" என்பவைகளாம். கலியின் தலையில் சுமத்தப்படுகிற பொறுப்பு கொஞ்ச நஞ்சமல்ல !

பார்வைக்குறைவை நிவர்த்தி செய்து கொள்ள மூக்குக் கண்ணாடி போட்டுக்கொண்ட பேரப்பிள்ளையைப்பார்த்து "நான் கண்டதில்லை இந்தவயசிலே கண்ணாடி போட்டதே எல்லாங்கலிகாலம் !"என்கிறாள் பாட்டி.

மகனுடன் பேசிக்கொண்டிருக்கிற மருமகளைப்பார்த்து, "என்ன கூத்தாயிருக்கு பெண்டாட்டியை யோசனை கேக்கற காலமாயிருக்குது. காலம் சுத்தமாக்கெட்டுப் போச்சு !" என்கிறாள் மாமியார்.

பள்ளிக்கூடம் போகிற வாத்தியாரம்மாள் குடை பிடித்துக்கொண்டு போவதைக்கண்டு ஆச்சரியமடைந்து, "என்ன கலிகாலமாயிருக்குது. பொம்பளைகுடைப்பிடிக்கிறா" என்று சொல்லுகிறான் பட்டிக்காட்டுப் பெரியதம்பி.

சைகிளில் சவாரி செய்துகொண்டுபோகிறஒரு பெண்ணைப் பார்த்து "காலம் கலிகாலம்! பொட்டச்சியெல்லாம் சைகிள் விடறபோது மழை யெப்படிப் பேயும்?" என்கிறான் கடைவீதி கருப்பணன்.

ஆதிதிராவிடர் ஒருவர் தாசில்தாராக வந்திருப்பதாகக் கேள்விப் பட்டு, "காலம் கலிகாலமல்லவா? தாசில்தாரனா, கலெக்டராகக்கூட வருவான் பறையன்" என்று பெருமூச்சு விடுகிறான் அக்கிரார சுப்பய்யன்.

இவ்வாறே இன்னும் அநேக சந்தப்பங்களிலும், கலிகாலத்தின் சக்தியைப்பற்றிப் பேசப்படுவது வழக்கமாயிருக்கிறது. மாமூலுக்கு விரோதமாக என்ன நடந்தாலும், என்ன ஏற்பட்டாலும் அவற்றையெல்லாம் கலிகால விபரீதக் கணக்கில் பதிந்து, எளிதாக இழிவுபடுத்தி விடலாமென்று நம்பியிருக்கிறான் பழமைப் பித்தன். பழமையின் கொடுமையை அறிந்தும், "நடக்கிறபடி நடக்கட்டும் நமக்கென்ன போகிறது" என்கிற சோம்பேறியும் மாறுதலின் இயற்கைத் தன்மையையும், அவசியதையையும், நியாயத்தையும், புதுமையின் பெருமையையும், நன்மையையும், அறிந்தும், சுயநலங் காரணமாக, ஒப்புக்கொள்ள இஷ்டமில்லாத சுகஜீவனக்காரனும், பழமைப் பித்தனுடன் சேர்ந்துகொண்டு "இந்நாளிற் கலிபுருடன் இயற்றுவதெல்லாங் கொடுமை, ஆகையால் இருந்தபடியிருப்போம்" என்று கூச்சல் போடுகிறார்கள்.

"இயற்கையில் எதுவும் இருந்தபடி இருக்கமுடியாது. மாறுதல் இயற்கையின் நியதி. இயற்கைக்கு மாறாக இருந்தபடி இருக்க முயற்சிப்பது முட்டாள்தனம்" என்று மறுசதுச் சொன்னால், "இருந்தபடி இருக்க முடியாவிட்டால் பின்னுக்குப்போ முன்னுக்குப்போகாதே! முன்னோர்கள் எப்படியிருந்தார்கள்? எப்படி நடந்தார்கள்? பெரியவர்கள் என்ன சொன்னார்கள்? அதன்படி நட. பழய நிலைக்குப் போவது தான் முன்னேற்றம்" என்று காந்தியார் முதல் எல்லாரும் திருப்பிச் சொல்லுகிறார்கள்.

பின் நோக்கிய முன்னேற்றம்.

பின்னால் திரும்பி முன்னால்போக முயற்சிக்கிற பெரியார்களின் கொள்கைப்படி, ஆதிதிராவிடன் வீரபாகு செய்தபடி சுடலையைக் காத்துச் சோற்றுக்குப் பதில் செத்த பிராணிகளைத் தின்ன வேண்டும். பெண்கள், "கல் என்றாலுங் கணவன், புல் என்றாலும் புருஷன்" என்கிற பெரியவர் வாக்கின்படி குஷ்டரோகியான புருஷனைக் கூத்தியாள் வீட்டிற்குக் கூடையில் சுமந்துகொண்டு போய்ப் பதிவிரதைப்பட்டம் பெறவேண்டும். 'தாயாரைக்கொன்றுவிட்டுவா' என்று சொன்ன தந்தைசொல் மிக்க மந்திரமில்லை யென்று அந்த க்ஷணமே தாயார் தலையை வெட்டித் தகப்பன் பாதங்களில் வணங்கவேண்டும் தனயன். "அரசகுமாரர்களை விட அதிகங் கற்றுக்கொண்டாய். ஆகையால் வேடன் மகனாகிய நீ அவ்வித்தையை உபயோகிக்க முடியாதபடி உன்

பெருவிரலைத் துண்டித்து விடு" என்று குரு உத்தரவிட்டால் அதைச் சிரமேற்கொண்டு அந்த நிமிஷமே தன் கட்டை விரலை அரிந்து கொடுக்கவேண்டும் சிஷ்யன். இம்மாதிரியே அரசனுக்குக் குடிகள் அடிமைகளாகவும், ஆண்களுக்குப் பெண்கள் அடிமைகளாகவும், பெற்றோருக்குப் பிள்ளைகள் அடிமைகளாகவும், மேல் ஜாதிக்காரனுக்குக் கீழ்ஜாதிக்காரன் அடிமையாகவும், இருப்பதுதான் 'பொற்காலம்' என்று சொல்லப்படுகிற பழய காலச் சிறப்பாகும். இதற்கு மாறாக, 'நாகரீகம்' 'சுதந்தரம்' 'விடுதலை' என்ற கொள்கைகள் எல்லாம், 'கலிகாலம்' என்று சொல்லப்படுகிற தற்கால 'விபரீதங்கள்—கொடுமைகள்' என்றும் சொல்லப்படுகிறது. "காலம் வர வரக் கெட்டுப்போச்சு" என்கிற இந்தப் பேச்சில் ஏதாவது உண்மையோ, நியாயமோ, எள்ளளவாவது இருக்கிறதா? இருக்க முடியுமா? என்பதைச் சிறிது ஆராய்வோம்.

புராண ஞானம்.

கலியுகம் என்கிற தற்காலம் ஆரம்பித்து 5037 வருஷங்களாகிறதாகப் பஞ்சாங்கம் சொல்லுகிறது. அதற்கு முன் பல ஆயிர வருஷங்கள் 'துவாபரயுகம்' என்றும் அதற்கு முன் அநேக ஆயிர வருஷங்கள் 'திரேதாகம்' என்றும் அதற்கு முன் அநேக ஆயிர வருஷங்கள் 'கிரேதாயுகம்' என்றும் கணக்குச் சொல்லி ஆதியுகத்தில் மனிதர்கள் எல்லாரும் தேவர்களாகவும், சிறந்த அறிவாளிகளாகவும், பராக்கிரமசாலிகளாகவும் இருந்தார்கள் என்றும், பின்னால் வரவர, மற்றயுகங்களில், அந்த முதல் யுக மக்களின் சந்ததியார்கள், தங்கள் முன்னோர்களின் நிலையிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாய்க் கீழிறங்கித் தற்போதுள்ள இழிந்த நிலைக்கு வந்திருப்பதாகவும், கலிமுற்ற முற்ற இன்னும் மிகக்கீழான நிலைக்குப் போவார்கள் என்றும் இந்து சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தச் சித்தாந்தத்தின் உண்மையை ருசுப்படுத்துவதற்குச்சில உதாரணங்கள், நிதர்சனமாகவும், வஸ்துபூர்வகமானதுபோலவும் சொல்லப்படுகின்றன.

"இதோ இந்த மலையைப்பார். தனிப்பட்ட இக் குன்று எப்படி வந்தது என்று நினைக்கிறாய்? வாயு புத்திரனாகிய ஹனுமார், வடக்கேயிருந்து சஞ்சீவி மலையை அப்படியே எடுத்துக்கொண்டு ஆகாயமார்க்கமாய் வரும்போது போகும் வேகத்தினால், பொடிந்து விழுந்த சிறு துண்டுகள். சிறுசிறு மலைகளாக இருக்கின்றன, அதில் ஒன்று இது."

"இதோ இந்த வெள்ளை மலையைப்பார். இது ஏன் முழுதும் சுண்ணாம்பாக விருக்கிறதென்று நினைக்கிறாய்?! சொல்லுகிறேன் கேள். இராவணன் சீதையைத் தூக்கிக்கொண்டு, ஆகாயமார்க்கமாய்ப் போனானல்லவா? அப்போது ஜடாயு என்ற பக்ஷிராஜன், இராவணனைத்தடுத்ததற்காக, அவன் வாளையுருவிச் சிறகுகளை வெட்டிக்கீழே வீழ்த்தினான். அந்த ஜடாயு விழுந்திறந்த இடம் இது! அதன் உடம்புதான் இந்தமலை; எலும்பின் முக்கிய தாதுப் பொருள் சுண்ணாம்பு என்பதை வெள்ளைக்காரனும் ஒப்புக் கொள்கிறானே! இனியாவது நம்பு"

"இதோ! இந்த ஆற்றின் நடுவிலே பெரிய பந்து போன்ற இச் சிறு குன்று எப்படிவந்ததென்று நினைக்கிறாய்? பாண்டவர் வனவாசஞ் செய்தபோது இங்கே தங்கியிருந்தார்கள். அவர்கள் மனைவி, துரோபதியம்மன் இவ்வாற்றில் தான் குளித்தாள் குளிக்கும் போது மஞ்சளை உருட்டிவைத்துப் பூசிக் கொள்வதற்கு முன், வெள்ளம் வர, அப்படியே மஞ்சள் உருண்டையை விட்டுவந்து விட்டாள். அது தான் இக்கல் உருண்டை."

"இதோ இந்த வானரத்தின் முகத்தைப் பார். வெந்து கரிந்து போனது போல, ரோமம் முளைக்காமல் ஏன் இருக்கிறது? வானரங்களின் முன்னோனாகிய அனுமார் குழந்தையாயிருக்கும் போது சூரியனைப் பழமென்று தாவிப்பிடித்துக் கடித்தது. அதனால் அதன் முகத்தில் இருந்த மயிரெல்லாங் கருகி வெந்து போயிற்று. அதிலிருந்து வானரங்களின் முகங்களில் அந்த அடையாளம் இருந்து வருகிறது."

என்று இதுபோல இன்னும் பல உதாரணங்களைக் காரண காரியப்பொருத்தங் கொண்டது போலச் சரமாரியாகச் சாஸ்திரக்காரன் சொல்லும்போது ஆறடி மனிதன் கேட்டு ஆச்சரியமும், பயமுங்கொள்ளுகிறான். முன் காலத்தில் மனிதர்கள் மலையைச் செண்டுகளாக எடுத்து விளையாடவும், பனை மரத்தைப் பிடுங்கிப் பல்லேய்க்கவும், கடலைக் குடிக்கவும் சூரியனைப் பிடிக்கக் கூடிய அவ்வளவு சக்தியும், அதற்கேற்ற உடல் அமைப்பும் பெற்றிருந்தார்கள் என்று ஒப்புக்கொண்ட பின் இப்போதுள்ளவர்கள் சாதாரணமாய் ஆறடிக்கு மேல் வளராமல், எவ்வளவோ குறைந்த சக்தியுடையவர்களாக இருப்பதிலிருந்து, இந்த மாறுதல், கலி காலத்தின் விபரீதமென்று ஒப்புக்கொள்ள வேண்டியவனாகின்றான்.

அப்போது, நமது வைதீக தேசாபிமானிகள்

"பாருங்கள் சகோதர சகோதரிகளே! நம்முடைய முன்னோர்கள் பெருமையென்ன! திறமையென்ன! தற்காலம் நாமிருக்கும் நிலைமை யென்ன! என்ன தாழ்ச்சி! என்ன வீழ்ச்சி! இந்தக் கேவலத்திற்கு நாம் ஏன் வந்தோம்? நாகரீகம் என்கிற வலையில்சிக்கி, நம்முடைய பழய வழக்கங்களையும், கொள்கைகளையும் கைவிட்டதனால் அல்லவா? நாம் மறுபடியும் உயர் நிலையை அடையவேண்டுமானால் என்ன செய்யவேண்டும்? நமது முன்னோர்கள் கூறிய வாழ்க்கை முறையைப் பின்பற்றவேண்டும். நாகரீக மோகத்திலிருந்து விடுபட்டு எளிய பழய வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டும். மகாத்மா காந்தியைப் பாருங்கள்! அதர்மம் தலையெடுத்து சற்ஜனர்கள் துன்பப்படுகிற இந்தக் காலத்தில், நம்மெல்லோரையும் நல் வழியில் நடத்தி நம்மையும் நமது நாட்டையும் பரிசுத்தப்படுத்தத் தோன்றிய அவதார புருஷர் என்பதில் என்ன சந்தேகம்? ஆகையால் அவரையும் அவரது சீடர்களையும் பின்பற்றுங்கள்"

என்று இதோபதேசம் செய்கின்றனர்.

மற்றும் "பழயகாலம் மிகவும் மேலானது. காமதேனுவும் கற்பக விருக்ஷமும், மக்களுக்கு வேண்டியதைக் கொடுத்து உலகில் பசி, தாகம் இல்லாமற் செய்தது. மனிதர்களும் மிகுந்த பலசாலிகளாக நோயின்றி நூறு வருஷத்திற்கு மேல் வாழ்ந்தார்கள். பின்னால் வர வரக் காலம் கெட்டுப்போனது. இன்னும் வர வர ரொம்பக் கெட்டுப்போகும்" என்ற முடிவுக்கே நம்முடைய சாஸ்திரங்களும் நம்முடையபெரியோர்களும்வந்திருக்கின்றனர். காலத்தைப்பற்றியும், உலகத்தைப்பற்றியும் நம்முடைய ஆராய்ச்சி யெல்லாம் மேற்படி கொள்கைக்குச்சாதகமாகப் புராணங்களையும், பழங்கதைகளையும் வியாக்கியானஞ்செய்வதோடு நின்றுவிட்டது. பாமர மக்களுக்கு ஆராய்ந்து பார்க்கும் பழக்கமே இல்லை. கைக்கெடியாரம் முதல் மோட்டார், ரயில் என்ஜின், ஆகாயவிமானம், ஆகாயவசனி முதலிய எல்லாம் காலத்திற்கேற்பக்கடவுளால் சிருஷ்டிக்கப் படுபவை யென்று நம்பி வருபவர் அநேகர். "நாகரீக படுகுழியில் நம்மைத் தள்ளுவதற்காகச் சைத்தானால் சிருஷ்டிக்கப்படுபவை இவை" யென்று நம்மில் சில விவேகிகள் இன்றும் சொல்லுகிறார்கள். "இவைகள் என்ன பிரமாதம்?! நம்முடைய பெரியோர்களுக்குத் தெரியாமலிருந்ததா? ஞானதிருஷ்டி யென்ன, திரிலோக சஞ்சாரமென்ன, அசரீரி சொல்வதென்ன, ஆகாய விமானங்கள் என்ன, இவைகளைப்பற்றியெல்லாம் நம்முடைய புராணங்களில் சொல்லப்படவில்லையா? இவற்றால் மனிதனுக்கு என்ன நன்மை என்று நினைத்து ஆன்ம ஞானத்தை வளர்க்க முயன்றனர்" என்று விஞ்ஞானத்தையும் உலக சுகத்தையும் இழிவுபடுத்தி ஆன்ம ஞானத்தையும் பரலோக சுகத்தையும் பிரமாதப்படுத்திச் சொல்லுகிறவர்கள் சிலர்.

ஆனால்

கலிகாலத்தைப்பற்றியும்பழங் காலத்தைப்பற்றியும், உலகத்தைப்பற்றியும், பழமையில் வெறுப்பும் புதுமையால் விருப்பும இல்லாது, பகுத்தறிவுகொண்டு ஆராய்ச்சிப் புத்தியுடன் உண்மைகாண முயற்சிக்கும் அறிவியக்க வாதிகள் கூறுவதை இனி கவனிப்போம்.

II.

முதலாவதாக, மனிதனின் பிறப்பிடமும், இருப்பிடமும் இறப்பிடமும் ஆகிய இந்தப் பூமியைப்பற்றியும அதன் பிறப்பு வளர்ப்பு, அதன் வயது, அதன பிற்கால நிலை, உயிர்களின் சிருஷ்டி வரலாறு, மனிதன் தோற்றம், வளர்ச்சி, மனிதன் பிற்கால நிலை இவற்றைப் பற்றியும், வான சாஸ்திரம், (Astronomy) இரசாயன சாஸ்திரம், (Chemistry) பூதத்துவ சாஸ்திரம், (Geology) ஜீவ தத்துவ சாஸ்திரம், (Biology) மனித தத்துவ சாஸ்திரம், (Anthropology)

மனித வர்க்க சாஸ்திரம், (Ethnology) தேக தத்துவ சாஸ்திரம், (Physiology) தாவர சாஸ்திரம், (Botany) பிராணி சாஸ்திரம் (Zoology) முதலான கலைகளைக்கொண்டு விஞ்ஞானிகள் (பெரும்பாலும் மேற்கத்திய மிலேச்சர்கள்) என்ன சொல்லுகிறார்கள் என்பதைக் கவனிப்போம்.

பூமியின் பிறப்பு.

எல்லையற்ற வான வெளியிலே, நாம் காண்கிற சூரியன், சந்திரன், நாம் வசிக்கும் பூமி, இந்தப் பூமியைப் போன்ற மற்ற கிரகங்கள் எல்லாம், இப்போது சுழன்று வருகிற இடம் முழுதும் அநேக கோடி வருஷங்களுக்கு முன்னால் அளவிட முடியாத அவ்வளவு உஷ்ணம் பொருந்திய மெல்லிய காற்று நிறைந்திருந்தது. அக் காற்றுக்கோளம் பம்பரம்போல் சதா சுழன்றுகொண்டிருந்ததால், கொஞ்ச கொஞ்சம் கொஞ்ச மாகச் சூட்டை இழந்தது வந்ததோடு, அளவிலும் சுருங்கி வந்தது. அளவிற் சுருங்கவும், அதற்குத் தக்கபடி சுழற்சி யின் வேகம் அதிகப்பட்டது. வேகம் மிகுதிப்படவே, உருண் டையின் சுழற்சிக்கு ஆதாரமான இரண்டு கோடிகளிலும் சிறிது தட்டையாகவும், மத்திய வயிற்றுப் பிரதேசத்தில் சிறிது விரிவடையவும் ஆரம்பித்தது. பொருளுக்கியல்பா யுள்ள ஆகர்ஷண சக்தியின்படி உருண்டையானது தன் மய் யத்தை நாட்டி இறுகவும், 'நடுவிற் பிரியும் சக்தி'யினால் (Centrifugal force) மத்திய பிரதேசத்தில் அகன்று விரிய வும் ஏற்பட்டது இவ்விரண்டு சக்திகளில் ஆகர்ஷண சக்தி அதிக பலமுள்ளது. கனமும் நெருக்கமும் கொண்ட காற் றுக்கள் ஆகர்ஷண சக்தியால் இழுக்கப்பட்டு உருண்டை இறுக இறுக, உருண்டையின் மத்திய ரேகையைச் சுற்றி, ஒன்றின்மேல் ஒன்றாகப் பல காற்று வளையங்கள் ஏற்பட்டன. இவ்வாறு ஏற்பட்ட காற்று வளையங்களில் உள்ள கனமான காற்று மெல்லிய காற்றுக்களை ஆகர்ஷண சக்தியால் இழுத் துக்கொண்டு சுழற்சியின் வேகத்தால் உருண்டையாகி, இறுகி, தாய் உருண்டையைப் போலத்தானும் தன் வடமுனை தென் முனைகளைப் பற்றி அச்சு Axis) ஏற்படுத்திக்கொண்டு சுழல வாரம்பித்தது. முன் வளையங்கிடந்த பாதையில், சுழன்று கொண்டே தாயுருண்டையைச் சுற்றி ஓடிவரத் தொடங்கியது. இரண்டுவித அசைவுகளுடன், இன்னும் காற்று வடிவிலேயே உள்ள இந்தச் சிறிய உருண்டை, மேற்கூறிய ஆகர்ஷண சக்தி சென்ட்ரிபியூகல சக்திகளின் இயக்கத்தினால் தானும் ஒரு

வளையத்தைப் பெற்றது. இவ்வளையத்திலிருந்து அதிலுஞ் சிறிய குட்டியுருண்டை தோன்றி அதுவும் சுழற்சி நிலையில் தன் தாயுருண்டையை சுற்றிவரலாயிற்று; மேலே சொன்ன மூன்று உருண்டைகளில் முதலில் சொல்லிய பெரிய உருண்டை தான் சூரியன். அதிலிருந்து பிரிந்து தோன்றியது பூமி, அதி லிருந்து (பூமியிலிருந்து) பிரிந்தது சந்திரன்.

சூரியகோளத்திலிருந்து விடுபட்ட காற்று வளையங்கள் பலவற்றில் பூமி தோன்றிய வளையம் மூன்றாவது வளையமா கும். சூரியனுக்கு அடுத்து நின்ற வளையத்தில் புதனும் (Mucrcury) அதற்கடுத்த வளையத்தில் வெள்ளியும் (Vunus) அதற்கடுத்து, பூமியும் (Earth) அதற்கடுத்து, செவ்வாய் (Mars) அப்புறம், வியாழன் (Jupitr) அதன் மேல் சனி (Saturn) அப்புறம் உரானஸ் (Uranus) அப்புறம் நெப்தி யூன் (Neptune) ஆக எட்டு வளையங்களில் 8 உருண்டைகள் ஏற்பட்டு எல்லாம் சூரியனைச் சுற்றி வட்ட மிட்டுக் கொண்டு சுழன்று வருகின்றன. செவ்வாய்க்கும் வியாழனுக்கும் இடை யில் அஸ்டிராய்ட்ஸ் 'The Asteroids என்று 500க்கு மேற் பட்ட சிறு உருண்டைகள் சேர்ந்த ஒரு தொகுதியும் இருக்கி றது. இந்தத் தொகுதியில் உள்ள சிறு உருண்டைகள் ஒரு பெரிய உருண்டையின் சிதைவுகள் என்று கருதப்படுகிறது. பூமி உருண்டை ஏற்பட்ட முறைப்படியே மற்ற கிரகங்களும் அதே சமயத்திற் தோன்றின. பூமிக்குப்போலவே மற்ற கிரகங்களுக்கும் சந்திர உருண்டைகள் உண்டு. இவைகள் எல்லாம் சேர்ந்த இடம் சூரியமண்டலம் என்பது.

சூரிய உருண்டையின் குறுக்களவு 8 லட்சத்து 65 ஆயி ரம் மைல். சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் 9 கோடி 30 லட்சம் மைல். நமது பூமியின் குறுக்களவு தென் வடலாக 7926 மைல். 1041 கஜம். கிழமேலாக 7899 மைல் 1023 கஜம சந்திர உருண்டையின் குறுக்களவு 2160 மைல். பூமிக்கும் சந் திரனுக்கும் உள்ள தூரம் 2 லட்சத்து 38 ஆயிரம் மைல். சந் திரன் பூமியை ஒரு முறை சுற்றிவர, 29 நாள் 12 மணி 44 நிமிஷங்கள் பிடிக்கிறது. பூமி சூரியனை ஒருமுறை சுற்றிவர, 365 நாள் 5 மணி 49 நிமிஷம் 12 சகிண்ட் பிடிக்கிறது.

இவ்வாறு, திட்ட வட்டமான கணக்குகளுடம், தூரதிரு ஷ்டிக்கண்ணாடி கொண்டு பிடித்த புகைப்படங்களுடனும், வான வெளியில் பூமியின் தோற்றத்தையும், அதன் இயக்கத் தையும்பற்றிச்சொல்லுவதுவானசாஸ்திரம். பூமியையும், சந்தி

ரனையும், சூரியனையும் சேர்த்துக்கிரகங்களாக்கி அவைக ளுக்கு வீடு, ஜாதி, முதலியன கற்பித்துச் சோதிடத்திற்குத் துணையாக உள்ள நம்மவர்களுடைய வானசாஸ்திரம் வேறு.

அணுவும் அதன் ஆராய்ச்சியும்.

அகண்டிதமான வான வெளியைப்பற்றியும், அதிலுள்ள பிரம்மாண்டமான சூரியன் பலத்தைப்பற்றியும், அதிலுள்ள புதன், வெள்ளி, பூமி, செவ்வாய் முதலிய கிரக மண்டலங்க ளைப்பற்றியும் வான சாஸ்திரிகள் ஆராய்ந்து வருவதுபோல உலகத்தில் உள்ள பல்வேறு தாது பொருள்களின் தன்மை அவற்றின் சேர்க்கை, அவற்றின் பகுதிகள் முதலியவற்றைப் பற்றிய ஆராய்ச்சியை இரசாயன சாஸ்திரிகள் ஆராய்ந்து வரு கின்றனர். உலகத்திலுள்ள தனிப்பொருள்கள் (Elements) 92-என்றும், இதர பொருள்கள் அனைத்தும் இவ்வற்றின் பலவகைப்பட்ட கலவைத் தோற்றம் என்றும், தனிப்பட்ட 92-மூலப் பொருள்களின் வேற்றுமையானது, அவற்றின் அணுச்செறிவின் தன்மையால் ஏற்படுவதேயன்றி எல்லா மூலப்பொருள்களின் அணுக்களும் ஒரே தன்மையுடையன வென்றும், அணுவின் கருப்பொருள் (நியூக்ளியஸ்) இன்ன தன்மையென்றும் அதைச் சுற்றியுள்ள, எலக்ட்ரான், ப்ரோட் டான், நியூட்ரான் சக்திகளைப்பற்றியும் பேரண்டத்தில் நிகழ்வதை வான சாஸ்திரம் கூறுவதுபோல பேரண்டத்தின் பிண்டத்தின் பிண்டமான அணுவின் நிகழ்ச்சியை விஞ்ஞா னத்தின் வேறோர் கலையான ரசாயன சாஸ்திரம் மிகவும் நுட்பமான, விந்தையான ஆராய்ச்சியை செய்து வருகிறது.

பூமியின் வளர்ச்சி.

மிகவும் உஷ்ணம் பொருந்திய காற்றுக்கோளமாயிருந்த பூமி சிறிது சிறிதாகக் குளிர்ந்து, திரவ நிலைபெற்று, உருகிய உருண்டையாக மாறியது. பின்புஉருகிய உருண்டையின் மேற் புறம் குளிர்ந்து கெட்டியாகி, உள்ளே சூடுமிகுந்த திரவப்பொ ருளையும் மேலே இறுகிக்கெட்டியான ஓட்டையும் பெற்றது. முதலில் ஏற்பட்ட இந்த ஓடு மிகவும் கெட்டியான ஒருவகைப் பாறையால் ஆனது. இப்போது உலகில் உள்ள பாறை அமைப் புகள் எல்லாவற்றிற்கும் ஆதாரமாகவும், அஸ்திபாரமாகவும் இருப்பது இந்த 'ஆக்கினேய'க் கற்பாறைதான். பூமியின் மேல் ஓடு சுருங்கியபோது பரப்பானது சுருக்கு விழுந்து மேடு

பள்ளங்கள் ஏற்பட்டன. அக்காலத்தில், சுற்றிலுமுள்ள வாயு மண்டலம் குளிர்ந்து, அதிலிருந்த நீராவி இறுகிவாயு ரூபத்திலிருந்து ஜல ரூபமாகி, பூமியின் மேற்பரப்பின் சுருக்கத்தால் ஏற்பட்ட பள்ளங்களில் நிறைந்தது. ஆதியில் கடல்கள் இவ்வாறு ஏற்பட்டன.

உலகத்தின் குழந்தைப்பருவமாகிய இந்த ஆதி காலத்தில், ஆக்கினேயப்பாறையான நிலப்பரப்பும், ஆங்காங்கே சிற்சில கடல்களுமே உலகத்திற்காணப்பட்டன. ஆதிக் கடலின் அலைகள், ஆக்கினேயப்பாறைகளாலான நிலத்தை ஓயாது மோதி உடைத்து வந்தன சூரியனுடைய உஷ்ணமும் பாறையைப் பொடித்து வந்தது. இவ்வாறு பொடிந்த கற்கள் அவ்வப்போது பெய்த மழைப் பிரவாகத்தினால் அடித்துக்கொண்டு போய்க் கடல்களில் சேர்க்கப்பட்டன: இவைகள் சேர்ந்து கனம் ஏற ஏற இருகிக் கெட்டிப்பட்டு சகிண்டரி அல்லது ஜலப்பாறைகள் ஆயின. இந்த ஜலப்பாறைகளுக்குள் சிற்சில இடங்களில் பூமியின் உள்ளே இருக்கும் அதியுஷ்ணமான கற்பிரவாகக் குழம்பு பாய்ந்து, ஜலப்பாறைகளை உரு மாறச் செய்தன. இவற்றிற்கு உரு மாறிய பாறைகள் என்று பெயர்.

உலகத்தின் குடிவழிப்பட்டி.

வண்டல் படிந்து ஏற்படும் மணற்பாறை அல்லது ஜலப் பாறை என்கிற இரண்டாந்தரப் பாறைகளே, புராதன உலகத்தின் விஷயங்களைப் போட்டோ பிடித்துக் காட்டுவதுபோல் தெரிவிக்கிறது. ஜலப் பாறையின் அடுக்குகள் அவை ஏற்பட்ட காலத்தில் இருந்த கடல் வாழ் பிராணிகளின் கெட்டியான பாகங்களையும், அவற்றின் முத்திரைகளையும் அப்படியே பத்திரப்படுத்தி வைத்திருக்கின்றன. இவற்றிற்கு (Fossils) பாசில்கள் என்று பெயர். மேற்சொன்ன பாறைகளின் வகைகளிலிருந்தும், அவற்றின் அமைப்பிலிருந்தும், அவற்றில் காணப்படும் பாசில் பொருள்களிலிருந்தும் அந்தப்பிரதேசத்தின் பூர்வீக விருத்தாந்தங்களை நேரில் காண்பதுபோல் கண்டறிந்து சொல்லுகிறார்கள் பூதத்துவசாஸ்திரவல்லவர்கள்.

சூரிய வெப்பம், காற்று, மழை, ஆகிய இயற்கைத்தொழிலாளிகளின் இடைவிடாத உழைப்பின் பயனாக ஆதியில் நிலமாயிருந்த பாகங்கள் கடல்களாயின. கடல்கள், பெரும் நிலப்பரப்புகளாக மாறின. இவ்வாறு ஏற்படும் மாறுதல்கள்,

மிக மிக மெதுவாக நிகழ்பவை. உதாரணமாக நாம் வசிக்கும் இந்தப் பிரதேசமாகிய கோயமுத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் ஜில்லாக்கள் எல்லாம் ஒரு காலத்தில் கடலுக்கடியில் இருந்திருக்கிறது என்று சொல்லும்போது, அது அநேக கோடி வருஷங்களுக்கு முன் என்பதையும் மறக்கக்கூடாது. அதன்பின் பலகோடி வருஷங்களுக்குப்பின் இந்தப் பிரதேசமும் தெற்கேயுள்ள இலங்கையும் அதைச் சுற்றி ஆப்பிரிக்கா ஆஸ்திரேலியா கண்டங்கள் வரைஎல்லாம் சேர்ந்து ஒரே நிலப்பரப்பாக இருந்த காலமும் உண்டு. அப்பால் அனேக கோடி வருஷங்களின் மாறுதல்களின் பயனாக இப்போதுள்ள அமைப்பு ஏற்பட்டிருக்கிறது. பூதத்துவ காலத்துடன் மனிதனின் ஜீவியகாலத்தை ஒப்பிட்டு பார்த்தால் ஒன்றுமேயில்லையென்றுதான் சொல்லவேண்டும்

பைய ஏற்படும் மாறுதல்களேயன்றி அவ்வப்போது திடீரென ஏற்படும் எரிமலைப் பொழிவுகளாலும், பூகம்ப அதிர்ச்சிகளாலும் ஏற்பட்ட மாறுதல்களும் அனேகம் உண்டு.

இவ்வாறாகக் கண்டங்களும் கடல்களும், தத்தம் போக்கில் பரிணமித்து வருவதை ஆராய்ந்து வருகிறது விஞ்ஞானத்தின் ஓர் கலையாகிய பூதத்துவ சாஸ்திரம். தாவர ஜங்கமப் பொருள்கள் தோன்றியழிவது (மாறுவது) போல, நீர் நிலப் பிரிவுகளும் தோன்றி மறைவது இயற்கையாகும்.

உலகில் உயிர்த்தோற்றம்.

கற்பாறையும் கடலுமாகவிருந்தஉலகத்தில்அநேக கோடி ஜீவராசிகள் பரிணமித்துக் காட்சியளிக்கின்ற அதியற்புதமான வரலாற்றை விளக்குகின்றது. விஞ்ஞானத்தின் வேறோர்கலையான 'பயாலஜி' (Boilogy) என்ற ஜீவதத்துவ சாஸ்திரம்.

ஜலவாயு, பிராணவாயு, உப்புவாயு, கரிவாயு ஆகிய நான்கு பொருள்களின் மிக நுட்பமான ஓர் வகைச் சேர்க்கையிலிருந்து, உயிர் தோன்றுவதற்குத் தகுதியுள்ள ஜீவகளப்பொருளாகிய (Protoplasm) புரோட்டோ பிளாஸ்ம் என்னும் ஜடப்பொருளிலிருந்து தாவரங்கள் பரிணமித்த வரலாற்றையும், அதிலிருந்து முதுகெலும்பில்லாதன, ஊர்வன, பறப்பன, பாலூட்டி வளர்ப்பன ஆகிய ஜீவ ஜந்துக்கள் பரிணமித்து வளர்ந்த வரலாற்றையும் அப்பால் மனிதன் தோன்றிய

வரலாற்றையும் விளக்கிக்கூறும் பயாலஜி என்னும் ஜீவதத்துவ சாஸ்திர ஆராய்ச்சிக்குத்துணையாக தாவர சாஸ்திரம், பிராணிசாஸ்திரம், இரசாயனம் முதலிய மற்ற கலைகளும் ஆராயப்படுகின்றன.

மனிதயுகம்.

உலகில் மனிதன் தோன்றி சுமார் மூன்று கோடி வருஷங்கள் தான் இருக்கலாம். ஆனால் உலகம் தோன்றி சற்றேறக்குறைய 300 முந்நூறுகோடி வருஷங்கள் ஆவதாகப் பூதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றனர். ஆகையால் மனிதன் தோன்றுவதற்கு முன் உள்ள 297 கோடி வருஷங்களில், அநேக கோடி வருஷங்கள், உலகில் ஜீவ வர்க்கமாவது, தாவர வர்க்கமாவது, இல்லாமல் இருந்திருக்கவேண்டும். அப்பால் தாவர வர்க்கந் தோன்றிப் பலகோடி வருஷம் கழித்தே ஜீவவர்க்கந் தோன்றியிருக்கவேண்டும். ஜீவவர்க்கந்தோன்றியபின் உள்ள காலத்தை முதுகெலும்பில்லாப் பிராணிகளின் யுகம், ஊரும் பிராணிகளின் யுகம், பக்ஷியுகம், முலைப்பால் ஊட்டும் பிராணிகள் யுகம் என்று அவ்வக்காலங்களில் சிறப்பாய்ப் பரிணமித்த பிராணிகளைக்கொண்டு பிரித்தனர். பரிணாமக் கொள்கையின்படி ஓர் வகைப்பிராணி வேறு பிராணியாக மாறுவதற்கு அநேக கோடி வருஷங்கள் செல்லவேண்டும். மற்ற எல்லாப்பிராணிகளையும் விடச் சிறப்புள்ளவன் மனிதன் ஆகையால் இக்காலத்தை 'மனித யுகம்' என்று சொல்லுகிறார்கள்.

புராதன காலத்து மனிதன்.

ஆதி காலத்திய மனிதன் இப்போதுள்ள அவன் சந்ததியானைப்போல நாகரீகமுள்ள பிராணியல்ல. அவன் மிருகத்தினின்றும் அதிக வித்தியாசமில்லாத காட்டுமிராண்டியாகத்தான் இருந்தான். புல்லாய்ப் (தாவரமாய்) புழுவாய், ஊர்வனவாய், பறப்பனவாய், விலங்காய்,(முலைப்பாலூட்டும் பிராணிகள்) மாறி மாறி பரிணமித்து, விலங்குகளில் வானரமாய், வானரத்திலிருந்து ஆதி மனிதன் தோன்றினான் என்பது டார்வின் (Darwin) என்ற விஞ்ஞானியின் ஆராய்ச்சி. இந்த முடிவை மற்ற விஞ்ஞானிகளும் ஒப்புக்கொண்டனர். ஆகவே குரங்கிலிருந்து வாலில்லாக் குரங்காகிப் பின் மனிதனாகிய நமது முன்னோர்கள் முதலில் மனிதத்தோற்றம் பெற்று உல

கில் காட்சியளித்தது மூன்று கோடி வருஷங்களுக்கு முன்னால். அதிலிருந்து மாறி மாறித்தற்போதுள்ள நாகரீக நிலைக்குவந்திருக்கும் மனிதன் இன்னும் மூன்றுகோடி வருஷங்களுக்குப் பின்னால், இப்போதிருப்பதைவிட மிக மேன்மை பொருந்தியவனாகவும், அளவிறந்த மூளைத்திறமையுடையவனாகவும் இருப்பானென்று ஊகிக்கப்படுகிறது. நாளுக்கு நாள் மனிதன் தன்னுடைய அறிவிலும், ஆற்றலிலும், தோற்றத்திலுங் கூட விருத்தியடைந்து, மேன்மைக்கு வருகிறான் என்பதே, ஜீவ தத்துவ சாஸ்திரம் (Biology) மனித வர்க்க சாஸ்திரம் (Anthropology) முதலிய விஞ்ஞானக் கலைகள் தெரிவிக்கும் உண்மை.

உலகின் வயது.

உஷ்ணக்காற்றாயிருந்து, உருகிய பிழம்பாகிப்பின் குளிர்ந்து இறுகிக் கெட்டியான ஆதிகாலத்தில் ஏற்பட்ட உருக்குப் பாறைகளின் வயதை அளந்தறிந்து அதன்மூலம் உலக வயது சொல்லப்படுகிறது. இதுவரை பூதத்துவ சாஸ்திரிகளால் ஆராய்ந்தறியப்பட்ட பாறைகளில் மிகவும் பழமையான பாறைகளின் வயது சற்றேறக்குறைய 1500 மில்லியன் வருஷங்கள் என்று தெரிகிறது. (மில்லியன் என்பது 10-லக்ஷ வருஷம்.) ஆனால் உலகம் தோன்றிய காலம் 3000-மில்லியன் வருஷங்கள் இருக்கலாமென்று யூகிக்கப்பட்டு வந்தது. இந்த மதிப்பை உறுதிப்படுத்தப்போதிய ஆதாரம் கிடைக்கவில்லை. ஆதிகாலத்திய உருக்குப்பாறைகள் எல்லாம் பூமியின் அடியில் ஆழ்த்திப் புதைந்து கிடப்பதால் மிகவும் பழமையைத் தெரிவிக்கும் அப்பாறைகள், பூதத்துவ நிபுணர்களின் ஆராய்ச்சிக்குக் கிடைக்காமலிருப்பதே, பூமியின் வயதைத்திட்டப்படுத்துவதற்குத் தடையாக இருக்கிறது.

தென் கென்சிங்டன் நகரின் விஞ்ஞான கலாசாலைப் பேராசிரியர், F. A. பன்னத் (Prof. F. A. Panneth of the Imperial College of Science and Technology) என்பவர் புதிய பரீட்சைகளைக்கொண்டு உலகத்தின் வயதை ஒருவாறு நிர்ணயஞ் செய்திருப்பதாக இந்த வார (6—10—35) இந்து வாரப் பத்திரிகையிலிருந்து தெரிகிறது.

உலகத்தின் பல பாகங்களிலிருந்து தேடிக்கொண்டு வரப்பட்ட சுமார் 30 வானக் கற்களை (Meteorites) ஆராய்ச்சி செய்து அவைகளின் வயது சுமார் 3000 மில்லியன் (முந்நூறு

கோடி) வருஷங்கள் இருக்கலாமென்று கண்டறிந்ததாகவும், இந்த வானக் கற்கள் எல்லாம் உடைந்துபோன ஒரு கிரகத்தின் சிதைவுகள் என்பதனால், அந்தக் கிரகத்தின் வயது மேற்படி வானக் கற்களின் வயதேயாகும் என்பதாகவும், பூமியும் மற்ற கிரகங்களும் ஒரே காலத்தில் ஏற்பட்டதாக அனுமானிக்கப்படுவதால் நமது பூமியின் வயதும் மேற்படி வானக் கற்களின் வயதுக்குச் சற்றேறக்குறையச் சரியாய் இருக்க வேண்டுமென்றும் 'பன்னத்' சாஸ்திரியார் சொல்லுகிறார், இவைகளில் இருந்து உலகத்தின் வயது சற்றேறக்குறைய மூந்நூறு கோடி (3000 மில்லியன்) வருஷங்கள் என்று ஒருவாறு ஒப்புக்கொள்ளலாம். இவ்வளவு நீண்ட கால அளவைச் சரிவரக் கிரஹித்துக்கொள்ளத்தக்க அறிவுணர்ச்சியுள்ளவர்களே, உலகத்தின் வளர்ச்சியையும், பரிணாம வாத முறையையும் அறிந்துகொள்ள முடியும்.

கி. பி. 2035-ல் உலக நிலை.

100 வருஷங்களுக்குப்பின் உலக நிலை எப்படியிருக்கும் என்று தன் அனுபவங்களைக் கொண்டும், பிற அறிஞர்களின் ஆராய்ச்சி முடிபுகளினின்றும் அமரிக்கா தேசத்து இரசாயன சாஸ்திரிகள் சங்கத்தலைவராகிய Mr. தாமஸ் மிட்ஜிலே, (Mr. Thomas Midgeley President of the Association of American Chemists) என்பவர் ஓர் அபிப்பிராயம் தெரிவிக்கிறார். சோஸ்யம் அல்ல! விஞ்ஞானக்கலைகளின் வளர்ச்சியின் போக்கை அடிப்படையாகக் கொண்ட ஓர் உத்தேச சித்தாந்தம். அவர் சொல்லுவதாவது:—

"நம்முடைய முன்னோர்களும் நாமும் செய்த, செய்து வருகின்ற முயற்சிகளின் முழுப் பலனையும், இனிப்பிறக்கப் போகின்ற நம்முடைய சந்ததியார்கள் பூர்த்தியாக அனுபவிப்பார்கள். 2035ல், யுத்தம், சண்டை, வியாதி, துக்கம், இவைகளுக்கு அர்த்தமே தெரியாது இருக்கவும் முடியாது. மற்ற கிரகங்களுடன் போக்குவரத்துகள்கூட ஏற்பட்டு விடும்.

இங்கேயிருந்து செவ்வாய் மண்டலத்திற்கும், சுக்கிரமண்டலத்திற்கும் யாத்திரை செய்து வருவார்கள். அதற்குப் போதிய சாவகாசமும் அந்தக்காலத்து மனிதர்களுக்கு இருக்கும். வேலை செய்யவேண்டிய நேரம் மிகக் குறைந்து விடும். கூலியோ அதிகப் பட்டு விடும். எல்லாத் தொழில்களிலும் தினம் இரண்டுமணி நேரத்திற்கு மேல் வேலை செய்யவேண்டிய

அவசியம் இருக்காது. வைத்திய சாஸ்திர வளர்ச்சியால், மனிதனின் ஜீவியகாலம் அதிகரிக்கப்பட்டு, ஜனங்கள், நீண்ட பூரண ஆயுளுடனும், தங்கள் தேவைக்கு அதிகமான தன சம்பத்துடனும், உல்லாசமாகக் காலங்கழிக்கப்போதிய அவ காசத்துடனும் இன்பவாழ்வு நடத்துவார்கள். ரணம், க்ஷயம், விஷ ஜுரம் முதலிய ஆபத்தான வியாதிகள் இன்ன தென்று கூட அவர்களுக்குத் தெரியாது. இவ்வியாதிகளை உண்டாக்கும் கிருமிகள், பொருட்காட்சிச் சாலைகளில் வைக் கப் பட்டிருக்கும். நகரங்களிலும் குப்பை கூளங்கள் சிறி தும் இருக்காது. சுகாதார சாஸ்திரம் நாம் இப்போது நினைக் கமுடியாத வகையில் விருத்தியடைந்திருக்கும்.

இப்போது மனிதனுக்கு உணவளிக்கும் மிருகங்கள் மிகப் பெரியவைகளாக இருக்கும் பன்றிகள், மாடுகள் அளவு பருமன் உள்ளவைகளாயிருக்கும். கோழி முட்டை 'புட்பால்' உதை பந்து அவ்வளவு பெரியதாயிருக்கும். பசுமாடுகள் யானைகளைவிடப் பெரியவைகளாகவிருக்கும்.

மொத்தத்தில் நம்முடைய உலகம் 'பாரடைஸ்' (Paradise) என்று சொல்லும் மோக்ஷ லோகமாக மாறியிருக்கும்''

''Earth will be a Paradise in 2035'' says Mr. Thomas Midgeley, president of the Association of American Chemists.

எது நிஜம் ?

''மிருக நிலையிலிருந்து காலக்கிரமத்தில் பரிணமித்துச் சிறந்த மனிதன் தன் முன்னோர்களை விட அறிவிலும் ஆற்ற லிலும் விருத்தியடைந்திருக்கிறான், இன்னும் விருத்திய டைந்து வருகிறான், என்று கூறுகிறது விஞ்ஞானம்.

''ஆதியில் தேவர்களாயிருந்து காலடைவில் அறி விலும் ஆற்றலிலும் குறைந்து தற்போதுள்ள மனிதநிலைக்கு வந்திருக்கும் மனிதர் இன்னும் கீழான நிலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர்'' என்கிறது புராண ஞானம்.

''100 வருஷங்களுக்குப்பின் உலகம் துக்கம், அநீதி, வியாதி முதலி கொடுமைகளிலிருந்தும் விடுதலை பெற்று, எல்

லோருக்கும் போகபூமியாக மாறிவிடும்" என்று விஞ்ஞானி கள் கூறுகின்றனர்.

"இனி வருங்காலத்தில், அதாவது, கலிமுற்ற முற்றக் காலம் ரொம்பக்கெட்டு, உலகத்தில் பசியும், பஞ்சமும், அக்கிர மும் அதிகரித்து மனிதன் மனிதனைத் தின்பான்" என்று சாற்றுகின்றனர் புராணஞானிகள்.

"இந்த உலகத்தை இன்பமயமாகச் செய்து எல்லோரும் ஆனந்த வாழ்க்கை நடத்தலாம்" என்று விஞ்ஞானம் அழைக் கின்றது.

"இந்தப் பிரபஞ்சம் மாயத்தோற்றம், உலகம் துக்கம் நிறைந்தது இதில் பிறப்பதே மகாபாவம்" என்று உலகை வெறுக்கச் செய்கின்றது. புராணஞானம்.

"விஞ்ஞானம் காண்பிக்கும் நாகரீகப்பா தையே முன்னேற்ற மார்க்கம். அப்பாதையில் சென்று நமது துக்கத்தையும் குறைகளையும் நிவர்த்தித்துக் கொள்வோம்" என்றுநம்புகின்றனர். சீர்திருத்தவாதிகளான சுயமரியாதைக் காரர்.

"நமது புராண இதிகாசங்கள் காட்டியுள்ள பாதை யிற்சென்று ஆதிகால நிலைமையை மீண்டும் அடைவதே இன்பம்" என்று வாதிக்கின்றனர் பழமை போற்றும் புராண மரியாதைக்காரர்.

மறுக்க முடியாத உண்மை.

குழந்தை கிழவனாகின்றான். கிழவன் குழந்தையாக முடி யாது. தகப்பன் தேடிவைத்த பொருளும் அறிவும்மகனுக்கு உதவுகின்றன. மகன் தேடிவைக்கும்பொருளைத் தகப்பன் அடைய நினைப்பது தவறு. குழந்தையின் வனப்பை யும், உற்சாகத்தையும், ஊக்கத்தையும் தைரியத்தையுங் கண்டு பொறாமையாற் பெருமூச்செறிந்து ஏங்குகிறான் கிழ வன். ஆனால் கிழவனாரின் வளைந்தமுதுகையும் தளர்ந்த நடை யையும், நரைத்த தலையையும், பொக்கைவாயையும் கண்டு தானும் கிழவனாக விரும்பும் குழந்தை எங்கும் இருக்காது. நம்முடைய முன்னோர்களின் அனுபவங்களும் முயற்சிகளும் நமக்கு உதவுகின்றன. நம்முடைய முயற்சிகளுக்கு வழிகாண்

பிக்கின்றன. ஆதலால் அவர்களைவிட நாம் சிறிது முன்னேறிச் செல்ல முடிகின்றது. அது போலவே, நம்முடைய முயற்சிகளின் முழுப்பலனையும் நம்முடைய சந்ததியார்கள் அனுபவிக்க முடிகின்றதால், நம்மிலும் அவர்கள் சிறப்பாயிருக்கக் கூடும். நம் காலம், பழங்காலத்திலும் சிறந்திருக்கிறது. வருங்காலம இனியும் மேலானதாக இருக்கும் என்பதற்கு வேறு காரணம் தேவையில்லை. இக்தக் கருத்தைத் "தெனிஸன்" என்ற ஆங்கில கவி (Lord Tennisom) வெகு அழகாகக் கூறி இருக்கிறார்.

I doubt not that through the ages.
One **increasing purpose** runs
And that the thoughts of men get widened
Through the process of the Suns.

பழங்காலம் மிக அநாகரீகமானது. 'பொற்காலம்' அல்ல. தற்காலம் உள்ள ஒரு கூலிக்காரன் அனுபவிக்கும் சௌகரியங்கள் பழங்காலத்தில் ஒரு அரசனால் கூட அனுபவித்திருக்கமுடியாது. ஆகையால் இருள் சூழ்ந்த பழமைக்கு அடிமைப்படுவது மடமை. பழமை நமக்கு அதிகாரியலல. "காலம் வர வரக் கெட்டுப்போகிறது" என்று தடித்தனமாய்ச் சொல்லுவது வாலிபத்தின் உயர்ந்த லட்சியங்களுக்கும், வாலிபரின் தீவிர முயற்சிகளுக்கும்; தன்னம்பிக்கைக்கும, பொதுவாகத் தேச முன்னேற்றத்திற்கும், மகத்தான, மன்னிக்க முடியாதகேடு சூழ்வதாகும். எனவே, இனிமேல் நம்முடைய பெரியதம்பிகள், "காலங்கலிகாலம்! எல்லாங்கெட்டுப் போச்சு! உலகமே அழுகிக்கொண்டு வருகிறது!" என்ற பழைய பல்லவிகளைப் பாடும்போது, "வாஸ்தவம்! காலங்கெட்டுத்தான் வருகிறது. எல்லாந்தலைகீழ்தான். ஆனால் இவ்வளவோடு நிற்காது. இன்னும் ரொம்ப ரொம்பக் கெட்டுப்போகப் போகிறது. உலகமே அழுகி நாறிப்போகும். ஆகையால் அன்பான பெரிய தம்பி, இந்தப்பாழும் உலகம் ரொம்பக்கெட்டு நாற்றம் எடுப்பதற்கு முன்னால், தர்மபுத்திரனாகிய நீ நல்ல உலகத்தைத் தேடிக்கொள். நல்லவர்களுக்கு இது காலமல்ல, இந்த உலகிலும் இடமில்லை யென்று நீயே சொல்லியிருக்கிறாயல்லவா?" என்று சொல்வதைவிட வேறு என்ன பதில் சொல்ல முடியும்?

ஆசை வேண்டாமா?

(சாமி. சிதம்பரனார்.)

“ஆசைக் கோர் அளவில்லை அகிலம் எல்லாம்
கட்டி ஆளினும் கடல் மீதிலே
ஆணைசெலவே நினைவர்; அளகேசன்
நிகராக அம்பொன் மிக வைத்த பேரும்
நேசித்து ரசவாத வித்தைக்கு
அலைந்திடுவர்; நெடுநாள் இருந்த பேரும்
நிலையாகவே இனும் காயகற்பம்
தேடி நெஞ்சு புண்ணாவர்”

இது தாயுமானவர் சொல்; இவ்வுரை முற்றும் உண்மை; உலக மக்களின் இயல்பை தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டும் கண்ணாடி. “ஆசைக்கு அளவேது? உலகத்தையெல்லாம் தன் கீழ்படுத்தி ஆண்டாலும் திருப்தியடையார். கடலும் தனது ஆணைக்கு அடங்கவேண்டும் என்று ஆசைப்படுவர். “குபேரனைப்”போல் செல்வத்தைக் குவித்து வைத்திருக்கிறவர்கள் அச்செல்வத்தால் திருப்தி அடைவதில்லை; இரும்பு, செம்பு போன்ற உலோகங்களை உயர்ந்த பொன்னாக்கும் ரசவாத வித்தைக்காக அலைவார்கள்; நீண்ட நாள் திடகாத்திரமுடன் உலக இன்பங்களை அனுபவித்தவர்கள் நமக்கு இனி உலக வாழ்வு தேவையில்லை; போதுமென்று திருப்தியடையமாட்டார்கள்; இன்னும் சாவாமல் நிலைத்திருப்பதற்கு மருந்து தேடுவார்கள்” மேலே கூறியவை முதலில் குறித்துள்ள பாடல் பகுதியில் அடங்கிய பொருள்.

ஃ ஃ ஃ

இச் சமயத்தில் மனிதனுக்கு ஆசை தேவையா? இல்லையா? என்று ஒரு சந்தேகம் புறப்படலாம். ஆம்! நியாயமான சந்தேகந்தான்; அதற்குப் பதில் கூறித்தீரவேண்டியதும் அவசியந்தான். “மனித வாழ்வுக்கு ஆசை மிக மிக அவசியம்” என்று சந்தேகத்திற்கு முதலில் பதில் கூறிவிடு

கிறேன். பிறகு ஆசை என்பது என்ன? அது எதற்காக? அதுஇல்லாவிட்டால் என்ன? என்ற கிளைச்சந்தேகங்களைத் தெளிவுபடுத்துகிறேன்.

ஃ ஃ ஃ

முன்னோர்கள் ஆசையே மனிதனுக்குக் கூடாது என்று சொல்லியிருக்கிறார்களே! ஆசையின் தீமையைப் பற்றியே மத நூல்களெல்லாம் முழங்குகின்றனவே! தத்துவ சாஸ்திரங்கள் எல்லாம் ஆசை கூடாதென்று கூறுகின்றனவே! ஆசையே மனிதன் உலகில் அக்கிரமங்கள் செய்வதற்குக் காரணம் என்று சொல்லுகிறார்களே! இப்படிச் சொல்லும் நூல்களெல்லாம் பொய்யுரைகளா? பெரியோர்கள் எல்லோரும் மடையர்களா? என்று சந்தேகமும், அதிலிருந்து கேள்விகளும் கோபத்தோடு தோன்றலாம். ஆம்! இதுவும் தவறல்ல. இதற்கும் பதில் சொல்லத்தான் வேண்டும்.

ஃ ஃ ஃ

நடுவில் ஒரு சின்ன சங்கதி! இதையும் உங்கள் நன்மைக்காகவே சொல்லுகிறேன்; கேள்விகளும், சந்தேகங்களும் நீண்டு வளர்ந்துகொண்டு போவதுபோல் பதிலும் நீண்டு வளர்ந்துவிடுமோ என்று பயப்படவேண்டாம். பதிலைக் கூடியவரையிலும் வெகு சுருக்கமாகக் கூறுகிறேன்.

ஃ ஃ ஃ

முன்னோர்களும், முன்னோர்கள் சாஸ்திரங்களும் சொல்லியிருப்பதும் "ஆசை" என்பதைப் பற்றியல்ல என்று சுருக்கமாகச் சொல்லிவிடுகிறேன். பிறகு எதைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள்? என்று மீண்டும் கேட்பீர்களானால் அதற்கும் பதில் சொல்லிவிடுகிறேன்; அவர்கள் சொல்லியிருப்பதெல்லாம் "பேராசை" என்பதைப்பற்றியே ஆகும். "ஆசை"க்கும் "பேராசை"க்கும் எழுத்தில் எவ்வளவு வித்தியாசம் பாருங்கள்! இரண்டையும் சொல்லும்போது ஆசையில எவ்வளவு வித்தியாசம்! கவனியுங்கள்! ஆதலால் அவர்கள் சொன்னதையும் நான் சொல்லுவதையும் ஒன்றுபடுத்திக் குழப்ப வேண்டாம்.

ஃ ஃ ஃ

மூன்னோர்கள் "பேராசை"யைக் கண்டித்திருப்பதைப் பற்றி இன்னும் கொஞ்சம் வியாக்கியானம் பண்ணிக் காட்ட வேண்டுமானால் "ஒவ்வொரு மனிதனும் தனது தேவைக்குமேல் அதிகமாக விரும்பக் கூடாது" என்று வற்புறுத்தியிருக்கிறார்கள் என்று தான் சொல்லவேண்டும். இதைத் தான் அவர்கள் "பேராசை" என்று கூறியிருக்கிறார்கள் என்றும் அறிய வேண்டும். இந்தப் பேராசையைநானும் வெறுக்கிறேன்; உலக நன்மையைக் கருதுபவர்களாயிருந்தால் நீங்களும் வெறுப்பீர்கள் என்று எனக்குத் தெரியும்; மனித சமூக நன்மைக்கருதும் அறிவாளிகளும் வெறுக்கிறார்கள். அதலால் இதை இப்படியே விட்டு விடலாம் என்று நினைக்கிறேன்.

⁂ ⁂ ⁂

முன்னோர்களும், மூன்னோர் நூல்களும், பேராசையை எவ்வளவுதான் அளவு கடந்து கண்டித்திருந்தாலும் அவ்வாசை அன்றிருந்தபடியே—ஏன் இன்னும் அதிகமாகவே இன்றும் நிலைத்து நின்று வளர்ந்து வருவதற்குக் காரணம் மனித இயல்பு என்றுதான் கூறவேண்டும். தேவைக்கு அதிகமான ஒரு வீடு வைத்திருப்பவன் இன்னொரு வீடும் வேண்டுமென்று விரும்புவது இயல்பு தானே; ஒரு ஆயிரம் ரூபாய் வைத்திருப்பவன் அது போல் பல ஆயிரங்கள் வேண்டுமென்று விரும்புவது இயல்புதானே; ஆகவே "தேவைக்கு மேல் அதிகமான பொருள்களை மக்கள் பெற்றிருப்பது தவறல்ல; அவ்வாறு அதிகம் பெறறிருப்பதற்குக் காரணம் அவர்கள் பூர்வஜென்மத்தில் செய்தபுண்ணியம்; "கடவுள்" என்பவர் அவர்களுக்கு அதிகமாகக் கொடுத்திருக்கின்றார்; அவர் "தலையெழுத்து" மிகவும் நல்ல எழுத்து; அவர் பிறந்த வேளையின் கூறு அது; அவர்கள் "ஜாதகம்" நல்ல ஜாதகம; அவர்கள் அதிர்ஷ்டசாலிகள்; இல்லாதவர்கள் துரதிர்ஷ்டசாலிகள்" என்ற மதக் கோட்பாடுகளும, மூடநம்பிக்கைகளும் ஏற்பட்டதே பேராசை நிலைத்திருப்பதாகக் காரணம் என்று கூறிவிடலாம். பேராசைகொண்டு, பிறர் துயரம் பாராது, பலரைத்துன்புறுத்திப் பொருள் சேர்க்கும் ஒருவன், தனது செய்கைக்கும, தன்னிடம் பொருள் சேர்வதற்கும் மேற்காட்டிய வற்றைப் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறான். பழய பேராசை நிற்கட்டும். இனி "ஆசை" என்பதைப்பற்றிப் பார்ப்போம்.

⁂ ⁂ ⁂

ஆசை என்பது ஒரு பொருளின்மேல் நமக்குள்ள அன்பு; அல்லது ஒரு பொருளைத் தீங்கில்லாமலும் வைத்திருக்க விரும்புவது; என்று சொல்லிவிடலாம். இத்தகைய ஆசை எதற்காக? என்ற கேள்விக்குப் பதில்கூற வேண்டுமல்லவா? ஆம் கூறுகிறேன் உலகில் பிறந்த மக்கள் உலக வாழ்வில் உள்ள இன்பதுன்பங்களுக்கு உட்படத் தயாராக இருக்க வேண்டும். தமக்கு நேரும் துன்பங்களைக் கண்டு பயந்து ஓடுதல் கூடாது; அவைகளுடன் எதிர்த்துப் போராடவேண்டும். இப்படிப்பட்ட நோக்கமும் குணமும் உள்ளவர்களே உலகில் வாழ்வதற்குத் தகுதியுடையவர்கள் ஆவார். ஆதலால் உலக வாழ்வைச் "சமாளிக்க" விரும்புகின்றவர்களுக்கு ஆசையே இல்லாமல் இருக்குமானால் அவர்கள் உலக வாழ்வைச் 'சமாளிக்க" மாட்டார்கள். தன் உடம்பின் மேல் அன்பில்லாத ஒருவன் அவ்வுடம்பை எவ்வாறு பழுதின்றிக் காப்பாற்றுவான்? மக்கள் மீது அன்பில்லாத ஒருவன் எவ்வாறு மக்கள் நலமுற்று வாழவேண்டுமென்று நினைத்து அவர்கள் நன்மைக்காக உழைக்க முன்வருவான்? உணவின் மேல் சிறிதும் விருப்பமில்லாத ஒருவன் எப்படி உண்பான்? ஆதலால் மக்கள் சோம்பேறியாக இல்லாமல் இருப்பதற்கும், உலகத்தார்க்கு நன்மை செய்வதற்கும், அதற்குத் தன்னைத் தகுதியுடையவனாக்கிக்கொள்ளுவதற்கும் "ஆசை" அல்லது "விருப்பம்" அல்லது "அன்பு" என்பது இன்றியமையாதது என்பதை யாரும் மறுக்க முடியாது. இத்தகைய "ஆசை—விருப்பம்—அன்பு" இல்லாவிட்டால் அம்மனிதன் மனிதப் பிறவிக்கு அமைந்திருக்க வேண்டிய—அங்க அமைப்புக்களைத் தவிர—குணங்களையுடையவன் என்று கருத முடியாது. கல், மண், மரம் போன்ற பிறவிகளுக்கும் அவனுக்கும் வித்தியாசம் இல்லை என்றுதான் கூறவேண்டும். ஆதலால் "ஆசை—விருப்பம்—அன்பு" என்பது மனித சமூகத்தைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் மிக மிக மிக அவசியம் என்பதை அறியலாம்.

⁂ ⁂ ⁂

நான் கூறிய இத்தகைய இயற்கையான—நியாயமாக அமைந்திருக்க வேண்டிய ஆசையே மனித சமூகத்தின் உயிர் நாடியாகும். ஆதலால், பேராசைக்கும், ஆசைக்கும் வித்தியாசம் தெரியாமல் ஆசையே கூடாது என்று பிதற்றும் போலி மதவாதிகளின் வார்த்தைகளைக் காதில் போடவேண்டாம்.

கடவுளும் அனுமானப் பிரமாணமும்.

(உடுமலை, கனகராஜன்.)

அனுமானப் பிரமாணம் என்பது ஒரு பிரத்யட்சப் பொருளிலிருந்து காணாத பொருளை அனுமானித்து அதைப் பிரமாணமாகக் கொள்வது. அதாவது கண்ட பொருள்களைக் கொண்டு காணாத பொருள்களை நிர்ணயிப்பதாகும். இது ஒரு யூகையே. காரணத்திற்குப் பொருத்தமாக யூகிப்பது விஞ்ஞானிகளுக்கும் முரணன்று அவர்களும் இம்மாதிரியான யூகைகள் செய்வதுண்டு ஆனால் அவர்கள் அந்த யூகையை பிரத்தியட்ச பரிசோதனைக்குக் கொண்டுவந்து உறுதி படுத்தும் வரை அதை உண்மையென்று முடிவு செய்யமாட்டார்கள்.

வேதாந்திகள் கடவுள் இருப்பதற்கு ஆதாரம் காட்டுவதற்காக அனுமானப் பிரமாணம் அவசியம் என்பார்கள் கண்ணால் காண முடியாத வஸ்துவை கண்ணால் கண்ட வஸ்துவிலிருந்துதான் அனுமானிக்கவேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஒருவாறு யூகிப்பதற்கு இது ஒரு முறையான வழிதான்

இப்படிச் சொல்லுகிற மனிதர்கள் ஆசையில்லாமல் இருக்கிறார்களா என்பதை அவர்கள் செய்கைகளாலும், நடத்தைகளாலும் கவனித்தறியுங்கள்; மனத்தில் பேராசை கொண்டவர்களாகவே அவர்கள் காணப்படுவார்கள். செய்கைகளும், நடத்தைகளும் அப்பேராசையை நிறைவேற்றும் வழிகளிலேயே சென்றுகொண்டிருக்கும். இருந்தும "ஆசை கூடாது; அது 'பரலோகம்' செல்லுவதற்குத் தடையாகும்; 'கடவுள்' என்பவரின் கிருபையைப்பெற—அவர் உலகத்தையடையத் தடைசெய்வதாகும்; ஆசையை விட்டால்தான் அழியாதபேரின்ப மோட்ச வாழ்வைப் பெறமுடியும்" என்று குருக்களும், மதவாதிகளும், தத்துவ ஞானிகளாக நடிப்பவர்களும் சொல்லுவது நம்மை ஏமாற்றுவதற்கே என்பதை அறியுங்கள். இதை அறியாமல அவர்கள் வார்த்தைகளில் மயங்கி ஏமாறுவீர்களானால் நான் என்ன செய்ய முடியும்? உங்கள் இஷ்டம்!

என்று எனக்கும் தோன்றிற்று. ஆனால் இந்த அனுமானம் முடிவானதாயிருக்க முடியாது என்பதை நான் அறிந்திருந்த போதிலும், அம்மாதிரி யூகிப்பதற்காவது பொருத்தமாயிருக்கிறதா என்பதைப்பற்றி நான் யோசித்தேன். வேதாந்திகள் இரண்டு உதாரணங்கள் முக்கியமாக சொல்லுகிறார்கள். அதாவது புகையை கண்டவிடத்து நெருப்பு உண்டென்று அறிவதுபோல், இப்பிரபஞ்சத்தைக்கொண்டு இதைப் படைத்தவர் ஒருவர் இருக்கவேண்டுமென்று அனுமானிப்பதுஒன்று. ஒரு கடத்தைக் (மண் பாண்டத்தை) கண்டால் அதை சமைத்தவன் ஒருவனிருக்கவேண்டும் என்பதுபோல், இப்பிரபஞ்சமானது இதை உண்டாக்கிய ஒருவர் இருக்கவேண்டும் என்று யூகிக்கச் செய்கிறது என்பது இரண்டாவதாகும்.

ஆனால் முதலில் சொன்ன உதாரணம் அவர்கள் வாதத்திற்கு போதிய அளவு பொருத்தமானதாயில்லை, அதாவது நெருப்பிலிருந்து புகை வருவது இயற்கை. நெருப்பானது, புகையை சிருஷ்டிக்கவேண்டுமென்று யோசனை செய்து உண்டாக்கவில்லை. நெருப்பிற்கு அறிவில்லை. நெருப்பிலிருந்து புகை தானாக உண்டாகியது ஆகையால், கடவுளிலிருந்து உலகம் அல்லது பிரபஞ்சம் தானாக வந்ததாக ஆஸ்திகம் ஒப்புக்கொள்ளுமா? கடவுள் பிரபஞ்சத்தை நினைவுடன் படைத்தார் என்று கொள்ள வேண்டுமானால் முதல் உதாரணம் புகையையும் நெருப்பையும் பிரபஞ்சத்திற்கும் கடவுளுக்கும் சம்பந்தப்படுத்தி கூறுவது பொருந்தாது. ஆனால், இரண்டாவது உதாரணம் ஒரு பாண்டத்தைக் கண்டவுடன் அதை செய்தவன் ஒருவன் இருக்கவேண்டும் என்பது வேதாந்திகளின் கொள்கைக்கு பொருத்த முள்ளதாகவிருக்கிறது. அதாவது ஒரு மண் பாண்டம், ஒரு அறிவுள்ள மனிதனின் அவசியத்தை உண்டாக்குவதால், பிரபஞ்சத்தைஉண்டாக்குவதற்கு ஒரு அறிவுள்ள கடவுள் இருக்க வேண்டுமெண்டு இந்த உதாரணம் வற்புறுத்துவதாயிருக்கிறது. ஆகையால், ஆஸ்திகத்திற்குப் பொருத்தமான உதாரணத்திலிருந்தே நான் எனது சந்தேகக் குறிப்புகளை எழுத ஆசைப்படுகிறேன்.

முதலில் உலகத்திற்குப் பாண்டத்தை உவமையாகக் கூறியது பொருத்தமாஎன்பதுதான்முக்கியமானதாகும். பாண்டத்தில் ஒரு மனிதனின் அறிவுடன் கூடிய வேலைப்பாடு இருப்பதைப்போல, பிரபஞ்சத்தில் சகல அறிவும், பேரன்பும், காருண்யமும் வாய்ந்த கடவுள் படைப்பு என்று எண்ணத்

தகுந்தவாறு பிரபஞ்ச அமைப்பும், நிகழ்ச்சிகளும், பிரபஞ்சத்தில் இருக்கின்றனவா என்று ஊன்றிக் கவனிக்க வேண்டும். பிரபஞ்ச அமைப்பு, நிகழ்ச்சி முதலியவைகள்; மண்பாண்டம் குயவன் இருப்பை அனுமானிக்கச் செய்தது போல், சர்வ வல்லமையும், திரிகாலமும் அறிந்த கருணைக்கடலாகிய அறிவின் சொரூபமாயுள்ள கடவுள் இருந்துதான் தீரவேண்டும் என்று யூகிக்கச் செய்கிறதா, என்பது போன்ற விஷயங்களை ஆராய்வது அவசியமாகிறது.

அவ்விதம் யோசிப்போமானால், இப்பிரபஞ்சமானது கொட்டிப்போனமை (இங்கி) போல இருக்கிறதே யொழிய ஒரு பேனாவால் எழுதப்பட்டதைப் போல் காணப்படவில்லை. என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். அதாவது பிரபஞ்சத்தை ஒரு அறிவு கட்டுப்படுத்தி முன்னெச்சரிக்கையாக நடத்திக் கொண்டு போவதாகத் தெரியவில்லை என்பதோடு, அணுக்களின் சையோகத்தால் பெரும் பெரும் கோளங்கள் தோன்றி, யாதொரு கட்டுப்பாடன்றி அநேக பெரும் கோள்கள் ஒன்றோடொன்று மோதி அழிந்து விடுவதும், தானாக அணுக்கள் சையோகத்தால் பெரிய கோள்கள மெதுவாக கற்பமாவதும், இவைகளை கட்டுப்படுத்திநடத்திச் செல்ல ஒரு அதிகாரியில்லாததை உள்ளங்கை நெல்லியங்கனி போல் காட்டுகின்றதல்லவா! மற்றும் இவ்வவுலகில் நடக்கும் சம்பவங்களையும் நாம் ஆராய்வோம். பூகம்பம், புயல்காற்று, கடலின் ஆக்கிரமிப்பு, பெருமழை, இடி முதலியவைகளால் லட்சக்கணக்கான மக்கள் மடிவது கடவுளைப்பற்றி மிகவும் சந்தேகிக்கச் செய்கிறது. இது முன் ஜென்மங்களின் பலன் என்று சொல்வதானால், அவர்களை கடவுள் தண்டித்தார் என்று ஆகும். அப்படியும் இருக்கலாமா என்று பார்ப்போமேயானால், வயது வந்தவர்களுக்குத் தண்டனை யளிப்பது பொருத்தமானதாயிருக்கலாம். பால்மணம் மாறாத பச்சிளங்குழந்தைகளும் அவ்விபத்துகளில் மாண்டுபோகின்றன. மூன்று மாதங்கள், நான்குமாதங்கள் ஆகிய தவழும் குழவிகள் கபடற்று, தானே புன்னகைபுரிந்துகொண்டிருக்கும்போது, பூகம்பத்தால் அப்படியே அக்குழந்தைகளையும் சுவர்கள் இடிந்து விழுந்து அமுத்தி கொண்டிருக்கின்றது.

இது கடவுள் தண்டனை என்றாலும் முன் ஜென்மப் பலன் என்றாலும் எப்படி பொருத்தமாகும். ஏதோ ஒரு யா

னையை முதலை பிடித்துக் கொள்ள அந்தக்காலத்து பேசும் யானை 'ஆதி மூலமே' என்று சப்தம் செய்ததாம். உடனே கருட வாகனத்தில் வந்து யானையைக் காப்பாற்றின கடவுள், அதைவிட பரிதாபத்திற்குரிய இவ்விபத்துகளில் பால் மணம் மாறாப் பாலர்களை ஏன் வந்து காப்பாற்றவில்லை என்று கேட்டால், அதற்கு என்ன பதில் சொல்வது! மேலும் முன்ஜென்மத்திற்குத் தகுந்த மாதிரி இந்த ஜென்மத்தில் அக்குழந்தைகளை அப்படி அனுபவிக்கும்படி கடவுள் செய்தால், அக்குழந்தைகளுக்கு எப்படி மன மாற்றம் ஏற்பட்டு அடுத்த ஜென்மத்திலாவது நல்வழியில் திருந்த சாத்தியமாகும்? அறிவு வளர்ச்சியடையாத நிலைமையில் அவைகளை தண்டிப்பதென்பது, ஒரு உயிரற்ற பிணத்தை சாட்டையால் ஒருவன் அடித்தால் அது எவ்வளவு புத்திசாலித்தனமோ அதேமாதிரிதான் முன் ஜென்மத்தின் பலன் குழந்தைப் பருவத்தில் நடப்பதுமாகும். இவ்விதமாக முன் ஜென்மத்தின் பலன் குழந்தை பருவங்களில் நடக்கும்படியான ஏற்பாட்டிற்கு கடவுளுடைய சம்மதமும் இருந்தால், கடவுளுடைய செய்கைக்கும், உயிரற்ற சவத்தை சாட்டையால் அடித்தவனின் செய்கைக்கும் வித்தியாசம் காண என்னால் இயலவில்லை. 'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதை ஆஸ்திகம் ஒப்புக்கொள்ளுவதானல் பூகம்பம் முதலிய விபத்துக்களால் சிசுக்கள் முதலானவர்கள் இறப்பதற்கு கடவுள் தான் காரணம் என்று ஏற்படும். அப்பொழுது இந்த பழி பாவங்கள் யாரைச் சார்வது!

வனங்களில் புலிகள் மான்களை கழுத்தைப் பிடித்து துடி துடிக்க இரத்தத்தைப் பருகுவதும், பாம்பு, தவளை தேரை முதலியவைகளைப் பிடித்து அவைகள் பதறப் பதறக் கொஞ்சங் கொஞ்சமாக விழுங்குவதும், அப்பொழுது அவைகள் பரிதாபமாகக்கதறுவதும், மற்றும் பல்லி, ஓணான், ஈப்புலி முதலியவைகள் சிறு பூச்சிகளை அப்படி அப்படியே பிடித்துத் தின்பதும்; சிறு மீன்களெல்லாம் பெரும் மீன்களுக்கிரையாவதும்; இது மாதிரியாக ஒரு பிராணியின் வாயே மற்ற பிராணிகளின் கொலைக் களமாகவிருப்பதும்; இவைகளெல்லாம் காருண்யம் நிறைந்த ஒரு கடவுளால் இப்பிரபஞ்சம் ஆளப்படவில்லை என்பதற்கு போதிய எடுத்துக் காட்டாக விருக்கிறதல்லவா!

கடவுள் பூரணத்துவம் பெற்றவர். குறை என்பதே அவருக்கில்லை என்று சொல்லப்படுகிறது. ஆகையால், கடவுள்

படைப்பிலும் அவருடைய குணங்கள் அமைந்திருக்கவேண்டும். ஏனென்றால், ஒரு சிறந்த சிற்பியால் செதுக்கப்பட்ட பதுமைகளில் அந்த சிற்பியின் சிறப்பைக் காண்கிறோம். ஒரு திறமையுள்ள பாடகர் பாடின பாட்டில் அவருடைய திறமை யமைந்திருக்கிறது. இதுபோல், உயர்ந்த கவிகள், சித்திரக் காரர்கள் முதலியவர்களுடையகவிகளிலும், சித்திரங்களிலும் உயர்வான கவி இன்பங்களையும், உயர்வான சித்திர வேலைகளையும் காண்கிறோம். அதுபோல் சகலத்திலும் பூரணத்துவம் பெற்ற கடவுள் படைப்பிலும் பூர்ணத்துவம் காணப்பட வேண்டும். ஆனால் அம்மாதிரி காணப்படவில்லை என்பது கீழே எழுதுவதிலிருந்து ஒருவாறு அறியலாம்.

மனிதன் குடலில் (Appendix) அப்பெண்டிக்ஸ் என்று ஒரு பாகம் அவசியமில்லாதது என்பது உடல் கூற்று வல்லுநர்களின் அபிப்பிராயம். அதைத்துண்டித்து எடுத்துவிட்டால் மனிதன் யாதொரு குறையுமின்றி வாழ்கிறான். அதோடு மாத்திரமில்லாமல் அது சில சமயங்களில் வீக்கமுண்டாகி வெடித்து அனேகரைக் கொன்றுவிடுகிறது. அந்த வீக்கம் உண்டாகும்பொழுது ஏற்படும் வயிற்றுவலியானது சொல்லத் தரமானதன்று. பூரணத்துவம்வாய்ந்த கடவுள் சிருஷ்டியில் இவ்விதமாக அனாவசியமான பாகங்கள் அதுவும் மனிதனை துன்பத்திற்கும், துயரத்திற்கும் இலக்காக்கும்படியாக இருப்பானேன்? இன்னும் ஆண்களுக்கு, பெண்களுக்கு மார்பில் இருக்கும் குறிபோல் இரண்டு இருப்பானேன்? அக்குறிகள் அழகுக்கு என்று சொல்லிவிடலாமென்றாலோ, அவைகளுக் கீழ் பாகத்திலுள்ள தசைகள்பெண்களுக்கிருப்பது போல் பால் சுரக்காவிடினும் சுரக்கக்கூடிய தன்மையில் அமைந்திருப்பது அங்கு மிகவும் பொருத்தமற்றதாயும், அர்த்தமற்றதாயும் இருக்கிறது. அறிவே சொரூபமாகியகடவுள் இவ்வாறு பொருத்தமில்லாத முறையில் சிருஷ்டி செய்திருக்கமுடியுமா? மற்றும் காதிலுள்ள அநேக நரம்புகளில், அநேகம் அவசியமில்லாதவைகள் என்று உடல் கூற்று அறிஞர்கள் சொல்லுகிறார்கள். இவைகளையெல்லாம் நாம் யோசித்தால் சிருஷ்டியில் பூர்ணத்துவம் இல்லையென்ற முடிவுக்கு வரவேண்டியிருப்பதாலும், மேலே சொன்ன பிரபஞ்ச நிகழ்ச்சிகளில், ஒரு அறிவுள்ள ஆட்சிக்குட்பட்டு பிரபஞ்சம் நடைபெறுவதாகக்கொள்ளமுடியாதபடியாலும், முன்னமேயே விளக்கிக் காட்டிய பூகம்பம் முதலிய உலக சம்பவங்களும், ஒரு பிராணியின் வாய் மற்ற பிராணிகளின் கொலைக்களமாகவிருப்பதும், பூரணத்

துவமும், காருண்யமும், அறிவும் கொண்ட கடவுள் ஒருவரால் இப்பிரபஞ்சம் சிருஷ்டிக்கப்படவில்லை என்பதையே பெரிதும் உறுதிப்படுத்தக்கூடியதாகவிருப்பதால், கடம் (மண் பாண்டத்தைக்) கொண்டு, அதை செய்த மனிதன் இருக்க வேண்டும் என்று அனுமானிப்பதற்குத் தகுந்தவாறு பிரபஞ்சத்தைக் கொண்டு இதைப்படைத்தவன் ஒருவனிருக்கவேண்டும் என்று அனுமானிக்கக்கூட முடியவில்லை என்று நான் நினைக்கிறேன். நான் அம்மாதிரி முடிவுக்கு வருவதற்கும், என்னை அம்மாதிரி ஒரு முடிவுக்கு வரும்படியாகத் தூண்டிய காரணங்களையும், மேலே எழுதியிருக்கிறேன். ஆகையால் கடத்தையும் பிரபஞ்சத்தையும், ஒப்பிட்டு வேதாந்திகள் கூறுவது, அவர்களுக்கே, அது ஆபத்தான வாதமாக முடிவதையும் அறிஞர்கள் கவனிக்கவேண்டும். முடிவில் ஒரு விஷயத்தை எழுதி இக்கட்டுரையை முடிக்க விரும்புகிறேன்.

நான் கடவுளை வெறுப்பதாக யாரும் நினைத்துவிட வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன். உலகிலுள்ள கொடுமைகளையகற்றி, துஷ்ட நிக்கிரகம் செய்து, சிஷ்டபரிபாலனம் செய்யக்கூடிய கடவுளை ஆவலோடு வரவேற்கிறேன். அதுவே என் பேரவா! அவ்விதம் சத்தியத்தை நிலைநாட்ட ஒருவர் இருந்தால் என்னைவிட மகிழ்ச்சியடையக்கூடியவர்கள ஒருவரும் இருக்கமுடியாதென்று தைரியமாகச் சொல்வேன். அப்பொழுது உலகில் ராணுவமவசியமில்லை, போலீஸ் அவசியமில்லை. இந்தசிலவு குறைந்தால்உலகில் பொருளாதார நெருக்கடியும் பஞ்சமும் தீர்ந்து விடும். சர்வதேச சங்கம் அவசியமே இல்லை. இத்துடன் வியாதி முதலியவைகள், கடவுளைக் கும்பிடுவதால் சௌகரிய மாகுமென்றால் வேறென்ன வேண்டும்! வைத்தியம், ஆஸ்பத்திரி முதலியவைகள் தேவை இராது; அதிலும் அநேக சிலவுகள் குறைந்து உலகத்தில் சுபிட்சமுண்டாவது மன்றி மக்கள் துயர் முற்றும் நீங்கிவிடும். அதுவுமல்லாமல் திக்கற்றவர்களையும், நிரபராதிகளை கடவுள் காப்பாற்றுவார். அப்பொழுது நாம் இறக்கும் தருவாயில் நமது மனைவி பிள்ளைகளைப்பற்றி வியாகூலமின்றி சாகலாம். இவ்வளவு சௌகரியங்கள் ஏற்படுவது பற்றி எந்த மனிதன் தான் சந்தோஷத்தோடு கடவுள் வேண்டுமென்று நினைக்காமலிருப்பான்! இம்மாதிரி யிருந்தால் நாஸ்திக மென்பது எப்பொழுதும் தலைகாட்ட முடியுமா! ஆனால் அப்படியொருகடவுள் இல்லையே என்பதுதான் விசனிக்கத்தக்க விஷயம். இம்மாதிரி மனிதனுக்குக்கடவுள் உதவிசெய்ய வில்லை

என்பதோடு அதனால் அநேக கொடுமைகளும் நடந்தும், நடந்து கொண்டும் வருகின்றன என்பதை வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியவனாயிருக்கிறேன். 'உடும்பு வேண்டாம் கையைவிடு' என்பதையொப்ப நன்மையில்லை யாயினும் தீமையாவது இல்லாமலிருக்க வேண்டுமல்லவா? கடவுள் நம்பிக்கையால் பிரயோஜனமில்லாமல் எத்தனை பணம் சேதம்! எவ்வளவு மனித முயற்சிகள் வீணாயிருக்கின்றன! கடவுள்பேரால் எவ்வளவு அடிதடிகள் கோலைகள்! எத்தனை பெண்கள், நிரபராதிகள் கஷ்டத்திற்குள்ளாகிறார்கள். இன்று பெண்ணடிமைக்கும், தீண்டாமைக்கும், நான்கு வர்ணங்கள் தோன்றுவதற்கும் கடவுள் பயமே காரணம். கடவுள் தண்டிப்பார், கடவுள் செய்தார், கடவுள் சொன்னார் என்று சொல்லி, கடவுளிடம் மக்கள் கொண்டபயத்தை அனுகூலமாகக் கொண்டே, மனிதர்களை மனிதர்கள் அடிமைப் படுத்த ஏது வாயிற்றென்பதை சிந்தித்துப்பார்ப்பவர்கள் அறிவார்கள். இப்படி கடவுள் பெயரை, அடக்கியாள்வோர்களும், வலியோர்களும் தங்களுடைய ஆயுதமாக உபயோகப் படுத்தி மற்ற ஏமாந்த எளியோர்களை கொடுமைப் படுத்துவது எல்லோரும் அறிந்த விஷயம். இந்தநிலைமையில் இருப்பதால்தான் வலியவர்கள் ஆயுதங்களாகக் கொண்டிருக்கும் கடவுளையும் சூட்சி செய்பவர்கள், தங்களுக்கு அனுகூலமாக வைத்திருக்கும் கடவுள், வேதம், முன்ஜென்மம், ஸ்மிருதிமுதலியவைகளையும், ஒழித்தாலொழிய எளியவர்களை அடிமைத்தனத்திலிருந்து மீட்க முடியாது என்று ஒரு சாரார் தீவிரமாகக்கருதுகிறார்கள். ஒருகாலத்தில் அமிர்தம் என்று சொல்லும் மாதிரியில் இருந்த ஒரு விதி, ஜன சமூகத்திற்கு, மற்றொரு காலத்தில் விஷம் போலாகிவிடுவது இயற்கை. அதுபோலவே, ஒரு காலத்தில் கடவுள் பயமானது மக்களை நல்வழியில் சீர் படுத்துவதற்கும், மக்களுள் ஏற்பட்ட கொடுமைகளை அகற்றுவதற்கும் ஓர் ஆயுதமாகக் கொள்ளப்பட்டது. அதனால் மதத்தலைவர்கள் மக்களிடம் மேலும் மேலும் கடவுள் பயம் வளரும்படி செய்தார்கள். இவைகளெல்லாம் நல்ல நோக்கத்துடன் செய்யப்பட்டிருக்கலாம். ஆனால் நாட்கள் செல்லச் செல்ல இம்முறை கோரிய பலனை அளிக்கவில்லை என்பது சரித்திரங்களின் சான்று. அதுமட்டுமோடில்லாது, மக்களிடையில் ஒரு காலத்தில் அமிர்தம் போன்றிருந்த கடவுள் பயம் விஷமாக மாறிவிட்டது. நான் மேலே தெரிவித்தது போல மக்களை மக்கள் அடிமை கொள்வதற்கு கடவுள்

பயமே காரணமாக ஏற்பட்டுவிட்டது. ஆகையால் அக்காலத்தில் அறிஞர்களால் போற்றி வளர்க்கப்பட்ட கடவுள் பயத்தை, இக்காலத்தில் அறிஞர்களால் அழிக்கப்படவேண்டிய அவசியத்தில் கொண்டு வந்துவிட்டுவிட்டது. நிற்க,

இனியொரு விஷயத்தை எழுதாவிடில் இவ்வியாசம் பூர்த்தியானதாகச் சொல்லமுடியாது. அதாவது ஒரு சாரார், 'பிரபஞ்சத்தைப் படைக்க ஒரு கடவுளிருக்கவேண்டும் என்றால், கடவுளைப் படைக்கவும் வேறொருவர் வேண்டும்' என்று வாதிக்கின்றனர். வெகு காலமாக ஆஸ்திகத்தில் மூழ்கியவர்களுக்கு இது விதண்டாவாதமாகத் தோற்றலாம். எதிர்பாராத முறையில் இம்மாதிரி வாதிப்பதைக் கேள்வியுற்றவுடன் திகைப்பும் வெறுப்பும் ஏற்படலாம். இது தர்க்கரீதியான வாதமல்ல என்று உண்மையாகவே நினைக்கலாம். ஆனால் நிதானமாகவும், நடு நிலைமையாகவும் யோசித்துப் பார்த்தால் பிரபஞ்சம் இருப்பதற்கு கடவுள் அவசியமென்று வாதிப்பது நியாயமானால், கடவுள் இருப்பதற்கு வேறு ஏதாவது ஒன்று அவசியம் என்று கூறுவதும் நியாயந்தான். கடவுள் அனாதி என்று சொல்வதானால், ஏன் பிரபஞ்சமும், உருமாறுகிறதே ஒழிய, அதுவும் அனாதிதான். பிரபஞ்சத்திலுள்ள பஞ்ச பூதங்களும், யாதாவது ஒருவிதமாக, அழியாமல் அனாதியாய் அந்தமுமில்லாமல் இருந்துகொண்டுதானிருக்கும். வேறொன்றினுடைய அவசியமில்லாமல் கடவுளிருக்கிறார் என்று வாதிப்பவர்கள், கடவுள் என்று ஒன்றினுடைய அவசியமில்லாமல் பிரபஞ்சம் ஏன் தானாக இருக்கமுடியாது என்பதை யோசித்துப்பார்க்கவேண்டும். பிரபஞ்சத்தை யார் படைத்தார்கள் என்ற கேள்வியும் எழுவது நியாயந்தானே. இம்மாதிரியும் தர்க்கிப்போர்கள் இருக்கிறார்கள் என்பதை உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டவன் என்ற முறையில் இக்கட்டுரை முடிவில் எழுதினேன். மற்றபடி பிரபஞ்சத்தைக்கொண்டு கடவுளிருக்கமுடியுமா என்று பார்த்தாலும் கடவுள் விஷயம் சந்தேகத்திற்கே, ஏன்! இல்லை, இருக்கமுடியாது என்ற முடிவுக்கே வரவேண்டியதாயிருக்கிறது என்பதைப்பற்றி விரிவாக எழுதியிருக்கிறேன். இவைகளெல்லாம் என்னுடைய அபிப்பிராயங்கள்தான். குற்றங்களிருக்கலாம். ஆகையால் வாசகர்கள் நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்பதே என்னுடைய வேண்டுகோளாகும்.

கர்ப்பத்தடை அவசியம்.

[பௌளன் பார்ட்டிங்டன்.]

ஒரு ஜட்ஜியின் அரிய தீர்ப்பு.

———)o(———

முகவுரை.

சில ஆண்டுகளுக்கு முன் அதாவது 30 வருடங்களுக்கு முன், ஓர் அறிவுள்ள மாஜிஸ்டிரேட் சில அற்ப கூட்டங்களில் கர்ப்ப ஆட்சி என்பது மிகவும் பயங்கரமானதும், அறிவை உண்டுபண்ணக்கூடியதுமான ஓர் விஷயம் என வெளியிட்டார்.

"இந்நாடு பெரிய ஜன சமூகத்தை உடையதாய் இருக்கிறது. இந்நாடு செழிப்புற்று விளங்கவேண்டுமானால் ஜனப்பெருக்கம் வேண்டியதாயிருக்கிறது. இஃது அன்றி வேறு ஒரு முறையாலும் முன்னேற்றமடைய முடியாது. இந்நாட்டு மனைவிமார்கள் பிரசவத்தை குறைப்பதற்கான முறைகளை அனுஷ்டிப்பார்களேயானால் கிரேட் பிரிட்டனின் அழிவு அல்லது வீழ்ச்சிக்கு அறிகுறி என்பதைப்பற்றி சந்தேகப்பட வேண்டியதில்லை."

அவர் சொன்ன அம்மொழிகள் இந்நாளில் மிக பிற்போக்கானதென்றும், முட்டாள்தனமென்றும் சொல்லி வரக்கூடியதை நான் கேட்டு வருகிறேன்: அவர் தனது பிரசங்கத்தில் அவ்வாறு கூறினதற்கு, ஒருவேளை ஜனப்பெருக்கம் அதிகரிப்பதால் பணக்காரர்கள் தங்களுடைய வேலைகளை குறைந்த செலவில் முடித்து விடுவார்கள் எனக்கருதி சொல்லியிருக்கக்கூடும் என நான் ஐயுறுகிறேன்.

பெண்கள் பிள்ளை பெறும் இயந்திரம்போல் தங்கள் வாழ்நாளை வீண் நாளாக வாழ்ந்து வருவதை அறியார் போலும். பிறக்கிற குழந்தைகளின் பெரும் பாகம் எந்த நிலையில் இருந்து வருகிறார்கள் என்றும், அவர்களின் அதிகரிப்பால் எவ்வளவு ஒழுக்கக் கேடுகள் ஏற்படுகிறதென்றும் அறியார்போலும். அறிஞர் ஆகிய அம்மாஜிஸ்டிரேட் இதற்கு எந்த சமாதானமும் காணமுடியாது. அவர் குறுகலான மனப்

பான்மையை உடையவராயிருந்திருக்க வேண்டும். ஏனெனில், சட்டத்தில் காணப்படுகிற ஒரு எழுத்துகூட விடாமல் அதன் படி தான் தீர்ப்புக்கூறி வந்த பழக்கத்தால் விரிந்த மனப்பான் மை எங்கிருந்து எப்படி உண்டாகக் கூடும்? தான் சொன்ன கூற்றுக்குப் பதில் சொல்லுவதற்கு இல்லாமல் அவ்வறிஞர் மறைந்து விட்டார். ஆகவே இறந்தவரைப் பற்றிக் குறை கூறுவது அழகல்ல என்பர். அதற்கிணங்க, அவரைக் குறித்து அதிகமாக ஒன்றும் கூறாமல் ஒன்றுமட்டும் இச்சம யத்தில் சொல்லி விடுகிறோம்.

அதாவது, யாதொரு பாவமும் அறியாத பச்சிளங்குழந் தைகள் பிறக்கும்போதே பல குறைகளோடு பிறப்பதற்கு என்ன காரணம் என்பதை அறியாமலும் அதற்காக கருணை காட்டாமலும் அவர் வெளியிட்ட அவ்வசனத்திற்காக ஒரு வரும் வருந்தாமலிருக்க முடியாது

இச்சிறிய புத்தகத்தில் தோழர் பௌவன் பார்ட்டிங்டன் மேற் கோளாகக் காட்டியிருக்கும் ஜஸ்டீஸ் மெக்கார்டீ என்ப வர்கர்ப்ப ஆட்சியைப்பற்றிகூறியஅவருடையஅறிவிற்கும்நாம் முன்சொன்ன மாஜிஸ்டிரேட்டின் அறிவிற்கும்உள்ள வித்தியா சத்தை வாசகர்களே அறியும்படி விட்டுவிடுகிறேன்.

மனிததன்மையோடு கூடிய கற்றறிந்த ஜட்ஜி முன்னி லையில் கரு அழித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்ட ஓர் மாது நியாயம் விசாரித்து தண்டிப்பதற்காக கொண்டுவரப்பட்டாள். சேம்பேறி சுயநலக்காரனாகிய கணவனதுகுற்றத்திற்குஇலக்கு ஆகிய இவ்வேழை மாதைத்தண்டிக்கஅவர் பிரியப்படவில்லை. ஆனால் அதற்கு பதிலாக 2 வருடம் ஜாமீனில் விடுவித்தார். அவர் அன்று பெஞ்சிலிருந்து அக்கைதியை நோக்கி சொன்ன மொழிகள் என்றும் அழியாதபடி போற்றிவரத் தகுந்ததா கும். அவர் கூறியதாவது:—

"இந்த தேசம் (இங்கிலாந்து) அதிக ஜனத்தொகையை ஏற்கெனவே பெற்றிருக்கிறது என்பது எனது அபிப்பிராயம். கர்ப்ப ஆட்சியைக்குறித்த அறிவுசகலருக்கும் அதிலும்ஏழைம க்களுக்கு அவசியமாக கற்பிக்கப்பட வேண்டும். இப்பொழுது உன்னுடைய கேஸ், நான் மேலே சொன்னவைகள் எவ்வளவு பொருத்தமானது என்பதை விளக்காமல் இராது. நீயோ சிறந்த ஒழுக்கத்தை உடையவள். உனக்கோ 7 குழந்தைகள்

இருக்கின்றன. உன் புருஷனோ ஒரு சோம்பேறி. குழந்தைகள் எல்லாம் வறுமையிலே பிறந்து, வறுமையிலே வளர்ந்து வறுமையிலே அவைகளின் பிற்கால வாழ்க்கையை நடத்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். அக்குழந்தைகளை காப்பாற்றும் பொறுப்பும் உன் தலையியே விழுந்திருக்கிறது. எனவே இன்னொரு குழந்தையும் பிறந்து விட்டால் உனது கஷ்டம் இப்பொழுது இருந்துவருவதை விட இன்னும் அதிகரிக்கும் என நீ ஒரு சமயம் பயந்திருக்கக் கூடும். அதை நான் நன்கு அறிவேன். ஏனெனின் சாதாரண மனிதர்களை விட பொதுவாக ஜட்ஜிகள் மக்களின் ஜீவியத்தைக் குறித்து அதிகமாகத் தெரியக் கூடும். ஆகவே, நான் உன்னை தண்டித்து ஜயிலுக்கு அனுப்பாமல் 2 வருஷம் வரை ஜாமீனில் விடுவிக்கிறேன்''.

தோழர் ஜஸ்டிஸ் மெக்கார்டி கூறியவார்த்தைகள யாவும் ஞானமும், நீதியும், இரக்கமும் கூடியதாகும். வறுமையில்உழன்று தத்தளித்துதகரைகாணாது இருக்கும் அம்மாதை சிறைக்கனுப்புவதென்றால் மிகவும் பரிதாபகரமான காட்சியாகும்,ஏனெனில் அம்மாது, தனக்குமேலும் மேலும்கஷ்டத்தை கொடுத்து வந்த அப்பிள்ளைப் பேற்றை,துன்பத்தினின்றும், சற்று தப்பித்துக் கொள்ளச் செய்த ஒரு காரியமாகும். கூண்டின் மேல் நின்று கொண்டிருந்த அப்பரிதாபகரமான அம்மாதை சட்டப்படி 2 வருஷம் ஜாமீனில் விடுவிக்காமல், அச் சோம்பேறி புருஷனை சிறைக்கு அனுப்பியோ அல்லது வேறு வழியில் தண்டித்தோ இருந்திருப்பாரேயானால் ஜஸ்டீஸ் மெக்கார்டி ஒரு புதிய புரட்சியை உண்டுபண்ணினவராவர்.

இந்த அறிஞர் ஜஸ்டீஸ் மெக்கார்டியின் மேற்கோளை விவரித்துக் கூறும்போது தோழர் பௌவன் பார்டிங்டன் கர்ப்ப ஆட்சி ஒரு தனித்த ஆளுக்கு மட்டும் தேவையானதல்ல; பொதுவாக எல்லா மக்களுக்கும் எல்லா தேசத்துக்கும் அவசியம் என்பதை நன்கு விளக்கிக்காட்டியிருக்கிறார். கர்ப்ப ஆட்சியைக் கையாளாது போனதால் உலகிலேவெறுக்கத்தக்க மக்களின் எண்ணிக்கை எவ்வளவு அபிரதமாக உற்பத்தியாய்க் கொண்டுவருகிறது என்பதைக் காட்டி அதனால் கர்ப்ப ஆட்சியின் அவசியத்தை காட்டியிருக்கிறார்.

நகைப்புக்கு இடமான இவ்விஷயத்தைக் குறித்து ஒருவர் அல்ல பல டாக்டர்கள் தங்களது கவனத்தைச் செலுத்தி வந்திருக்கிறார்கள். என்னுடைய வாசஸ்தலத்திற்கு 1 மைல்

தூரத்தில் ஓர் ஏழை குடும்பம் இருந்தது. அவர்களுக்கு 8 குழந்தைகள் இருந்தன. அக்குடும்பம் கொடிய வறுமை யால் பீடிக்கப்பட்டிருந்தது. தந்தையோ நோயாளி, குடும் பத்தைக் காப்பாற்ற உதவி செய்யமாட்டான். ஆனால் எந்த விதமாகவோ குடிப்பதற்கு பணம் சம்பாதித்துக்கொள்ளு வான். அவன் ஒரு குடிகார வெறியன். அவன் மனைவி ஆஸ்பத்திரியில் இருக்கிறாள்.

காமப்பிரியனாகிய அச்சண்டாளக்கணவனை விட்டுசிறிது காலமாவது சுகம் பெற்று வருகிறாள்—குழந்தைகளோ, குடி காரனுக்குப் பிறந்ததினால் ஒருவேலைக்கும் பிரயோஜனமற்ற தாய் மூளைப் பலமும் உடல் கட்டும் இல்லாமல் இருந்து வருகின்றனா.

இம்மாதைக் கவனித்து சிகிச்சை செய்து வந்த டாக்டர் பரந்த நோக்கமும், மனிதாபிமானமும் பொருந்தியவர். ஆத லினால் அப்பெண்ணின் இந்நிலைக்கு கர்ப்ப ஆட்சியின் அறிவு இல்லாத குறையென்பதை நன்கு உணர்ந்தவராவர்.

இத்துன்பத்தினின்று விடுவிக்க அப்பெண்ணிற்கு ஏதே னும் செய்யவேண்டும் என்பது அவருடைய உண்மையான அந்தரங்க எண்ணம். ஆனால் தற்கால நிலமைக்கு அவர் ஒன்றும் செய்யமுடியாமல் இருக்க நேரிட்டது. ஒன்றுக்கும் உதவாத குடிகாரனாகிய அக்கணவன் அப்பரிதாபகரமான அவனுடைய மனைவியின் உடலுக்கு எஜமானனாய் விளங்கு கிறான். அம்மாதை மேலும் மேலும் துன்பத்தில் அழுத்தா மலிருப்பதற்கு அவனை மனிதத்தன்மையோடு விடுவிப்பதை தவிர வேறு மார்க்கம் எதுவுமில்லை.

இத்தகைய சம்பவம், ஏதோ அங்கு ஒன்று இங்கு ஒன் றுதான் நடக்கிறதென்றும், இதெல்லாம் மிக அபூர்வமான காட்சியென்றும் சிலர் சொல்லக்கூடும். அவ்வாறு சொல்லக் கூடியவர்கள், இப்புத்தகத்தில் தோழர் பௌன் பார்ட்டிங் டன கூறும் உதாரணங்களைக் கொண்டாவது தமது கூற்றை மாற்றிக்கொள்ளக் கூடும்.

மேலும் இதுபோன்ற கணக்கற்ற சம்பவங்கள் காணக் கிடைக்கிறதெனக் கூறுகிறார். அல்லது உங்களில் யாரேனும் அடிக்கடி கோர்ட்டுகளுக்குப்போய் அங்கு நடக்கும் காட்சி களைப் பார்ப்பது வழக்கமாயிருந்தால் லண்டன் கோர்ட்டே

அல்லது இதுபோன்ற பெரிய நகரங்களிலுள்ள கோர்ட்டுகளி லோ போய்ப் பார்த்தால் நாள் 1-க்கு 100க்கணக்கான, இது போன்ற சம்பவங்கள் சாட்சியங்கூறுவதைக் காணலாம். சில வேலைகளில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதுமுண்டு. சில வேலைகளில் இல்லாமலிருந்தாலுமிருக்கலாம். ஏனெனில் இது சகஜமாக இருந்து வருவதால்தான்.

முதலாவது உண்மையாகப் பாடுபடுகிற மதக்குருக்கள் யா வரும் தோழர் பார்ட்டிங்டன் கூறுவதை முழு மனதோடும் ஆதரிப்பார்கள்; இரண்டாவது சீர்திருத்தவாதிகள் ஏகமாக ஆதரிக்காமல் இருக்கமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் அடிக்கடி "ஆரோக்கியமும் பலமும்" என்ற பத்திரிகையில் இதைக்குறித்துக் காலாகாலங்களில் எழுதிவந்ததை மெய்ப் பிக்கவாவது இதை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

அதனால்தான் தோழர் பார்ட்டிங்டன் இவ்விஷயத்தை அவ்வளவு அழுத்தமாகவும், இப்பிரச்சினை சகல தேச மக்க ளுக்கும் அவசியமானதும் விரைவில் கையாளவேண்டியதென் றும் வலியுறுத்திக்கூறுகிறார்.

ஒவ்வொரு கணவனும் வேண்டுமென்றேதன மனைவியை துன்பத்திற்குஆளாக்கவேண்டுமென்றகருத்துகிடையாது. அப் படியானால் ஏன் அவ்வாறு இருக்கிறார்கள் என்றால் அறி யாத்தனமேயாகும். கலியாணம் செய்துகொண்ட அநேக ஆடவர்கள் அறியாமையால் தங்கள் மனைவிமார்களுக்குத் துரோகிகளாகிவிடுகிறார்கள்.

நாகரீகமடைந்த இந்த நாளில் கூட இவ்வறியாமை மிக விரிவாகப்பரவியிருக்கிறது. இவ்வாசிரியருடையகூற்றிலிருந்து விவாகம் ஆகும் இருபாலருக்கும் "அறியாமை" என்பது தான் முதன முதலாக காணப்படுகின்றது. சாதாரண கர்ப்ப ஆட்சியைக் குறித்துச்சிறிதுகூட அவர்களுக்குத் தெரியாது. தேவையற்ற, பயனற்ற குழந்தைகள் உற்பத்தியாவதற்கு கரு உற்பத்தியைக் குறித்த அறிவு அவர்களுக்கு இல்லாமலிருப்ப தே முக்கிய காரணமாகும்.

இக்குற்றம், பிரச்சினையைப்பற்றி பேசும்போது எதிர்க் கும் வகுப்பாருக்கே சேரும். சமீப காலத்தில், கர்ப்ப ஆட்சி சாலை ஒன்று நிறுவ வேண்டும் என்று ஓர் முனிசிபாலிட் டியில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. அதை அம்முனிசி

பாலிட்டியார், அந்த ஸ்தாபனம் ஏற்படுத்தினால் மக்களின் ஒழுக்கத்திற்கே பங்கம் ஏற்படும் எனக்கூறி தடுத்து விட்டார்கள். எத்தனை சமயங்களில் இத்தகைய அபிப்பிராயங்களபிற்போக்கானதென்றும், முட்டாள்தனமானதென்றும் தோழர் பார்டிங்டன் எடுத்துக் காட்டியிருக்கிறார். இன்னும் அவர்களும் பழைய கூற்றை நிலை நிறுத்துவதின் காரணம் என்னவெனில் நான் இதுவரை சொல்லிவந்ததுபோல் அறியாமையேயாகும். அதனால்தான் இத்தகைய கொடூரக் காட்சிகள் ஏற்படுகின்றன.

புருஷனும் மனைவியும் தமமுடைய வாழ்க்கை ஒரு சந்தோஷகரமானதாக இருக்கவேண்டுமென்று விரும்பினால் அதற்கான வழியை அறிந்துகொள்ள சகல சுதந்திரமும் அவர்களுக்கு உண்டு. அன்பே பிரதானமாகக் கொண்டு விளங்கும் அனேக கணவன்மார்கள் தங்களுடைய மண வாழ்க்கையை ஒரு சந்தோஷகரமானதாக்க விரும்புவோர்கள் இருக்கிறார்கள். அதேபோல் ஏராளமான மனைவிமார்களும், தாங்கள் அன்பே பிரதானமாகக்கொண்டு தங்கள் வாழ் நாட்களை இன்பகரமாக்கப் பிரியங்கொண்டிருப்பதையும் காணலாம்.

அத்தகைய கணவன்மார்களும் மனைவிமார்களுமே ஒரு நாட்டின் முதுகெலும்புக்கு ஒப்பாவார்கள். அவர்கள் தாங்கள் கோரிய தங்கள் வாழ்க்கையை இன்பகரமாக்குவதற்கான சகலவிஷயங்களையும் அவர்கள் அறியுமபொருட்டு உதவி செய்யவேண்டுவதாகும். அவர்களில் பலர் ஏழைகளாய்த்தோன்றுவார்கள். ஆனால் ஒழுக்கத்திலும், ஆரோக்கியத்திலும், பலத்திலும் மிஞ்சியவர்களாய் தோன்றுவது நிச்சயம்.

தோழர் பார்ட்டிங்டனுடைய உண்மையான எண்ணம் இத்தகையோர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதாகும், அதை எவ்வாறு ஆற்றுவது எனபதும் அவருக்குத் தெரியும்.

மற்றவர்களைப் பொருத்தமட்டில்......................பொதுவாக மக்களின் நலனைக்கருதி அது சீக்கிரத்தில் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்துதான் தீரவேண்டி இருக்கிறது.

ஆசிரியர்,

"ஆரோக்கியமும் பலமும்"

கர்ப்ப ஆட்சி.

கர்ப்ப ஆட்சியைக் குறித்து அறிஞர், ஜஸ்டிஸ் மெக்கார்டி சொன்னதை தோழர், பௌடன் பார்ட்டிங்டன் எழுதுவதாவது:—

இங்கிலாந்திலுள்ள லீடிஸ் அஸிஸ் என்ற இடத்தில் தோழர் ஜஸ்டிஸ் மெக்கார்டி அவர்கள் "கர்ப்பத்தடையைக் குறித்த சட்டம் அதி விரைவில் சட்டமாக்கப்படவேண்டும்.

நம் நாடு அதிகமான ஜனப் பெருக்கத்தை அடைந்து கொண்டே வருகிறது" எனக் கூறியிருக்கிறார்.

ஏதோ ஒரு குற்றத்திற்கு ஆக ஓர் மாது இவரால் விசாரிக்கப்பட்டாள். அம்மாது 7-குழந்தைகளைப் பெற்றவள். இனியும் இரண்டு வருடத்திற்குள் மறுபடியும் குழந்தை பிறந்துவிடும். வறுமையின் காரணமாக மேலும் மேலும் குழந்தைகள் பிறப்பதைப்பற்றி அம்மாது கலக்கமுற்றாள். ஆகவே இத்தகைய துன்பத்தினின்று தப்புவதற்காக அம்மாது ஏதோ ஒரு முறையை அனுஷ்டித்தாள். இதனால் அம்மாதை குற்றவாளியாக்கி விசாரிக்கப்பட்டாள்.

அச்சமயத்தில், அம்மாதை நோக்கி நியாயாதிபதி ஜஸ்டிஸ் மெக்கார்டி பின்வருமாறு கூறலுற்றார்:—

"நீ உன்னுடைய கர்ப்பத்தை அழிப்பதற்காக முயற்சி செய்ததாகச் சட்டப்படி குற்றவாளியென காணப்படுகிறாய். இதற்காகத்தண்டிக்க உத்திரவுபிறப்பிக்கவேண்டுமா என்பதை நான் யோசிக்கவேண்டியவனாயிருக்கிறேன். ஆனால் அதே சமயத்தில், நியாயாதிபதி எந்த நோக்கத்தோடு சட்டமியற்றப்பட்டிருக்கிறதோ அதை விட்டும் சற்றும் பிரளாதவராய் இருத்தல் வேண்டும். என்பதையும் நான் கூற மறந்துவிடமாட்டேன்.

எனவே கர்ப்பச்சிதைவைக்குறித்துச் சட்டம் என்னசொல்லுகிறதென்றால், "இந்நாடு ஜனத்தொகையில் மிகவும் அதிகரித்திருப்பதாக நான்நினைக்கின்றேன். கர்ப்பத்தடையைக்குறித்த அறிவை மக்களுக்குள் அதிகமாகப் பரவச் செய்யவேண்டும்

என்றும் அதிலும் ஏழை மக்களுக்கு அது துரிதமாக பரவச் செய்யவேண்டுமென்பதாக நான் அபிப்பிராயப் படுகிறேன். இன்னும் விரிவாகக் கூற விரும்புகிறேன். கர்ப்பச்சிதைவைக் குறித்து இப்பொழுது இருந்துவரும் சட்டமானது முழுவதும் மாற்றப்படவேண்டும் என நான் கருதுகிறேன். இதுவரை நான் சொல்லிவந்ததை உன்னுடைய கேஸ் நன்கு விளக்கும். நீயோ சிறந்த ஒழுக்கத்தையுடையவள் என்பதில் சந்தேகமில்லை. பலவிதமான துன்பங்களுக்குமிடையே உனது பெரிய குடும்பத்தைக் காப்பாற்றவேண்டிய பொறுப்பையும் மேற்கொண்டு ஒழுகி வருகிறாய். உனக்கோ ஏற்கனவே 7-குழந்தைகள் இருக்கின்றன. எல்லாம் வறுமையிலே பிறந்தும் வறுமையிலே வளர்ந்தும், வறுமையிலே அவர்களுடைய எதிர்கால வாழ்க்கையை நடத்தப்படவேண்டியதாய் இருக்கிறது. மேலும் உனக்கு பொருள் இல்லை. உதவியுமில்லை. உனது கணவனோ ஒரு சோம்பேறி. ஆகவே, இன்னொரு குழந்தை பிறந்தால் உனது துன்பம் அதிகப்படும் என்று நீ அஞ்சினாய்.

“நான் உன்னை நம்புகிறேன், ஏன் அவ்வாறு நம்புகிறேன் என்றால்! சாதாரண மனிதர்களைவிட ஒரு நியாயாதிபதிக்கு மனித வாழ்க்கையைக் குறித்து நன்கு தெரியும். ஆகவே, நான் தண்டிக்கப் போவதில்லை, ஆனால் இரண்டு வருடம் வரை நன்னடத்தை ஜாமீன்பேரில் உன்னை விடுதலை செய்கிறேன்” எனக்கூறினார் பின்பு உடனே அம்மாதிற்கு தன் ஊர் போய்ச்சேர பணமிருக்கிறதா என வினாவினார் அதற்கு வர்டன் இரயிலுக்கு பணம் கொடுத்தனுப்பவேண்டும் எனக் கூறினான் – தன்பின் தன்முன் வீற்றிருக்கும் ஜட்ஜிகளை நோக்கி தன் இரு கரங்களையும் உயர்த்தி “கனவான்களே! 7-குழந்தைகட்கு தாய் அய்யா” என மொழிந்தார்.

சமூகப் பிரச்சினை.

மற்றொரு சமயம் இதுபோன்ற குற்றத்திற்காக வேறு ஒரு பெண் குற்றஞ்சாற்றப்பட்டு தோழர் ஜஸ்டிஸ் மெக்கார்டியின் முன்பாக விசாரணைக்குக் கொண்டுவரப் பட்டாள். அச்சமயம் அவர் மொழிந்ததாவது:—

இக்குற்றச் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்ட சட்டத்தின் நோக்கமானது அவசியம் மாற்றப்படவேண்டும். அதிலும் அதி துரிதமாக மாற்றப்படவேண்டும் என நான் மதிக்கிறேன். ஏன் அவ்வாறு கூறுகிறேனென்றால், நாம் 1931-ம்வருடத்தில்

வாழ்கிறோம். நாம் வாழ்வது மத்திய காலமும் அல்ல. அல்லது ஒரு நூற்றாண்டிற்கு முந்தின காலமும் அல்ல என்பதை முதலில் நாம் உணரவேண்டும்.

சமுதாயத்தில் உள்ள வழக்க பழக்கங்கள் யாவும் புண்டைய நாளில் இருந்ததைவிட எவ்வளவோ மாறுபட்டும் திருந்தியும் இருந்துவருகின்றன நீயோ மிக திடகாத்ரமுள்ள சரீரத்தையும் தைரியமுமுள்ள பெண். ஆனல் நீயோ புத்தி மாறாட்டமுள்ள குழந்தையைப் பெற்றெடுத்திருக்கிறாய். அக்குழந்தை அதன் காரணமாக அவதியுற்றுக்கொண்டிருக்கிறது. இதைக் கண்ணுற்ற நீ, இனியும் மற்றொரு குழந்தையைப் பெற்று இத்தகைய துன்பம் அனுபவிக்க நேருவதை சகியாமல் அவ்வாறு செய்யத் துணிந்திருக்கலாம்'' எனப் புகன்றார்.

பிரிடனின் ஜனத்தொகை அதிகரித்திருக்கிறது என்று ஜட்ஜி கூறியது சரி. அதில் சிறிதும் சந்தேகம் இல்லை. ஆனால், இச்சமயத்தில் நாம் ஒன்றை மட்டும் மறந்துவிடக் கூடாது. அதாவது, இயற்கையானது காப்பத்தின் சக்தியை அதிகரித்து இருந்து வருவதை நாம் காண்கிறோம்.

உலகின்கண் காணப்படக்கூடிய உயர்வர்க்கங்களிலும் உற்பத்தி அதிகரித்து வந்திருக்கிறதை நாம் காண்கிறோம். அவைகள் யாவும் தேவைக்கு மேல் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம்.

சிறிய உயிர்களிடத்தில் பலம் என்பது அடிக்கடி காணப்படுவதில்லை. பாரில் உலவுகின்ற ஜீவராசிகளைப் பார்த்தால் அவைகளின் ஆயுள் குறைந்து வருவதை ஒரு பக்கம் கண்டாலும் அவைகளின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்து வருவதை மற்றொரு புறம் பார்க்காமல் இருக்க முடியாது. இதனால் வளர்ச்சியும், பெருக்கமும் குறைகிறது.

நாம் எதிர்பார்க்கிறபடி எல்லா உயிர்களையும்விட மனிதன் மேம்பட்டவன் என்றால் விருத்திபண்ணுவதிலும் ஏனைய உயிர்களைவிட மாறுபட்டு இருக்கவேண்டுவது அவசியமல்லவா? அப்படிக்கில்லாமல் ஜீவனோபாயத்திற்கே ஏதுவில்லாத ஒரு நிலை வந்துங்கூட வம்ச விருத்தி பண்ணுவதில் பின்னடையவில்லை. இவ்வெண்ணம் வெகுநாட்களுக்கு முன்னமே மால்துஸ் என்பவரால் தோன்றப்பட்டு மற்ற தேசங்களில் இதைப்பற்றி மேன்மையாகப் பேசப்பட்டும் வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து ஆகாரப் பொருள் வந்து இறங்கிக் கொண்டு இருக்கும் வரை ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டேயிருக்கும

ஜனத்தொகையின் விருத்தி.

கடந்த ஒரு நூற்றாண்டிற்குள் உலகின் ஜனத்தொகை அதி ஆச்சரியப்படக்கூடிய ஓர் அளவிற்கு விருத்தியடைந்து கொண்டு வருகிறது என்பது மறுக்க முடியாத ஓர் விஷயமாகும். இங்கிலாந்திலும், வேல்ஸிலும் 1600-ம் வருடம் 48,00,000-ம் என்றும்; 1700-ம் வருடம் 60,00,000-ம் என்றும், 1801-ம் வருடம் 88,90,000-ம் என்றும்; 1901-ம் வருடம் 325,30,000 ம் என்றும்; 1914-ம் வருடத்தில் 270,00,000-ம் வரை உயர்ந்து விட்டது என்றும் தெரியக் கிடக்கிறது இதில் இருந்து கடந்த ஒரு நூற்றாண்டில் எவ்வளவு அதிகமாக விருத்தியாயிருக்கிறது என்பது நன்கு விளங்கும். இங்கிலாந்திலிருந்து வெளிநாடுகளுக்கு குடி போகாமல் இருந்தால் அதன் ஜனத்தொகை இப்பொழுது இருப்பதைவிட எத்தனையோ மடங்கு அதிகப்பட்டிருக்கும்.

1814-ம் ஆண்டில் உலக ஜனத்தொகை 70-வது கோடி என்றும் 1914-ம் ஆண்டில் 165 கோடி என்றும் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்து கடந்த 100 வருடங்களுக்குள் இரட்டிப்பாக அதிகரித்திருக்கிறது என்பது புலனாகும்.

"இயற்கையிலே, உலகம் தாங்கக்கூடிய ஜனத்தொகைக்கு ஓர் அளவு இருக்கிறது, ஏனெனில் படிப்பு விகிதத்தைக் குறைக்கவோ தடுக்கவோ உலகத்தின் எந்த பாகத்திலும் யாதொரு விதியும் காணப்படாததால், பிறப்பு விகிதத்தை சரிகட்டக்கூடிய மார்க்கம் உலகத்தில் காணப்படும் யுத்தங்களும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களுமே இயற்கையான விதி" என டாக்டர் இன்ஞ் பிறப்பு விகிதத்தை விசாரிக்க ஏற்படுத்திய கமிஷனுக்கு தெரிவித்திருக்கிறார்.

"மத்திய காலத்திலே பிறப்பு விகிதம் 45 வீதமாயும் இறப்பு விகிதமும் அதே விகிதாச்சாரப்படியே இருந்து வந்தது. கடந்த ஒரு நூற்றாண்டுகளுக்குள் இறப்பு விகிதம் 14 ஆக மாறிவிட்டது ஆனால் பிறப்பு விகிதமோ 40-க்கு குறையாமல் இருந்து வருகிறது. இதே விகிதாச்சாரப்படி உலகத்தில பிறப்பு இறப்பு இருந்து வருமேயானால் இப்

பொழுது இருந்து வரும் 170 கோடி ஜனத்தொகை யானது 120 வருடங்களுக்குள் 270 கோடியாக உயர்ந்து விடும். இன்னும் சொல்லப் போனால், உலகம் தாங்கக்கூடாத 10 மடங்கு ஜனத்தொகை உயர்ந்து விடும்.

பிறப்பு விகிதத்திற்கு ஓர் வரம்பு.

"பிறப்பு விகிதத்தை ஓர் குறிப்பிட்ட எல்லைக்கோ அல்லது வரம்பிற்கோ மேற்படாமல் ஒழுங்குபடுத்த வேண்டுவது எல்லாரும் ஒப்புக்கொள்ள வேண்டிய முக்கியமான விஷயமாரும்' என டாக்டர் இன்ஜே கூறுகிறார்.

"அறியாமையால் செய்கிறவனைத் தவிர ஏனையோர் அறிந்தும் வேண்டுமென்றும்; 50 வருடங்களுக்கு முன் இருந்த பிறப்பு விகிதப்படி விருத்தி செய்வானே யானால் அவன் குற்றவாளியாக தண்டிக்கப்பட வேண்டும்" என ஹாவலக் எல்லிஸ் கூறியதையும் டாக்டர் இன்ஜே ஆதரிக்கிறார்.

இத்தீவில் உள்ள ஜனங்கள் யாரும் அன்னிய நாட்டில் இருந்து இறக்குமதியாகும் ஆகாரப்பொருளை எதிர்பார்த்து வாழ்வது நேர்மையான விஷயமென்றோ புத்திசாலித்தனமான காரிய மென்றோ நம்மவர்கள் கொள்ளாமல், இத்தகைய வழக்கம் வெறுக்கத்தக்க காரியம் என்று கருதும்படியான காலம் வந்து விட்டது. அப்படியிருந்தும், நாம் எவ்வளவு பிரயாசைப்பட்டாலும் உள்நாட்டில் உற்பத்தி செய்யக்கூடிய ஆகாரப்பொருள் இப்பொழுதுளள பிரஜைகளின் பெரும் பாலருக்கு போதுமான அளவுக்கு கிடைக்கப் பெற முடியாது என்பது உண்மையாம் ஆகவே, எப்பொழுதும் நாம் அன்னிய நாட்டின் தயவை நாடியவர்களாய் இருந்தே தீரவேண்டும். இவ்வொரு விஷயத்தைக் கொண்டே நம் நாடு அதிக ஜனத்தொகையை பெற்றிருக்கிறது என்பவது, விளங்காமல் போகாது. இதே நியாயந்தான் ஐரோப்பாக்கண்டத்தில் உள்ளமற்றொரு தேசத்திற்கும் பொருத்தமாயிருக்கிறது. அத்தேசத்தில் உள்ள மக்களும் அன்னிய நாட்டு உதவியில்லாமல் வாழ்வது என்பது முடியாதகாரியம்-ஆனால் அத்தேசத்திற்கு பிரிட்டனைப்போல, அதிகரிக்கும் ஜனங்களை குடியேற்ற நாடுகளுக்கு அனுப்பக்கூடிய அந்தஸ்து அந்நாட்டுக்கு இல்லாமல் இருந்து வருகிறது.

எல்லாவற்றையும் விட பெரிய பிரச்சனை பெண்களைக் குறித்ததாகும். "கனவான்களே, 7 பிள்ளைகளின் தாய்"

என்று கரங்களைஉயர்த்திய வண்ணமாக ஜூரிகளை பார்த்து சொன்ன அந்த ஜட்ஜின் வாக்கையும், அவர் மனதில் தோன்றிய எண்ணத்தையும், ஏற்பட்ட உணர்ச்சியையும் பார்த்தால் பெண்கள் நிலை எந்நிலையில் இருக்கிறது என்பது எளிதில் அறியலாம்.

லாயக்கற்றவர்கள்.

என்னுடைய சொந்த அனுபவத்திலே நான் எங்கு சென்றுபார்த்தாலும் வறுமை என்னும் பேய்தலை விரித்து ஆடுகிறது. இவ்வுண்மையை எல்லாரும் ஒப்புக்கொள்வர். மேலும் பணக்காரராய் இருந்த எத்தனையோகுடும்பங்கள் தரித்திரராய் மாறும் காட்சியையும் நாம் தினே தினே பார்த்து வருகிறோம். மனித வர்க்கத்திற்கே பிரயோஜன மில்லாத பல லக்ஷக்கணக்கான லாயக்கற்ற மக்கள் அதிகரித்துக் கொண்டே வருகிறார்கள். அவர்கள் சத்தில்லாத ஆகாரத்தையே உண்டு வருகிறார்கள் தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள முடியாத ஒருவனை மதஸ்தாபனங்களும் அரசாங்கமும் வர்க்க விருத்தி பண்ண ஆதரவு அளித்து வருகிறது. இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளில் பெரும்பாலர் நோயுள்ளவர்களாயும், மூளை தளர்ச்சியுற்ற வர்களாயும் இருந்து வருகிறார்கள்; அனேக குழந்தைகள் குற்றவாளிகளாகக் காணப்படுகிறார்கள்.

இத்தகைய உதவாக்காலிப்பிள்ளைகளைக் காப்பாற்றும் பொறுப்பு சுகசரீரமுள்ள சில மக்களின் தலையில் விழுகிறது. வாழ்க்கை நிலையை உயர்த்தவேண்டிய பணமெல்லாம் இத்தகையோருடைய செலவிற்காக அழிக்கப்படுகிறது. ஒருவனுடைய தயவை எதிர்பார்த்து வாழும் மக்களால் நமக்கு என்ன நன்மை? இது ஓர் பெரிய பிரச்சனையாகும். வரி செலுத்துவோரும், உலோகோபகாரிகளும், சட்ட நிர்மாணிகளும், டாக்டர்களும் சமூக ஊழியர்களும் இப்பிரச்சனையை குறித்து அரும்பாடு படுகிறார்கள்.

ஏனெனில் அவர்களுக்கு இம்மக்களின் பால் உள்ள அபிமானத்தாலும், தற்காலத்தில் உள்ள முறைகள் யாவும் இவர்களைப் பாதுகாக்கக்கூடியதல்லஎனக்கண்டதாலுமே ஆகும்.

ஏழைகளும், மூடர்களும், அசக்தர்களும், பைத்தியக்காரர்களும் குற்றவாளிகளும் நம்முடைய அன்பையும், இயக்

கத்தையும், ஈகையையும் எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கிறார்கள். நம்முடைய வரிப்பணத்திலிருந்தும், வெகுமதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பவுன்கள் இவர்களுக்காக செலவழிக்கப்படுகிறது. அனேக சமூக ஊழியர்கள் இவர்களுக்காக தமது ஜீவிய காலத்தையெல்லாம் பாழாக்குகிறார்கள்.

இழிவான குற்றவாளிகளையும், அசக்தர்களையும் பைத்தியக்காரர்களையும் அழித்துவிடவேண்டுமென இன்று நினைக்கிறார்கள். 100க்கு பெரும்பாகம் இத்தகைய (சமூகத்திற்கு உதவாத) மக்களே பரம்பரையாக விருத்தியாய் கொண்டே வருகிறார்கள்.

நமது நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் காணக்கூடிய பெரும்பாலோர்கள் அனுபவித்து வரும் சிறைவாசம் 3, அல்லது 4வது முறையாகும். சிறைச்சாலைகளிலே மகன், தகப்பன், பாட்டன்முதலியோர்கள் அருகே இருக்கக்காணலாம். சீர்திருத்தப்பள்ளிக்கூடங்களிலும், புகலிடங்களிலும், இன்னும் இதுபோன்ற இடங்களிலும் வரக்கூடியவர்களில் பெரும்பாலானவர்கள் கைதிகளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்றே கூறப்படுகிறது. இதிலிருந்து, அவர்களுடைய நிலை வம்சபரம்பரையோடு மட்டுமல்லாமல் குடும்பத்தாரனை வரையும் தாக்குகிறது என்பது அறியக்கிடக்கிறதல்லவா? ''பல ஹீனர்களின் பிறப்பு விகிதம் சாதாரண மக்களின் பிறப்பு விகிதத்தைவிட இரண்டுமடங்குஆக அதிகரித்துக் கொண்டே தருகிறது'' என அமெரிக்காவில உள்ள ஸ்பிட்கா என்னும் நரம்பு சாஸ்திரியார் (New roligist) ஒருவர் கூறுகிறார்.

இவர்கள் தங்களது சந்ததியை வருஷா வருஷம் இரட்டிப்பதோடல்லாமல் சமூகத்தில் ஒழுக்கக் கேட்டை உண்டு பண்ணக்கூடிய தரித்திரர்களையும், பைத்தியக்காரர்களையும், மூடர்களையும் விருத்திபண்ணுகிறார்கள். ஒவ்வொரு 20-வருஷத்திற்கு ஒரு தடவையும் மேலே குறிப்பிட்ட மக்களின் விகிதம் 200, 300 பர்செண்ட் விகிதம் அதிகரிப்பதைக் கண்ட அறிஞர்கள் இவ்வழக்கத்தை ஒழிக்க, அத்தகையோர்கள் பல்காதபடி தடைப்படுத்துதலே சிறந்த வழி என முடிவு செய்துள்ளார்கள். இதை நிறுத்த சர்க்கார் சட்டங்கள் இயற்றுவதினாலும், அவர்கள் விவாகம் செய்யாவண்ணம் தடுப்பதாலும், பிரஜா உற்பத்திக்கருவிகள் தங்கள் வேலைகளைச்செய்யமுடியாதபடி செய்வதன் மூலமாயும், கர்ப்பத் தடையப்பற்

றிய விரிவான அறிவைப் பரவச்செய்வதாலும் தான் செய்யக் கூடும்.

நிலங்களைப் பண்படுத்துவதிலும், அவைகளைப் பரிசீலனை செய்வதிலும், பன்றி, மாடு குதிரை முதலிய மிருகங்களைக் காப்பாற்றுவதில் சர்க்கார் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி அதற்கு ஆன சட்டங்கள் இயற்றுவதில் மிக ஜாக்கிரதையாயும், ஒரு நாளும் பின்வாங்காதவர்களாயும் இருக்கிறார்கள். ஆனால் பகுத்தறிவோடு கூடிய மனித வர்க்கம் நாளுக்கு நாள் க்ஷீண திசையை அடைந்துகொண்டும், அழிந்துகொண்டும் வருவதைக் கண்டும் இம்மனித வர்க்கத்தை உயர்த்துவதற்கான வழிகளை கையாளுவதே கிடையாது. மனிதப் பூண்டே மாண்டுபோகக்கூடிய கொடிய ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்கும் வாங்குவதற்கும் உதவி செய்ய 10 லக்ஷக் கணக்கான பேர்கள் மனமுவந்து முன் வருகிறார்கள்.

வெறுக்கத் தகுந்தவர்களின் விவாகம்.

ஆயிரக்கணக்கான திட சரீரமுள்ள வாலிபர்கள் யுத்தம் செய்வதற்காக சேனைகளில சேர்க்கப்பட்டு விடுகிறார்கள். எஞ்சியிருக்கப்பட்டவர்கள், பலஹீனர்களும், பயித்தியக்காரர்களும், தரித்திரர்களும், குடிகாரர்களும், விபசாரக்காரர்களும் இன்னும் இதுபோன்றவர்களுமே வர்க்கவிர்த்தி பண்ணுவதற்காக விட்டுவிடப்படுகிறார்கள். இத்தகையோர் தக்க பருவம் வந்தாலும் சரி அல்லது பெற்றோர்கள் சம்மதமிருந்தாலும் சரியே அவர்கள் கலியாணம் செய்துகொள்ள அருகதையுடையவர்களாய் விடுகிறார்கள். அடுத்தபடியாக கோவில்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் பாதிரிமார்களும் "கடவுளால் இணைக்கப்பட்டதை வேறு எந்த மனிதனும் பிரிக்கப்படாமலிருக்க" என்பதாக சொல்லத் தயாராயிருக்கிறார்கள். இத்தகைய ஒரு காரியத்திற்கு கடவுள் அனுமதித்திருக்கமாட்டார் என்றே நம்புகின்றேன்.

அரசாங்கம் இம்மாதிரியான விவாகங்களைத் தடுக்கக் கூடிய சட்டங்களை இயற்றுமேயானால் இவ்வழக்கமும் கடவுளின் அனுமதிப்பும் இருந்தவிடம் தெரியாமல் ஓடிப்போம் என்பதில் சந்தேகமே இல்லை.

ஏதோ அஜாக்கிறதையாக இருந்ததினால் வைசூரி என்னும் நோய் மற்றவர்களுக்கு பரவ ஏதுவாய் இருந்துவிட்டா

லும் சரியே அல்லது என் வீட்டண்டையிலுள்ள அசுத்தங்களை அப்புறப்படுத்தாமலிருந்துவிட்டாலும் சரியே. உடனே என்னை சமூகத் துரோகி என்று நினைத்துவிடுகிறார்கள்.

நோயுள்ள மாமிசம் என்று தெரிந்திருந்தும் அதைப் பொது ஜனங்களுக்கு நான் விற்றால் நான் தண்டிக்கப்படுகிறேன்.

ஆனால் கொடிய அசூசியான நோயோடு ஒருவன் வெகுநாள் ஜீவித்திருந்து தன் மனைவியையும், தலைமுறை தலைமுறையாகத் தன் சந்ததியையும் அந்நோயால் வருந்தியழியும் படியாக கொடிய விஷத்தை செலுத்துவதற்கோவெனில் அரசாங்கமும், மத ஸ்தாபனமும் லைசென்ஸ் கொடுத்துவருகிறது. அத்தகையவர்களை தண்டிக்கிறதுமில்லை, தடுப்பதுமில்லை. இப்பொழுது எடுக்கப்பட்டிருக்கும் ஜனக் கணிதம் (cencus) உண்மையானது என மதித்தால் அதன்படி குடிகாரர்கள் 100-க்கு 100 குடிகாரர்களையும், குற்றவாளிகளையும், மந்த புத்தியுடையவர்களையும் உற்பத்தி செய்கிறார்கள். ஆனால் சாந்தமானவர்களோ மிகச்சிலரேயாவர். அதிக வரி செலுத்துவோர் நன்மையைக் கருதியும், இனி வரும் சந்ததியார்களின் தேவையைக் கருதியும், பொது நலனைக் கருதியும், சதா குடிகாரர்கள்-விடாக்குடிகாரர்கள் கலியாணம் செய்யாதபடி தடுக்கக்கூடிய சட்டத்தை இயற்றவேண்டும். சமயா சமயங்களில் குடிக்கிறவர்கள், விவாகம் செய்யவேண்டுமானால் தாங்கள் குடிப்பதினின்றும் சில குறிப்பிட்ட காலம் வரை குடியை நிறுத்தி சாந்தமாக இருத்தல்வேண்டும். அத்தோடுதான் அவ்வாறு இருந்து வருவதை சரியான சாட்சியத்தோடு மெய்ம்பிக்கவேண்டும். மேலும் தான் நிரந்தரமாக குடிப்பதில்லை என்றும் உறுதி கூறவேண்டும்.

இற்றைய நாளில், சுதந்திரத்தைக் குறித்து பற்பல வாறாக, மனம்போன வாக்கில் முட்டாள் தனமாக பேசப்பட்டு வருகிறது. தனிப்பட்ட ஒரு மனிதனுடைய சுதந்திரத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன் மற்றவர்களுக்கு நன்மை செய்வதில் ஒருவனுடைய சுதந்திரத்தை ஒருவரும் தடுக்கக்கூடாது. மற்றவர்களுடைய க்ஷேமத்தைக் கருதும்போது ஒருவனுடைய சுதந்திரத்திற்கு எல்லைகட்டவேண்டியிருக்கிறது.

ஒருவனுடைய க்ஷேமத்தைக்குறித்துஎப்பொழுது பிரச்சனை எழும்புகிறதோ அங்கே மற்றவன் தன் இஷ்டம்போல்

நடப்பது, அதாவது அவனது சுதந்திரம் தடுக்கப்படுகிறது. நீங்கள் வேண்டுமானால் என்மேல் கோபங்கொள்ளலாம், பற்களை நெற, நெறவெனக் கடிக்கலாம். கரங்களை பிசையலாம், அல்லது நெருக்கலாம், கைவிரல்களை மடக்கிக்கொண்டுசுழற்றலாம், உயரத்தூக்கலாம், பக்கங்களில் நீட்டலாம் அல்லது எத்திசையிலும் இஷ்டம் போல் நீட்டலாம் ஆனால் என் மூக்கை உங்களுடைய கைப்பிடி தாக்குமேயானால் அப்பொழுதே உடல்களுடைய சுதந்திரம் முடிவடைகிறது. பொது ரஸ்தாவில் உமக்கு இஷ்டம் போல் நடப்பதற்கும், மலைகளிலும், குன்றுகளிலும், சமவெளிகளிலும் உம் இஷ்டம்போல் நடக்கலாம் திரியலாம், ஆனால் என்னுடைய இல்லத்தில் வந்தவுடன் உம்முடைய சுதந்திரத்திற்கு ஓர் வரம்பு ஏற்படுகின்றது. அது போலவே ஒருவன் தன் இஷ்டம் போல் குடிக்கலாம், தன் அறிவை கெடுத்துக் கொள்ளலாம், மனம்போன போக்கில் திரியலாம் ஆனால் அவன் எப்பொழுது தன் சந்ததியை விருத்தி பண்ண ஆரம்பிக்கிறானோ அந்த நிமிடமே அவனுடைய சுதந்திரம் முடிவடைகிறது. ஏனெனில் அவனால் பிறக்கப்படும் குழந்தைகள் அவனுக்குள்ள பழக்கத்தையும் சரீரக் கேடுகளையும் அடைகின்றன.

அப்பின் சந்ததிகளுக்கும் உயிர் இருக்கிறது. அவர்களோ ஒரு பாவமும் அறியாதவர்கள். அவர்கள் உம்மிடத்திலிருந்து திட சரீரத்தையும், நல்லபுத்தியையும், நல் ஒழுக்கத்தையும் பெற அருகதை உடையவர்கள் ஆவார்கள். அனேக பெண்கள் இதை அறிந்திருந்தும், துர்அதிர்ஷ்ட வசமாக மிருகத் தன்மையோடு கூடிய காம வெறியர்களின் வலையில் சிக்குண்டு தொலையாக் கர்ப்பத்திற்கு ஆளாகி பிரசவ வேதனையால் உடலின் வலிமை குன்றி தானாகவோ அல்லது வைத்தியர்மூலமாகவோ இப்பாழும் கர்ப்பத்தை நீக்குவதற்கான வழியை தேடிக் கொள்ளுகிறார்கள். ஆகவே, தோழர் ஜஸ்டீஸ் மெக்கார்டீ, "கர்ப்ப ஆட்சி பொதுவாக மிக விரிவாக பரவச் செய்யவேண்டும், அதிலும்சிறப்பாக ஏழைமக்களிடம் அவசியம் பரவச்செய்யவேண்டும்" எனப் பகர்ந்த பொன்மொழியின் அர்த்தம் இப்பொழுதாவது விளங்காமல் போகாது. பெண் மக்கள் பயத்தினின்றும் விடுவிக்கப்படவேண்டும். சுயேச்சைகொடுக்கப்படவேண்டும். அப்படிச்செய்தால்தான் உண்மையான காதல் என்ன என்பதை அறிய முடியும். பின் சந்ததிகளும் உண்மையான அன்பைப் பெற்று வாழ முடியும்.

———)o(———

சமய பரிபாலகர்கள்.

[R. P. பராஞ்சிபை.]

சமயங்கள் என்பவைகள் ஆராய்ச்சி செய்து அறியமுடியாத உண்மைகளைக் கொண்டுமாத்திரம் நிலவி இருக்குமானால், அவைகளைப்பற்றிய பரிசோதனைகளைத் தத்துவ ஞானிகளிடத்திலாவது, மெய்ஞ்ஞானிகள் என்போரிடத்திலாவது விட்டுவிடலாம். ஆனால் ஒவ்வொரு மதத்திலும்—மிக்க பரிசுத்தமானதென்றும், உயர்க்க தத்துவ ரீதியானதென்றும், ஆதியில் போதிக்கப்பட்டதென்றும் கூறப்படும், மதத்திலும் கூட—அம்மதத்தைப் பரிபாலிக்கும் பொருட்டு ஏற்பட்டுள்ள ஒரு தனித்த கூட்டத்தார் இருக்கின்றனரென்பதைச் சாதாரண மனிதரும் அறிந்துகொள்ளலாம். அந்தக் கூட்டத்தார் ஒரு தொழிலும் செய்யாத சோம்பேறிகளாகவும், ஜனசமூகத்தின் பொருளாதாரத்திற்கொரு சிறிதும் பிரயோஜனமற்றவர்களாகவும் இருப்பதோடு மனிதச் சமூகத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து, அவர்களுடைய மனம் வாக்குக்காயம் ஆகியவைகளுக்கு விலங்கிட்டுவிட்டார்கள்.

இவ்விதமாக ஒரு பெரிய கூட்டத்தார் ஒவ்வொரு மதத்திலும் பெருகி, அவ்வவற்றின் சட்டதிட்டங்களையே பெருத்த பேராசையோடு கண்காணித்து வருகின்றனர். கிருஸ்தவ மதத்திலே போப்பு, பிஷப்பு, பாதிரிகள், கன்னிகாஸ்திரீகள் எனப்படுவோரும், இஸ்லாமிய மதத்திலே, உயர்ந்த குருக்கள், மௌல்வி, காஜி, பக்கிரிகளெனப்படுவோரும், இந்து மதத்திலே சங்கராச்சாரியார்கள், மகந்துக்கள், குருமார்கள், சாதுக்கள், சந்நியாசிகள், இன்னும் பல்வேறு பிக்ஷாடன மூர்த்திகளாகத் திரியும் பக்தர்களும் இருக்கின்றனர். இவர்களைத் தவிர வேறு மதத்தில் உள்ள திருக்கூட்டத்தார்களும் ஒவ்வொரு நாட்டிலும், ஒவ்வொரு ஜனசமூகத்திலும் இருந்துகொண்டு, அவரவர் முன்னேற்றத்தையே முதன்மையாகக் கொண்ட சுயநலப்புலிகளாக விளங்குவதோடு, அதற்காக அவர்களைப் பின்பற்றுவோர்களின் மனோ புத்திகளை விலங்கிட்டாற்போல் தடுப்பதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து காலங்கழித்து வருகின்றார்கள்.

அந்த மதத்தை ஆதியில் ஸ்தாபித்த அவதார புருஷர்கள், பொருளைச் சேகரித்தல் கூடாதென்றும், லௌகிக

ரோஜா முத்தையா

ஆபாசங்களில் மூழ்காமலிருக்கவேண்டுமென்றும், ஐயந்திரி பறப் படிப்படியாகப் பறைச்சாற்றிச் சென்றிருக்கின்றனர்; இருந்தும், அவர்கள் மறைந்த சில வருடங்களுக்குள்ளாகவே, அந்தந்த மதப்பாதுகாப்பாளர்கள், மேற்கூறிய கோட்பாடுகளை முற்றிலும் மறந்து, அவ்விதப் புருஷ சிரேஷ்டர்களின் பெயர்களை நாவினால் சதா உச்சரித்துக்கொண்டிருந்தபோதிலும், மௌடீகமாய் அவர்களின் நோக்கங்களுக்கு முற்றிலும் மாறாக நடப்பதையே முதன்மையாகக் கொண்ட தங்கள் கூட்டத்தாரை ஸ்தாபித்துக்கொண்டிருக்கின்றனர்.

எல்லாத் தேசங்களிலும் இவ்வித மத குருக்கள் அடங்கிய திருக்கூட்டத்தார், இருந்துகொண்டு மனிதர்களைத் தங்கள் வசப்படுத்தி, அவர்களைத் தங்களிஷ்டப்படி நடத்துவதற்கான சகல தந்திரங்களையும் உபயோகிப்பதையே கடமையாகக் கொண்டிருக்கின்றனர். கிறிஸ்து நாதரானவர்,—தனவந்தர்களைவிட ஏழைகளே எளிதில் தேவலோகம் சேரமுடியுமாதலின்,—தரித்திரத் தசையே பிரதானமென முடிவு கட்டிச் சென்றிருக்கையில், அவரைப் பின்பற்றும் திருக்கூட்டத்தார் மதத்தின் பெயரால் ஏராளமான சொத்தை சேகரித்து வருகின்றனர்!

ஸ்பெயின் (Spain) தேசத்தின் மூன்றிலொரு பாகம் கிருஸ்துவ மாதா கோவிலின் (Church) பங்கிலிருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்தியாவை எடுத்துக் கொண்டோமானால் ஆதிசங்கராச்சாரியார் ஒரு ஏழையே; ஆனால் அவருடைய சித்தாந்தங்களைக் கடைப்பிடித் தொழுகும், அவருக்குப் பின்னால் வந்த மடாதிபதிகள்—சொத்து விஷயமாகவும், மடங்களின் பெயருக்குப் பிறரால் தானமாக (மான்யமாக) விடப்பட்ட பொருள்களுக்காகவும், ஒருவருக்கொருவர் சதா கோர்ட்டு விவகாரங்களில் போராடிக்கொண்டேயிருக்கின்றனர். இம்மாதிரியான விவகாரங்கள் இந்தியாவிலே உள்ள மற்ற மதப் பிரதிநிதிகளிடையேயுமிருக்கக்காணலாம். சொத்தைப் பற்றிய சச்சரவுகளுக்காக மதத்தின் பெயரால், மதத் தலைவர்களுடைய மண்டைகள் உருளுவதும் இல்லாமலில்லை.

மதங்களை ஆதியில் ஏற்படுத்தியோர் மிகவும் சாதாரண எளிய வாழ்க்கையையே நடத்திக் காட்டியிருப்பதாகத் தெரிகிறது. ஆனால் தற்காலத்தில் உள்ள, அந்த மதத்தலைவர்களோ, தங்களிடத்தில் அகப்பட்ட திரவியங்களை விலைமதி

க்கப்பெற்ற உடைகளிலும், தங்கச் சிலுவைகளிலும், இரத்தினங்களிழைக்கப்பெற்ற நகைகளிலும் செலவு செய்து வேஷதாரிகளாக நடித்துக் கொண்டிருக்கின்றனர்.

மதத்தலைவர்கள் தங்கள் வயப்பட்டபக்தர்களிடமிருந்து பணத்தை எவ்வாறு கறக்கின்றனரென்பதை ஒரு சாதாரணமான உதாரணத்தால் விளக்கிக் காட்டுகின்றேன். எனது கிராமத்திற்குப் பக்கத்தில் உள்ள ஓர் கிராமத்திற்கு, ஒரு சங்கராச்சாரியமடாதிபதி கிருபை பாலித்து விஜயம் செய்திருந்தனர். அவர் தனது சிஷ்யர்களில் சிலரை என்னிடம் அனுப்பி, அவருடைய பாதங்களைக் கழுவிப் பாத பூசை செய்யும் புண்ணிய கைங்கரியம் செய்வதற்கு ஓர் சந்தர்ப்பமளிப்பதற்காக, எனது ஊருக்கு வரத்திருவுளமிரங்குவதால் அதற்காக என்னுடைய அனுமதியைக் கேட்டனர். அதன் பொருட்டு என்ன செலவாகுமென நான் கேட்டபோது, ஒரு நீண்ட செலவுப் பட்டியைக் காண்பித்ததோடு—பல்லக்கில் வந்தால், ஒரு கட்டணமும், யானையே காணாத அக்கிராமத்தின் பொருட்டு யானை மீதூர்ந்துவரின், அதற்காக அதிகக் கட்டணமும்—செலுத்தவேண்டுமெனக் கூறினார். அவ்விதமான, அதிகிருபையோடு திருவுளமிரங்கிய, ஸ்வாமிகளின் விஜயத்தை நான் மறுத்தேன் என்பதைக் கூற வேண்டியதில்லை.

மேனாடுகளில் கடவுள் பிரார்த்தனை செய்து பிரசாதம் பெறுவதற்குக்கூட, கட்டணம்விதிக்கப்பட்டது என்ற விஷயம் ஐரோப்பிய சரித்திரம் வாசித்தவர்களுக்கு நன்கு தெரியும். கத்தோலிக்க மதம் பரவியுள்ள நாடுகளில் இறந்தவர்களுக்குச் செய்யப்படும் பூஜை (Masses) களுக்காகக் கட்டணங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலே, புண்ய க்ஷேத்திரமெனும் காசி, கயா (Gaya வுக்குச் சென்று கங்கா நதியில் ஏதோ சில சடங்குகள் செய்வதால் இறந்தோரின் ஆத்மா நற்கதியடைவதாக ஹிந்துக்களால் கருதப்படுகிறது. அங்குள்ள மகந்துக்கள் அல்லது பிரதம குருக்கள் எனப்படும் குட்டித்தேவதைகள் அவ்விடத்திற்கு வருகின்ற மூடாத்துமாக்களின் மூடபக்தியையே ஆதாரமாகக் கொண்டு, சில சமயங்களில் அவர்களுடைய நிலைமையைக் கூடச்சிந்தித்துப் பாராமல்,—குரு சந்நிதானம் அந்த இடத்திற்கு தனது டாம்பீக விருதுகளோடு பிரசன்னமாகி, "உனது பாட்டன், பூட்டன்களெனும் சகல பிதுர்க்களும் தேவலோகம் செல்வார்க

ளாக'' எனத்திருவாய் மலர்ந்தருளுவதற்கு முன்பே—பெருத்த தொகையை ரொக்கமாகப் பகற்கொள்ளையடித்து விடுகின்றனர்!

தங்களைப் பின்பற்றுவோர்களுடைய நம்பிக்கை பிறழா திருக்கும் பொருட்டு, அந்தந்த மத குருக்களால் கையாளப் படும் எண்ணிறந்த தந்திரங்களிலே,—மாண்டுபோன அல்லது தற்காலத்தில் உலகவழக்கிலில்லாத, ஏதோ ஒருபாஷையை அவர்கள் பிரயோகிப்பதும் ஒன்றாகும். அவ்வித பரிபாஷைகளில், ஓர் தெய்வ சக்தியிருப்பதாகவும் அவர்கள் கருதுகின்றனர். ஒரு காலத்திலே, இந்தியாவில் வேதங்களெனப்படும் புத்தகங்கள் மிக்க புனிதமாகவும், அதனைப்பார்ப்பனனொருவன் பாராயணம் பண்ணும் போது, தாழ்ந்த சாதிகளில் பிறந்த ஒருவன் கேட்கவும் அருகனல்ல வென்பதாகவும், தப்பித் தவறிக்கேட்டு விட்டாலே அவனது காதுகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டுமென்றதாக [மனுதர்ம] நியதிகள் ஏற்பட்டிருந்தன. ரோமன் கதோலிக்க (கிறிஸ்துவ) நாடுகளிலே, சாதாரண ஜனங்களால் அறிந்துணர முடியாத லத்தீன் (Latin) பாஷையிலேயே அம்மதத்தினர் தோத்திரங்களை ஜபித்து வருகின்றனர். கிரீஸ் நாட்டிலே புதிய ஏற்பாடு (New Testament) இப்போதும், பழைய கிரேக்கபாஷையிலே ஓதப் படுகின்றதே ஒழிய, தற்கால வழக்கத்திலிருக்கும் கிரேக்க (Creek) பாஷையில் கையாளப்படுவதில்லை, ஏனெனில் அது மத சம்பிராயத்திற்கு விரோதமாம். இன்றும் இங்லாந்து தேசத்தில் பிராட்டெஸ்டன்ட் (Protestant) கிறிஸ்தவர்கள், சுமார் முன்னூறு வருஷங்களுக்கு முன்னர் பேசப்பட்டு தற்கால வழக்கிலிருக்கும் மொழிகளுக்கு அநேக விதங்களில் மாறுதலாக இருக்கும்—கர்நாடக இங்கிலீஷிலுள்ள (Bible) வேதத்தின் நடையின் (Style) போக்கை வியந்து பாராட்டுகின்றனர்! குரான் வேதமானது, இக்காளிலுங்கூட பழைய அராபி பாஷையிலேயே ஓதப்படுகின்றது; ஆனால் இந்தியாவிலும் பெர்ஷியாவிலுமுள்ள மகமதியர் பெரும்பான்மையோருக்கு அராபி பாஷையே தெரியாது!

இந்தியாவிலே, வித்தியாபிவிருத்தியங்கத்தினர்,—எளிய மகமதிய சமூகத்தினருடைய கல்வியை வளர்ப்பதற்காக—பெரு முயற்சிகள் செய்தும், பயன் படாமல் மயங்குவதற்கான காரணங்கள் பலவற்றுள்,—அம்மதத்திய சிறுவர்கள் முதலில் இந்தக் குரான் வேதம் முழுவதையும், பாராமல் பாராய

ணம் செய்தாக வேண்டியிருத்தலையே, முதன்மையானதாகக் கூறலாம். சிந்து தேசத்தினர், படிப்பு விஷயத்தில் மத சம்பந்தமான எதிர்ப்புகள் உண்டாகாமலிருப்பதற்காக— முல்லாக்களையும் கிராம மதப்பாதுகாப்பாளர்களையுமே, கலாசாலைகளைக் காப்பாற்றுமாறு பாது காவலராக அமைத்திருக்கின்றனர்; அப்படிப்பட்ட முல்லாக்களால் சமுதாய முன்னேற்ற சம்பந்தமான விஷயங்களைக் கற்பிக்க முடியாதென்பது வெளிப்படை.

ஹிந்துக்களுடைய மத சம்பந்தமான வேத நூற்களெல்லாம், சாதாரண மனிதர்களால் படித்துணர முடியாத சமஸ்கிருத பாஷையிலேயே எழுதப்பட்டிருக்கின்றன. ஈஸ்வர பிரார்த்தனைகளும், ஏனைய வைதிக சடங்குகளும், இந்த சமஸ்கிருத மந்திரங்களைக் கொண்டே நிகழ்த்தப்படுகின்றன. இதில் இன்னொரு சிக்கலும் உண்டு. அதாவது, வேதங்கள் எனப்படும் பழைய காலத்திய மத நூற்கள், மிக்க புராதன சமஸ்கிருத நடையில் எழுதப் பட்டிருப்பதால்,—பிரபல மதத் தலைவர்கள் பண்டிதர்கள் எனப்படும்—இவர்களுக்குள்ளேயே அவற்றின் அர்த்த சம்பந்தமான பாஷ்யங்களிலேயே ஒன்றுக்கொன்று மாறுபட்ட அர்த்தங்கள் காணப்படுகின்றன. பிராமண க்ஷத்திரிய வைசியர் எனப்படும் இருபிறப்பாளர்களாகிய மேல் மூன்று வருணத்தவர்கள் செய்யும் பூஜா கைங்கரியங்களில வேத மந்திரங்களும் சூத்திர வருணத்தைச் சேர்ந்தவர் செய்யும் வைதீகசடங்குகளில்—புராண இதிகாசங்களின் நடையைத்தழுவியதும், ஏறக்குறைய தற்கால சமஸ்கிருதத்தைஒத்ததுமான-புராணமந்திரங்களும், ஓதப்படுகின்றன. ஏதோ சிலராவது அர்த்தம் கண்டு பிடிக்கக்கூடியதாயிருப்பதால் அவ்வித புராண மந்திரந்தான் பலராலும் போற்றப்படும் என்று பிறர் நினைக்கலாம். ஆனால் உண்மை அப்படியன்று. அந்தந்த ஜாதியின் மேன்மை தாழ்மை அவரவர் கையாளும் மந்திரங்களில் தானிருக்கின்றன! புராண மந்திரங்களிலேயே பிறந்து மணந்து இறந்த சில ஜாதிகள் சென்ற ஐம்பது வருடங்களுக்குள்ளாக வேத மந்திரங்களைக் கையாளும் உரிமை எவ்வாறோ பெற்றுவிட்டதால் அவைகள் தாமாகவே உயர்ந்த ஜாதிகளாக மாறிவிட்டன!

பிராமணர், பிராமணரல்லாதார்களுக்குள் இருக்கும் கலகங்களுக்கு வித்து ஆதியில் பம்பாயிலேயேதான் ஊன்றப்பட்டது. சிவாஜி வம்சத்தைச் சேர்ந்த கோல்பூர் மஹாராஜா

வானவர் வேதத்தில் குறிக்கப்பட்ட சடங்குகளில் தனக்கும் பாத்யதை உண்டு என்பதாகத் தனது உரிமையைப் பாராட்டி னதே அந்த வித்தாகும். உடனே அந்த மஹாராஜாவுடைய குல குருவானவர் அதனை அங்கீகரிக்க மறுத்ததால் அவரு டைய பரம்பரைச் சொத்துக்கள், கட்டளைகள் முதலிய வே தனங்கள பலவும் பறிமுதல் கொள்ளப்பட்டன. அன்று ஊன் றப்பட்ட அந்தக் கலக வித்தே இன்று இவ்வித இருண்ட துவேஷமாகக் கிளம்பி முதல்தரமான தேசீயப் போராட்டங் களாக எங்கும் பரிணமித்துப் பரந்து காண்கின்றது!

சொற்ப தொகையில் சகலவேதசாஸ்திரங்களையும் வாங்கி அவற்றிலுள்ள அதி இரகசிய மந்திரங்களையெல்லாம்—ஹிந் துக்களல்லாதார் உட்பட—எவர் வேண்டுமானாலும் எங்கும் படிக்கும் நிலைமைக்கு வந்துள்ள இக்காலத்திலும் கூட மேற் கூறிய வேதம் புராணம் இவைகள் சம்பந்தமான மந்திரச்சடங்கு களைப்பற்றிய விவகாரங்கள் ஒழிந்த பாடில்லையே! வைதீகர் களுக்கும் பகுத்தறிவிற்கும் வெகுதூரம் போலும்!!

பாரசீகர் (Parsees) களை எடுத்துக்கொண்டால், அவர் கள் இந்தியாவிற்குள் பிரவேசித்து சுமார் பதின்மூன்று நூற் றாண்டுகளாகியும் இப்போதுங்கூட தங்கள் கடவுளைப் பழய இரானிய பாஷையிலேயே துதிக்கின்றனர். பேர்போன பண் டிதர்களுங் கூட அந்தப் பாஷையிலுள்ள தாத்பரியங்களில் மாறுபாடுடையவர்களாக இருப்பதுந்தவிர, அந்தப் பாஷை இப்போதைய ஜனங்கள் ஒரு சிலருக்காவது விளங்குவதும் இல்லை!

பம்பாய்க்குச் சற்று தெற்கே வசித்து, இப்போது பல இடங்களிலும் பரவியுள்ள ஒரு கூட்டத்தாரைப் பல நூற்றாண் டுகளாக, ஹிந்துக்களென்றே பலரும் எண்ணியிருந்தார் கள். அவர்கள் எண்ணெய் ஆட்டி விற்று ஜீவித்து வந்ததால் தெலிங்கர் (Telis) என்னும் வாணிகர்களாக அழைக்கப்பட் டார்கள். ஆனால் அவர்களிடம் ஒரு புதுமை விளங்கியது.

அவர்களால் செய்யப்படும் பூஜைகளிலும், வைதீகச் சடங் குகளிலும் அவர்கள் ஒரு நூதன பாஷையை உபயோகித்து வந்தனர். சுமார் நூறு வருடங்களுக்கு முன்னர் தான் டாக் டர் வில்சன் (Dr. Wilson) ஒரு கிருஸ்தவப் பாதிரியார் அவர் களுடைய பழக்க வழக்கங்களைப் பரிசீலனை செய்து வருகை யில் அவர்களுடைய பாஷை ஹீப்ரு (Hebrew) பாஷையின்

மருஉமொழி என்பதாகக் கண்டுபிடித்தார். பென்-இ-இஸ்ரேயல் (Ben-i-Israels) என்று வழங்கப்படும் மேற்குறித்த கூட்டத்தார், அனேக நூற்றாண்டுகளுக்கு முன் கிறிஸ்துவ மதம் ஏகாதிபத்தியம் செலுத்திய அக்காலிலே, இந்தியாவிற்குக் குடியேறி சில யூதர் (Jews) களின் சந்ததிகளென இப்போதுதான் அறிகின்றோம். இந்த ஜனங்கள் சகல காரியங்களுக்கும், சர்வ சாதாரணமாக வழங்கும் மராத்தி பாஷையையே கையாண்டபோதிலும், வைதீக சடங்குகளில் மாத்திரம் ஹீப்ரு பாஷையையே இன்றும் உபயோகிக்கின்றனர்.

தங்களைப் பின்பற்றும் ஜனங்களிடத்து மத நம்பிக்கையை நிலை நாட்டவும் அவர்களுடைய மனத்தில் பக்தியென்னும் ஓர் வித மயக்கத்தை வேரூன்றவும், முன்னால் கூறப்பட்ட குல குருக்களும் மதப்பாதுகாப்பாளர்களும் பிரயோகிக்கும் கருவி கரணங்களில்—புத்திக்கு விளங்காத பலவிதமான சாஸ்திர சடங்குகளே எல்லா மதங்களிலும் பிரதானமாக இருக்கின்றன.

இவ்விதச் சடங்குகள் எல்லா வகுப்பாளர்களுக்கும் பொதுவாகவும், வெவ்வேறு விதமாகவும் இருக்கின்றன. உதாரணமாக, மிக நீண்ட கோட்டுகளும், ஒரு விதப்பாதிரிக் காலர்களும், சாதாரண மனிதர்களுக்கும் கிறிஸ்துவப் பாதிரிகளுக்கும் உள்ள வேறுபாட்டை காண்பிப்பதாக இருக்கின்றன. விலை மதிப்புள்ள அநேக சாமான்களை அதி பக்தியோடு பூசைகளுக்கெனப் பூட்டி வைக்கப்பட்டு, அவைகளைப்பற்றிய விஷயங்களில் பிறர் தலையிடுவதானது, பெரிய அபராதமாகவும், அவைகளைத்தடுக்க மிகக் கொடிய தண்டனைகளையும் நியமித்துப் பாதுகாக்கப்படுகின்றன. கோவில்களிலே சுவாமிகள் என்னும் விக்கிரகங்களைப் பொழுதொரு வண்ணமாகப் பராமரிப்பது, அகற்று அபிஷேகம் செயவது, தூபதீப புஷ்பங்களால நறுமணமூட்டுவது-ஆகிய இவைகள் பூசாரிகளின் முக்கிய கடமைகள். ஒரு மானிடனுக்குச் தேக மனோ உத்சாகத்திற்கு வேண்டிய அன்னபானாதிகளாகிய சகல சாதனங்களும் அந்த விக்கிரக (கல்) சாமிகளுக்கும் வேண்டும் என்பதாக, மேற் கூறிய புரோகிதப் பூசாரிகள் கருதி, அவைகள் ஒவ்வொன்றையும் முறையே அவற்றிற்கு எதிரே ஒவ்வொன்றாக நிவேதனம் செய்வதையே கடைமையெனக் கங்கணம் கட்டிக்கொண்டு சேவிக்கின்றனர்! பக்த கோடிகள் அவைகளுக்குக் கோடிக்கணக்கான நிதிகளைக் காணிக்கைகளாகச் செலுத்து

இன்றனர்!! அவைகள், சாமிகளின் தரகர்களாகிய மேற்கூறிய பூசாரிச்சன்னிதிகளால் கொள்ளையடிக்கப்பட்டு, அதன் நிமித்தம் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக்கொண்டு, அதற்காக சர்க்காரையும் சமாதானம் செய்விக்க அழைக்கின்றனர். மேற்கூறித்த கடவுள்களுக்கும், மனிதர்களுக்கு வருவது போல எல்லாவித நோய்களும் வருகின்றதுக்தவிர, வருஷந்தோறும் குறித்த ஒரு மாதத்தில் வியாதி வாய்ப்பட்டு, குறிப்பிட்ட நாட்களில் உயிரும் இழக்கின்றன! சில கோவில்களிலுள்ள சாமிகளுக்கு ஒன்றோ அல்லது பலவோ மனைவிகளும் வேண்டுமாம்; அதற்காக அறிவில்லாத ஜனங்கள் தங்கள் இளமங்கையரைச் சாமிக்குத் தொண்டாற்றி நற்கதியடையுமாறு பொட்டுக் கட்டித்தத்தம் செய்துவிடுகின்றனர். தேவதாசிகளான அம்மங்கையர், உண்மையில் கோவில் பூசாரிகளுக்கும், அவர்களது நண்பர்களுக்கும் பெண்டாகி, எங்கும் பரதாசிகளாகப் பரிணமிப்பது வெளிப்படை! சில வருஷங்களுக்கு முன்னர், கோவில்களுக்குத் தேவதாசிகளைப் பொட்டுக் கட்டி விடும் வழக்கத்தைத்தடுப்பதற்காகச் சிலசீர்திருத்தக்காரர்கள் முன் வந்த போது, வைதீகக் கோஷ்டியார் "ஐயோ மதமே போய் விடுமே" என்பதாகப் பெருத்த கூக்குரல் எழுப்பினார்கள். பம்பாய் அரசாங்கத்தாருங் கூட இவ்விதச் சீர்திருத்தத்திற்கு விரோதமாக எழுந்தார்கள்! ஆனால் நல்ல காலமாக சென்னை அரசாங்கத்தார் அதன் சட்டசபையில் அங்கத்தினராகவிருந்த ஒரு மாது சிரோன்மணியின் பிடிவாதமான முயற்சி சட்ட பூர்வமாகப் பொட்டுக் கட்டுவதைத் தடுத்தனர்.

வைதீகச்சடங்குகளெல்லாம் அதிக சிக்கல்களாக இருக்கின்றனவாயினும் புரோகிதர் அவற்றை சிறிதும் தவறாது செய்வதிலேயே நோக்கமாய் இருக்கின்றனர். மணை போடுவதற்குப் புற்று மண், ஹோமம் வளர்ப்பதற்கு சம்ஹிதைகளெனப்படும் ஒரு சில மரங்களுடையக் குச்சிகள் விசேஷம் என்பதாகக் கருதப்படும். சில மரஞ் செடிகளுடைய புஷ்பங்கள் பசசரிசி, நெய்—இவைகள் வைதீகச் சடங்குகளுக்கு அதிமுக்கியம். வைதீகச்சடங்கைச் செய்யும் ஒரு பிராமணன்,—தனது புரோகிதன் மேற்குறித்த பூஜா பாத்திரங்களுக்கிடையில் தக்க ஆசனத்திலமர்ந்து, சமஸ்கிருத பாஷையில் மந்திரங்களை ஓதும் போது (அந்த மந்திரங்களைத் தானே உச்சரிப்பதென்ற பாவனைக்காக, முக்கிய சந்தர்ப்பங்களில் என் அல்லது எனது எனும் பொருள் படும்படியான "மம" என்ற சொல்லைச் சொல்லிக்கொண்டு) தனது பூணூலைச் சில சந்தர்ப்பங்களில் வலது பக்கத்திலிருந்து இடது பக்கத்திற்கும், சில வேளை

களில் அதற்கு மாறாகவும் மாற்றிப் போட்டுக்கொண்டு, மூக்கையும் காதையும் பிடிப்பதுமாக, ஏதேதோ புரோகிதன் சொன்ன மாதிரியெல்லாம் ஆடுகின்றான் இத்தகைய வைதீகச்சடங்குகளில் ஒன்றையேனும்விவரிக்கவேண்டுமானால் ஒரு பெரிய புஸ்தகமாகவே எழுதலாம்.

இந்த மாதிரியான இன்னும் மிகச்சிக்கலான பெரிய சடங்குகளை, எல்லா நாடுகளிலும் காணலாம் செர்விஸ் (Service) களென்னும் பூஜைகளை ரோமன் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் (மாதா) கோவில்களில செய்வதைப் பிறர் பார்த்தால், ஏதோ குருட்டுப் பாடமாகச் செய்யும் கிரிகைகள் என்பதாகத்தெரியுமே ஒழிய, வைதிகக் கிறிஸ்தவர்கள் அவைகள் ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு அந்தரங்கத் தாத்பரியத்தைக் கற்பித்துக் கொண்டு மனமுருகுவதாகத் தென்படாது. மதப்பாதுகாப்பாளர்கள், கடவுளை நினைப்பதாகஉபயோகப் படுத்தும் மந்திர தோத்திரங்களை ஒருவிதப் புதிய நாதத்தோடு உச்சரிக்கும்படியாக ஏற்படுத்தியிருப்பதை,—கிறிஸ்தவ, பாரசீக, யூத, ஹிந்து மகமதியம் எனப்படும்—ஒவ்வொரு மதங்களிலும் காணலாம்.

மனிதர்களுடைய ஹிருதயத்தில் கடவுளைப்பற்றிய ஓர் வித பயத்தை யுண்டாக்குவதற்காகவே அவ்வாறு நியமிக்கப் பட்டிருக்கின்றன. தவிர, கிறிஸ்து நாதருடைய பிரசாதமா கச்சாராயத்தைக் கோப்பைகளில் ஊற்றிப் பூஜா (Communion) காலங்களில், பாதிரிகள் பருகுவது, ஹிந்துக்களுக்கு எவ்வளவு வெறுப்பாய் தோன்றுகின்றதோ அதேபோல், வைதீகச் சடங்குகளுக்காகத் தங்களுடைய திரிகரணங்களையும் புனிதமாக்குவதற்கு மிகச் சிலாக்கியம் என்பதாக (பசுவின் சாணம், நீர், பால், தயிர், நெய்கலந்த) பஞ்சகோமயத்தை நமது ஹிந்து பக்தர்கள் பருகுவதை ஐரோப்பியர் பார்த்தால் எள்ளி நகையாடுவர் என்பதும் வாஸ்தவமே!

இம்மாதிரியான முட்டாள் தனம் விஷயமுணர்ந்தோரிடத்தும் சாதாரணமாகப் பரவியிருக்கும் போது, விஷய ஞானமேயில்லாத பாமர ஜனங்களுக்கு இவ்விதச்சடங்குளால நேரக்கூடிய தீமைகள் எத்தகையதென்பதைநாம் கூறவும்வேண்டுமோ? இத்தகைய அட்டூழியங்களெல்லாம் மதத்தைப் பாதுகாக்க நியமிக்கப்பட்ட புரோகிதக்கோஷ்டிகளால்,—மதத்தின் பெயராலும், வருணாச்சிரம தர்மங்களின் பெயராலும், சிவலோக வைகுந்த சுவர்க்க புவனங்களின் பெயராலும்—கண்ணே போல் போற்றப்படுகின்றன!!

"ஆவலோடு ஜனங்கள் எதிர்பார்க்கின்ற வகையில் நமது புரோகிதக்குருக்கள் இல்லை, ஆனால் நம்முடைய மனப்பான்மையின் மௌடீகமே அவர்களை எல்லாமுணர்ந்தோராக்கி வருகிறது" என்பதாக வால்டேயர் (Voltaire) என்ற ஒரு பெரியார் கூறியவாக்கு முற்றிலும் உண்மையே.

ஆபாசங்கள் அறவே யொழிந்த பாரமார்த்திக வாழ்க்கையையே இலக்ஷியமாகக் கொண்டுழைக்கும் இந்தப் புரோகிதக் குருமூர்த்திகளை—பொது ஜனங்களைவிட மேலானவர்கள்; சுயநல மற்றவர்கள்; தூயவழியில் நடப்பவர்கள் என்பதாக ஒருசிலர் நினைத்தலும் கூடும். அவ்வாறு அவர்கள் நினைத்தல் முற்றிலும் தவறேயாம்! மத்தியகாலத்தில் (Middle Ages) கிறிஸ்துவப்பாதிரிகள் மதத்தின் பெயரால் செய்த அட்டூழியங்கள் யாவும் நமக்குத் தெரிந்ததேயாகும்.

மேனாடுகளிலே பிராடஸ்டென்ட் கிறிஸ்துவப் பாதிரிகள் நினைத்தற்கே முடியாத பெரிய பெரிய குற்றங்களைச் செய்ததனால், அதற்கென விதிக்கப்பெற்ற தண்டனைகளைப் பத்திரிகைகளில் இக்காலத்தும நாம் படிக்கின்றோம்! பாதிரிகளின் பிரம்மச்சரிய விரதம் பலவிதங்களிலும் அவர்களைக் கெட்ட வழிகளில் வீழ்த்துவதோடு, அந்த விரதத்தால் விளையக் கூடிய ஏதோ "புனிதம்" என்ற நிலைமைக்கே கேவலமானதாகவே விளங்குகின்றது.

இந்தியாவிலே குல குருக்கள் எனப்படுவோருடைய உண்மை ஊழல்கள் பம்பாயில் மஹாராஜாகேஸ் (Maharaj Libel Case) சம்பந்தமாக வெளிவந்த, பாடியா (Bhatia) என்போரைப்பற்றிய அவதூறான விஷயங்களால் நன்கு வெளியாகி இருக்கின்றன. உண்மையைக் கூறவேண்டுமானால், ஒரே அந்தஸ்தும் படிப்புமுள்ள ஒரு சாதாரண மனிதனுக்கும், பரம்பரையாக (புரோகித) குரு பதவிகளில் இருக்கும் ஒருவருக்கும் நடத்தையில் மேம்பாடிருப்பதாக எனக்குப் புலப்படவில்லை. அறிவின் சம்பந்தமான அத்தாட்சிகள் ஒருபுறம் இருக்க, ஒழுக்கத்யையும் நடத்தையையும் பொறுத்தமட்டிலும் அவற்றின் முன்னேற்றத்திற்கு மதம் என்ற ஒரு கோட்பாடு அத்யாவசியமா? இல்லையா? என்ற கேள்விக்குப் போதிய கண் கண்ட சாட்சியாக இந்த மதப் பாதுகாப்பாளர்களாகிய புரோகித குரு சன்னிதானங்களுடைய நடவடிக்கைகளே எடுத்துக்காட்டாக நிற்கின்றன.

பேய் உண்டா?

[S. சிவப்பிரகாசம்.]

மூட நம்பிக்கையைப் போக்கும் மூன்று கதைகளில்

முதல் கதை.

(ஓர் பிராஞ்சுப் பாட புத்தகத்தின் கருத்தைத் தழுவியது.)

பேய் உண்டா இல்லையா என்பதைப்பற்றி இரு நண்பர்களிடையே பலத்த விவாதம் ஆரம்பமாயிற்று. அதில் ஒருவன், மற்றவனுடைய நம்பிக்கையை மாற்றுவதற்குக் கதை சொல்லுகிறான். அக்கதை பின் வருமாறு:—

குளிர் காலம்! ஓர் நாள் இரவு. என் தகப்பனாரும், அவர் தம் நண்பர்களும், பிரான்ஸ் தேசத்துக் கிராம வாசிகள் பலரும் எங்கள் வீட்டில் கூடி இருந்தார்கள். பாமர மக்கள் உண்மையென நம்பி வரும் பேயைப்பற்றியும, இறந்தவர் திரும்பிவருவதைப்பற்றியும் அச்சமயம் பேசத்தொடங்கினார்கள். உடனே என் தாயார் "இதைப்பற்றி நான் ஒரு கதை சொல்ல வேண்டியிருக்கிறது" என்றார்; அங்கிருந்த டாக்டர் ஒருவர் "நான் ஒரு கதை சொல்லுகிறேன்" என்றார்; என் தந்தையும் "எனக்கொன்று தெரியும்" என்றார்.

உடனே அங்கிருந்தோர், "சரி, நீங்கள் மூவரும் மூன்று கதைகள் சொல்லுங்கள்; அதில் யார் கதைதான் மிகப்பயங்கரமுள்ளதென்று பார்ப்போம்" என்றனர். முதன் முதலாக எனது தாயாரையே பேசும்படி கேட்டுக்கொண்டனர். அவரும் முன் வந்து பேச ஆரம்பித்தார்.

தாயார் சொன்ன முதல் கதை.

நான் எனது சிறு வயது முதல் பேய்களைப் பற்றிய விஷயங்களென்றால் மிக ஆவலாகக் கேட்பேன். ஏனெனில், பேய் விஷயத்தில் பயமொருபுறமிருக்கப், பேய் உண்டா? இல்லையா? என்பதைத் தெரிந்துகொள்வதற்கும் மிக வேட்கையுடையவளாயிருந்தேன்.

உரோமமுள்ள பேய்!

மதாம் தெசுலியேர் (Madau Leshouliere) என்பவள் ஒரு கவி. பதினெட்டாம் நூற்றாண்டில் பெயர்பெற்ற பெண்

மணிகளில், இவளும் ஒருவள். மிகுந்த அன்புடையவள்; புத்திசாலி! அவள் ஒருநாள் கிராமத்திலுள்ள தனது நேசியைப் பார்த்து வருவதற்காகச் சென்றிருந்தாள். நேசியின் பழைய வீடு வெறுமனே சாத்தப் பட்டிருந்தது. அதில் யாரும் குடியில்லை. அதற்கப்புறமுள்ள ஓர் வீட்டில் தனது நேசி இருந்து வருவதை யறிந்து அங்கு சென்றாள். தெசுலியேர் வருவதை யறிந்த நேசி, அன்போடு வரவேற்றாள். பின், இருவரும் மிகுந்த சந்தோஷத்தோடு அளவளாவிப்பேசிக்கொண்டிருந்தனர். இதற்கிடையில், "ஏன் அந்த வீட்டை விட்டு இங்கு வந்து விட்டீர்கள்?" என்று கேட்டாள் தெசுலியேர்.

இதற்கு நேசி சொல்லுகிறாள்:—"அவ்வீட்டில் ஒரு பேய் இருக்கிறது; அது இரவில் உலவுகிறது. மேலும் அப்பேய், வெள்ளை உடையுடுத்தி உலவுவதை எனது வேலைக்காரி நிலா வெளிச்சத்தில்பார்த்தாளாம்! அதுசமயம் அந்தப்பேய் "உம்" என்ற பெருஞ் சத்தம் செய்ததால், வேலைக்காரி பயந்து விட்டாளாம். அதுமுதல் அவ்வீட்டில் யாரும் செல்வதற்குத் துணிந்தாரில்லை. அதனால் தான் அவ்வீட்டைக் காலிசெய்து விட்டேன்" என்றாள்.

இவ்வார்த்தையைக் கேட்ட தெசுலியேர் அலக்ஷியப் புன்னகைகொண்டு, "நான் பேய் விஷயத்தில் நம்பிக்கையற்றவள்; அதோடு மட்டுமல்ல, மதத்தையும் நம்புவதில்லை. அல்லாமலும், இறந்தவர்கள் உயிரோடிருப்பவர்களைப் பயமுறுத்தும் கீழ்மைக்குணமுடையவர்கள் என்பதையும் நான் நம்பவில்லை" என்றாள்.

இதைக்கேட்ட நேசி கடகடவெனச் சிரித்து, "தெசுலியேர்! நல்ல சந்தர்ப்பம்! அப்படியானால் உன் தைரியத்தைக் காட்ட, நீ இன்றிரவு அந்த வீட்டில படுத்துக்கொள்வாயா?" என்றாள்.

"ஆகா! தடையென்றுமில்லை! அப்படி ஏதாகிலும் நேர்ந்தால், அவ்விஷயம் நான் கவி எழுதுவதற்குப் பயன் படும். இப்பொழுதே அவ்வீட்டைச் சுத்தம் செய்து, கட்டில் ஒன்று போட்டு வையுங்கள்" என்றாள் தெசுலியேர்.

நேசியின் கட்டளைப்படி வேலையாட்கள் அவ்வீட்டைச் சுத்தம் செய்து, கட்டில் ஒன்றும் போட்டுவைத்தார்கள். இரவு வந்தது, தெசுலியேர் அவ்வீட்டிற்குள் சென்று கட்டிலில் நிம்மதியாகப் படுத்துத் தூங்கினாள்.

நடு நிசி! கதவு திறக்கும் சப்தம் கேட்டது. உடனே, "யாரது?" என்றாள் தெசுலியேர்.

ஓர் உருவம் மௌனமாக அவள் முன் வந்தது! கட்டலுக்கருகே இருந்த மேஜை கீழே தள்ளப்பட்டது! கட்டில் திரைகள் சப்தத்துடன் திறக்கப்பட்டன! இதைக் கண்டதும் தெசுலியேர் சிறிது பயந்தாள். யாரேனும் வேண்டுமென்றே கேலிக்காக இப்படிச் செய்கிறார்களோ எனச் சந்தேகித்தாள். உண்மையானால், அவ்வுருவம் தொடக்கூடியதுதானா என்பதை அறியவெண்ணித் தன் கரங்களை அதன் முன் நீட்டினாள். இதைக்கண்ட அவ்வுருவம், கதவுமார்க்கமாகப் போகத் தலைப்பட்டது. உடனே தெசுலியேர், கட்டிலை விட்டிறங்கித் தடவிக்கொண்டே போய், நீண்ட உரோமங்களடர்ந்த அதன் இரண்டு காதுகளையும் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டாள்!

தெசுலியேர் அவ்வுருவத்தின் காதுகளைப் பிடித்துக் கொண்டாலும், அவர் உள்ளம் என்னமோ பயத்தினால் துடித்துக்கொண்டிருந்தது! பாவம். என்ன செய்வாள் தெசுலியேர்! எப்படிப்பட்ட வீரரும் "பேய்" என்றால் ஐம்புலனும் அடங்கி ஒடுங்கிப் போகையில், தெசுலியேர் பயந்தது ஆச்சரியமா?

பேய் விஷயத்தில் நம்பிக்கையற்றவள், பேய்க்கு ஏன் பயப்படவேண்டும் என்று கேட்கலாம். காரிருளில் இன்னதெனத் தெரியாத ஓர் உருவத்தைப் பிடித்தவருக்கு, அவ்வுருவம் இன்னதெனத் தெரியும் வரை—பயம் எழுவது இயல்புதானே.

இந்நிலையிலும் தெசுலியேர், தன் இரு கைகளிலும் ஒன்றை எடுத்து அதன் உருவத்தைத் தொட்டுப் பார்க்கலாமென எண்ணினாள். அப்படி ஒரு கையை எடுத்தால், அவ்வுருவம் பிடுங்கிக்கொண்டு ஓடிவிடுமோ என்னமோ என்ற பயத்தினால், பிடித்த பிடியை விடாமலேயே இருந்தாள். என்ன செய்வது?

உடனே தெசுலியேர் "ஓடிவாருங்கள்! ஓடிவாருங்கள்!! இதோ பேயின் காதுகளைப் பிடித்துக்கொண்டேன்" என்று கூவினாள். அவள் கூச்சல் யாருக்கும் கேட்கவில்லை. அப்படிக் கேட்டிருந்தாலும் வருவதற்கு யாரும் தயாராகவும் இல்லை.

தனது கூக்குரலுக்கு யாரும் வராததைக் கண்ட பயமேலீட்டால் உரக்கக் கத்தினாள்! அலறினாள்!! பதறினாள்!!!

உருவமோ கதவின் பக்கமாக இழுக்கிறது! இவள் பிடித்த பிடியை மட்டும் விடாமல், கத்திக்கொண்டே இருந்

தாள். இக் கூக்குரலைக்கேட்ட இவள் நேசியும், இன்னும் சிலரும் ஓடி வந்தார்கள்.

......"என்ன! உனக்குப் பயமாயிருக்கிறதா? சொல் சொல்!" என்று தூரத்தில் நின்றுகொண்டே கேட்டாள் நேசி.

......"வா வா! பேய் ஓடிவிடும் போலிருக்கிறது" என்றாள் தெசுலியேர்.

நேசியும், அவளோடு வந்த சிலரும் கிட்டி நெருங்க எத்தனித்தார்கள். அச்சமயம் அந்த உருவம் உறுமியதால், அவர்கள் பயந்து பின்தாங்க முயற்சித்தார்கள். இதையறிந்த தெசுலியேர், "வெளிச்சத்தையாவது இங்குக் காட்டுங்கள்" என்றாள்.

அவர்கள் தூரத்தில் நின்றபடியே வெளிச்சத்தைக் காட்டினார்கள். இவ்வளவு பயத்தையும், பீதியையும் உண்டு பண்ணிய உருவம் என்ன தெரியுமா? அதுதான் ஒரு பெரி வெள்ளை நாய்!

அந்த நாய், பீரெனே (Pyrineis) மலைப்பிரதேசத்து நாய். மிகச் சாதுவானது. அதற்கு வெளியில் படுத்துக் கொள்ள விருப்பமில்லாதபடியால், திருட்டுத்தனமாக இவ் வீட்டினுள் வந்து படுத்துக்கொள்வது வழக்கம். (இவ் வீட்டுக்கதவுக்குப் பூட்டுமகிடையாது; தாழ்ப்பாளும் கிடையாது.)

அந்த நாய் எவ்வளவு சாதுவானது என்றால், தான் குற்றத்திலகப்பட்டும் தன்னை விடுவித்துக் கொண்டோடவோ, அல்லது உறுமவோ செய்யாமல் மௌனமாகவே இருந்தது. வெளிச்சத்தின் உதவியால் இத்தகைய "பேயை"க் கண்டதும் எல்லோரும் கலீரெனச் சிரித்தார்கள்!

அப்போது தெசுலியேர் வந்திருந்தவர்ளைப் பார்த்துச் சொல்லுகிறாள்:—"நான் இந்தப் பேயுடனேயே இங்கு இன்றிரவைக் கழிக்கின்றேன்; நீங்கள் போங்கள்" என்று வந்தனங்கூறி அனுப்பிவிட்டு, மறுபடியும் அந்நாயைத் துணையாக வைத்துக்கொண்டே தனது கட்டிலில் படுத்துச் சுகமாக நித்திரை செய்தாள்.

பொழுது புலர்ந்தது. இச்செய்தியைக் கேட்ட கிராம வாசிகள் பலரும் ஆச்சரியத்தோடு, தெசுலியேர் இருக்கும் வீட்டினுள் நுழைந்தார்கள். தெசுலியேர் அவர்களையெல்லாம் பார்த்துச் சிரித்துக்கொண்டே, "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்று சொல்லிவிட்டுத் தனது நேசியுடன் வீடு சென்றாள் என என் தாயார் தனது கதையை முடித்தார்.

பகுத்தறிவு வெளியீடுகள்.

தோழர் ஈ. வெ. ரா. எழுதியவை.

பெண் ஏன் அடிமையானாள்?	ரூ.	0 5 0
பிரகிருதிவாதம்	,,	0 3 0

அறிஞர் சார்ல்ஸ் T. கோர்ஹாம் எழுதியது.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை ...	,,	0 5 0

Hon. பேர்ட்டிரண்ட் ரசல் எழுதியவை.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?	,,	0 3 0
மதம் மக்களுக்குச் செய்த நன்மையென்ன? ...	,,	0 3 0

அறிஞர் இங்கர்சால் எழுதியவை

மதம் என்றால் என்ன?	,,	0 3 0
கடவுள்	,,	0 5 0
நான் சமுசயவாதியானதேன்?	,,	0 3 0
வால்ட்டேர்	,,	0 4 0

அறிஞர் பிரமச்சாரி M. A., L. T., எழுதியவை.

மதமும் விஞ்ஞானமும்	,,	0 3 0
பிரபஞ்ச உற்பத்தி	,,	0 3 0

அறிஞர் ஜோஸப் மெக்கேபி எழுதியது.

மதப்புரட்சி	,,	0 4 0

தோழர் M. சிங்காரவேலு B. A., B. L., எழுதியவை

மெஞ்ஞான முறையும் மூட நம்பிக்கையும் I-ம் பாகம்		0 6 0
ஷை II-ம் பாகம்		0 5 0

அறிஞர் ஜீன் மேஸ்லியர் எழுதியது

பகுத்தறிவு or கத்தோலிக் குருவின் மரண சாசனம்		0 4 0

தோழர் அ. இராகவன் எழுதியது

பெண்ணுரிமையும் மதமும்	,,	0 3 0

அறிஞர் சிவானந்த சரஸ்வதி எழுதியது

ஞானசூரியன் ("நான்காம் பதிப்பு") ...	,,	0 5 0
ஷை காலிக்கோ பயிண்டு ...	,,	0 8 0
மரணத்திற்குப் பின் ஜீவனுண்டா? (ல. ப. நா. பி.)		0 4 0

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

1.	இந்தியாவின் குறைபாடுகள்	0	8	0
2.	லெனினும், மதமும்	0	4	0
3.	பொதுவுடைமைத் தத்துவங்கள்	0	3	0
4.	கடவுளும், பிரபஞ்சமும்	0	4	0
5.	கைவல்யம் அல்லது கல்க்கியாணம்	0	8	0
	(இது சுவாமி கைவல்யம் அவர்களால் எழுதப்பட்டது)			
6.	இராமாயண ஆராய்ச்சி பாலகாண்டம்	0	4	0
7.	,, அயோத்தியாகாண்டம்	0	8	0
8	,, ஆரண்ய காண்டம்	0	4	0
9.	,, கிஷ்கிந்தா காண்டம்	0	4	0
10.	ஞானசூரியன் (நான்காம் பதிப்பு)	0	5	0
11.	தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்	0	3	0
12.	மேயோ கூற்று மெய்யா? பொய்யா? (மூன்றாம் பதிப்பு)	0	3	0
13.	பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	0	4	0
14.	ஈ.வெ.ரா. சீர்திருத்தமகாநாட்டு உபன்யாசம்	0	2	0
15.	அகஸ்தியர் ஆராய்ச்சி	0	2	0
16.	இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு	0	2	0
17.	சுயமரியாதைப்பாடல்	0	2	0
18.	கதர் மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)	0	2	0
19.	சுயமரியாதைத் தாலாட்டு	0	2	0
20.	பர்னாட்ஷா உபந்யாசம்	0	1	0
21.	சோஷியலிசம்	0	2	0
22.	போல்ஷ்விக் முறை	0	1	0
23.	ஈ. வெ. ரா. இலங்கை உபந்யாசம்	0	0	9
24.	கத்தோலிக்கர் வீண் கூச்சல்	0	0	6
25	சமதர்ம உபந்யாசம்	0	0	6
26	சோதிட ஆராய்ச்சி	0	4	0
27.	மனுநீதி விளக்கம்	0	2	0
28.	மறுப்புக்கு மறுப்பு	0	3	0
29	பாரத ஆராய்ச்சி (ஆதிபருவம்)	0	4	0

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmaivilakam Press, Erode.